வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 மார்கழித் திங்கள் 26 ம் நாள் (10—1—1960) ஞாயிற்றுக்கிழமை றஜபு பிறை 10 இதழ் 27

# ஒத்துப்பாடி இனத்தைக் காட்டிக் கொடுத்த முதல்தரமுஸ்லிம் துரோகிகள்

## மாமன் காரியப்பரும் மருகர் முஸ்தபாவும் கேவலம், பதவியை பெரிதென மதிக்கிறார்கள்

## கல்முனைக்கு உரிய கச்சேரி அம்பாறையில் சிங்களத்தில் அரசோச்சும்படி ஆயிற்றே!

## இவர்கள் மீண்டும் பிரதிநிதிகளானால்....?

(சுதந்திரன் நிருபர்)

**கல்முனை, நிந்தவூர் அக்கரைப்பற்றுபோன்ற முழுக்க முழுக்க முஸ்லிம்களும் தமிழர்களும் வாழும் இடங்களுக்கான கச்சேரி அம்பாறையில் நிறுவப்படுகிறது. சிங்களத்திலேயே அங்கு அலுவல்கள் யாவும் நடைபெறும். இதன் பொருள் தமிழ் பேசும் மக்களின் உரிமை பறிமுதலாகிறது என்பதாகும்.**

**இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் கல்முனை, நிந்தவூர் மக்களின் பிரதிநிதிகளாக இருந்த மாமன் காரியப்பரும் மருகர் முஸ்தபாவும் ஆவர். ஒத்துப் பாடி இனத்தைக் காட்டிக் கொடுத்த முதல்தர முஸ்லிம் துரோகிகள் என்று இவர்கள் இருவரும் முஸ்லிம் பொதுமக்களால் தூற்றப்படுகிறார்கள்; சபிக்கப்படுகிறாகள்.**

இலங்கையின் ஜனத்தொகையில் முஸ்லிம்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவில் உள்ளது. நாடெங்கிலும் அவர்கள் வாழ்கிறார்கள். கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையாக வாழ்கிறார்கள். அப்படி இருந்தும்



ஜனுப் முஸ்தபா

அவர்களுக்கு எப்பொழுதும் இருந்துவரும் ஒரு குறைபாடு அவர்களுக்கெனக் கச்சேரி நிர்வாகம் எங்கும் இல்லாததாகும். இலங்கையிலேயே கிடையாது.

### முஸ்லிம் மக்களுக்கு கச்சேரி இல்லை

வடக்கு கிழக்கு மாகாணங்களை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் கச்சேரிகள் இருக்கின்றன. தமிழர் பெருமைப்படலாம். மொனராகலையில் சமீபத்தில் புதிதாக ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். சிங்களவர்கள் உரிமை கொண்டாடலாம். முஸ்லிம்கள்...?

கிழக்கு மாகாணத்தில் இன்னொரு கச்சேரி வரவிருக்கிறது. அதன் திறப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறப்போகிறது. அந்தக் கச்சேரி நிர்வாகத்தின் கீழ்தான் கல்முனை, நிந்தவூர், அக்கரைப்பற்று முதலான முஸ்லிம்கள் பெருந்தொகையினராக வாழும் இடங்கள் வருகின்றன. ஆனால் வேடிக்கை இதுதான். தமிழைப் பேசும் முஸ்லிம் மக்களைத் தன் நிர்வாக ஆணைக்குள் கட்டுப்படுத்தவிருக்கும்



ஜனுப் காரியப்பர்

அம்பாறைக் கச்சேரி சிங்களத்தில் அலுவல்களைச் செய்யப்போகிறது.

### விளக்கம் வேண்டும்

சிங்களத்தில் அலுவல்கள் நடைபெற வேண்டும் என்பதற்காகவே கச்சேரி எங்கோ தொலைதூரத்தில் உள்ள அம்பாறையில் நிறுவப்பட்டிருக்கிறது. முறைப்படி அந்தக் கச்சேரி கல்முனையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அது தான் நீதி, நியாயம். இப்போது தமக்கெனக் கச்சேரி ஒன்று இல்லாமல் இருக்கும் முஸ்லிம் பெருங்குடி மக்களுக்குச் செய்திருக்கக்கூடிய நன்மையும் அதுதான்; ஆனால் நடைபெறவில்லையே! ஏன்?

### அதிபரின் எதிர்ப்பு

ஆராய்ந்து பார்த்தால் எவரும் ஆத்திரம் அடையாமல் இருக்க முடியாது. அம்பாறையில் கச்சேரியை அமைபபதுபற்றி மட்டக்களப்பு அரசாங்க அதிபரி கலந்து ஆலோசிக்கப்பட்டார். அப்போது அவர் அம்பாறையில் அமைக்கும் திட்டம் நியாய வரம்புக்கு அப்பாற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டித் தம் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

அவரை எடுத்தெறிந்து விட்டார்கள். "கல்முனை, பொத்துவில் பிரதிநிதிகளே ஒப்புதல் தந்திருக்கும்போது உங்களுக்கு ஏன் ஐயா வீண் கவலை?" என்று அவரை மடக்கிவிட்டார்கள் மேலிடத்தார்.

பதவியைப் பெரிதென நம்பிய மாமனும் மருமகரும் பழம்பெரும் முஸ்லிம் இனத்தையே காட்டிக்கொடுக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

## புதிய தேர்தல் சட்டங்களில் புரியாத குழப்பங்கள்

## கொடி பிடுங்கும் வேலையில் பொலீஸாரின் ஆவேசம்

**புதிய தேர்தல் சட்டங்கள் பல நன்கு புரிந்துகொள்ள முடியாதபடி குழப்பம் நிறைந்தனவாயிருக்கின்றன. பல சரத்துக்களைப் பொலீஸார் சரிவரப் புரிந்துகொள்ளாமையினால் ஆங்காங்கே அளவுக்கு மீறி அட்டகாசம் புரிந்து வருகின்றனர் என்று தெரிகிறது.**

புதிய தேர்தல் சட்டத்தில் பல சரத்துக்களைப் பொது மக்கள் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இதனால் பல விதமான அனர்த்தங்கள் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் விளைந்து வருவதாக நமக்குச் செய்திகள் எட்டுகின்றன.

உதாரணமாக தேர்தல் காலத்தில் கொடிகள் கட்டும் விஷயத்தை எடுத்துக் கொள்ளலாம். தேர்தல் காலத்தில் தனிப்பட்டவர்களின் கார்களில் கொடிகள் கட்டப்படுவதை தேர்தல் சட்டம் தவிர்க்கவில்லை. தேர்தல் தினத்தன்று மட்டும் கொடி கட்டுவதற்கு வரையறையுண்டு. அன்றைய தினத்தில் அபேட்சகரும், அபேட்சகருடைய ஏஜண்டும் அவரவர் பிரயாணம் செய்யும் கார்களில் கொடி கட்டலாம். மற்றயோர் கட்டக் கூடாது. இப்படிச் சட்டம் கூறுகிறது.

### கொடி பிடுங்கல்

ஆனால் பொலீஸாரோ இந்

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்தி பெற்ற தயாரிப்பு குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சு விடுதல் தடைபடுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில அபாயத்தை ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்—நுரை—போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சுவலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு; தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல், காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரீச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்:

# பூனைக்கு இரவில் பார்வை கிடைப்பது எப்படி?

## ஒளியியல் ஆராய்ச்சி அதற்கு விடை தருகிறது

## எக்ஸ் கதிர் கண்டுபிடிக்கப்பட்ட விதமும் இன்றுலகில் அதன் பயனும்

### விஞ்ஞானி ரென்ஜனை யாரும் மறக்க முடியாது

அல்பிறெட் நோபெல் என்பவர் சுவீடின் தேசத்துப் பொறியியல் நிபுணரும் இரசாயன விற்பன்னரும் ஆவர். அவர் தமது டைனமைட் என்னும் மிக்க சக்திவாய்ந்த வெடி மருந்துக் கண்டுபிடிப்பால் பெருஞ் செல்வம் ஈட்டினுர். அந்திய காலத்தில், பாரத தேசத்து அசோக மன்னன் போல் யுத்தங்களில் தமது கண்டுபிடிப்பால் மாண்ட மக்களின் எண்ணிக்கையை நினைந்து வருந்தி, தமது செல்வத்தின் பெரும் பாகத்தை மனித சமுதாயம் உய்யும் பொருட்டு உபயோகிக்க திட்டம் ஒன்றை வகுத்தார்.

#### பரிசுத் திட்டம்

இத் திட்டத்தின்படி பௌதிக, இரசாயன, மருத்துவ, இலக்கியத் துறைகளில் அவ்வப்பொழுது மிகச் சிறந்து விளங்கும் மேதாவிகளுக்கு ஆண்டுதோறும் முறையே ஒரு பரிசு அளிக்கப்படும். முதன் முதலாக இப்பரிசைப் பெற்றவர் கொன்ருட் வில்லியம் ரென்ஜன் ஆவர். ரென்ஜனைப் பற்றியும் அவரது வெற்றிக்குக் காரணமாகவிருந்த எக்ஸ் கதிர் என்ற கண்டுபிடிப்பைப் பற்றியும் அறியப்புகுமுன் அக்காலத்திய பௌதிகத்தின் நிலைமையைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

#### விஞ்ஞானப் பிரிவுகள்

19-ம் நூற்றுண்டின் இறுதியில் பௌதிகவியல் ஓர் உன்னத நிலையை அடைந்திருந்தது 17-ம் நூற்றுண்டில் சர் ஐசாக் நியூட்டன் இட்ட விதிகளை அத்திவாரமாகக் கொண்டு அவருக்குப்பின் தோன்றிய விஞ்ஞானிகள் அவ்வத்திவாரத்தின் மேல் சிறந்தவொரு கட்டடத்தை அமைத்தார்கள். இக்கட்டடம் பௌதிகவியலின் பல பகுதிகளுக்கு இடம் அளித்தது. இயக்கவிசையியல் (Dynamics), நிலையியல் (Statics), வானியல் (Astronomy), வெப்பவியல் (Heat). ஒளியியல் (Optics), ஒலியியல் (Sound) மின்னியல் (Electricity), மின் காந்தவியல் (Electromagnetic Theory) என்ற இயல்களெல்லாம் ஒரு குடைக்கீழ் வளர்ந்து 19-ம் நூற்றுண்டின் இறுதியில் நிறைவு பெற்று விளங்கின.

#### முற்றுப்பெருத நிலைமை

பிரபஞ்சத்தில் தோன்றும் நிகழ்ச்சிகளெல்லாம் - அதாவது அக்காலம் வரைக்கும் அறிந்திருந்த நிகழ்ச்சிகளெல்லாம் - நியூட்டனின் விதிகளால் விளக்கிக் கூறப்பட்டன. ஆகவே விடையங்களெல்லாம் அறிந்தாகிவிட்டன. இனி கண்டுபிடிப்புக்கு இடமில்லை என்ற நம்பிக்கை விஞ்ஞானிகளிடம் பரவி வந்தது. ஆனல் இக் கோட்பாடு நிலைத்திருக்கவில்லை - காரணம் கலையியல் 19-ம் நூற்றுண்டின் இறுதியில் அடைந்த முன்னேற்றமும் அதன் விளைவாக நாம் அறிய வந்த அற்புதமான நிகழ்ச்சிகளுமே.

> எழுதியவர்:
> பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம்

#### வாயுக்களின் மின்கடத்தும் திறன்

இந்நிகழ்ச்சிகளுள் மிகவும் முக்கியமானது வாயுக்களின் மின் கடத்தும் திறன். திடப் பொருள்களுக்கு — சிறப்பாக உலோகங்களுக்கு மின் கடத்தும் திறன் உண்டு. இது எல்லோரும் அறிந்த விடயமே. மின்வலு நிலையங்களிலிருந்து கம்பி மூலமாக வல்லவா மின்னேட்டம் செலுத்தப்படுகிறது. மின கடத்தும் திறன் சில திரவப் பொருள்களிடம் கூட, சிறப்பாக அமிலங்களுள் அல்லது உப்புக்கரைச்சலுள், நாங்கள் காண்கிறோம்.

ஆனல் மின்னலைத்தவிர வாயுக்களின் மின் கடத்தும் திறனைப் பற்றி விஞ்ஞானிகளுக்கு யாதொன்றும் தெரிந்திருக்கவில்லை. அவர்களுடைய பரிசோதனைக் கூடங்களில் இவ் விடயம் ஆராயப்படவுமில்லை. ஒரேயொரு செய்தி அக் காலத்தில் தெரிந்திருந்தது - அதாவது வளிமண்டல அமுக்கத்திலுள்ள வாயுவொன்று சாதாரண வோல்ட் தொகையால் மின் செலுத்தத் தூண்டப்படமாட்டாது — மின்னலிலோ வோல்ட் தொகை மிகவும் அசாதாரணமானது.

#### இருளில் பார்வை

இன்னும் ஒரு விடயம், இதுவும் முக்கியமானவொரு விடயம். இதைப் பற்றியும் கூறி விடுவோம். பின்னர் எக்ஸ் கதிரைப்பற்றிப் பார்க்கலாம். பிரபஞ்சத்தில் நிகழும் தோற்றப்பாடுகளைச் சிறப்பாக பார்வை மூலமாக நாங்கள் அறிகிறோம் பார்வைக்கு ஒளி அவசியம். ஒளியில்லையேல் பார்வையும் இல்லை. ஆனல் சில பிராணிகளுக்கு, முதன்மையாக பூனைகளுக்கு, நாய்களுக்கு, இருட்டில் பொருள்கள் தோன்றுகின்றனவல்லவா? இதற்குக் காரணமென்ன?

சூரியன் தரும் ஒளி ஒரு கலப்பொளி என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதாவது வெள்ளொளி பல நிறமுள்ள ஒளிகளின் கூட்டால் உண்டாகிறது. இத் திறங்கள் முறையே சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம். ஊதா ஆகும். வெள்ளொளியின் கூறுகளைச் சில கருவிகளின் மூலமாக ஒரு நிற மாலையாக வெவ்வேறுகப் பிரிக்கலாம்.

#### ஒரு கேள்வி

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. ஊதாவுக்கு மேலேயும், சிவப்புக்குக் கீழேயும் ஆனல் கண்ணுக்குப் புலப்படாததுமான ஒளியில்லையா? இருக்கவேயிருக்கிறது. முந்தியதை நாங்கள் ஊதா கடந்த ஒளியென்றும் பிந்தியதை செந்நிறக் கீழ் ஒளியென்றும் சொல்கிறோம். முந்தியது ஒளிப்படம் பிடிப்பதற்கு உபயோகப்படுகிறதென்றும் பிந்தியது சில பிராணிகளின் பார்வைக்குக் காரணமாகவிருக்கிறதென்றும் தெரிய வருகிறது. செந்நிறக் கீழ் ஒளியின் கீழ் ரேடியோ அலைகள் விளங்குகின்றன என்றும் எங்களுக்குத் தெரியும். ஆனல் ஊதா கடந்த ஒளிக்கு அப்பால்? இக்கேள்விக்கு விடையளித்தவர் [illegible]

#### [illegible]

19-ம் நூற்றுண்டின் இறுதியில் கலையியல் ஒரு முன்னேற்றம் அடைந்தது என்று முன்னர் கூறினேம் அல்லவா? இது காரணமாகப் பலப் பல புதுக் கருவிகள் உண்டாக்கப்பட்டன இவற்றுள் மிக முக்கியமானவை — குழாய் ஒன்றில் இருக்கும் வாயுவை மிகவும் தாழ்ந்த அமுக்கத்துக்குக் கொண்டு வரும் பம்புகளும், மின்னுக்கும் ஒளிக்கும் உணர்ச்சியுள்ள ஒளிப் படத் தட்டுகளும், உணர் கருவிகளுமே. இக் கருவிகளைக் கொண்டு வாயுக்களின் மின் கடத்தும் திறனை விஞ்ஞானிகள் தமது பரிசோதனைக் கூடங்களில் ஆராயத் தொடங்கினர்கள். சாதாரண வோல்டளவின் கீழ் சாதாரண அமுக்கத்தில் இருக்கும் வாயுவொன்று மின் கடத்தமாட்டாது என்று முன்னமே கூறினேம். ஆனல் இப்பொழுது புதிதாக கிடைத்திருக்கும் பம்பு மூலம் குழாயொன்றிலுள்ள வாயுவின் அமுக்கத்தைக் குறைக்கலாம். விஞ்ஞானிகள் இதைச் செய்தார்கள், செய்து மிக அற்புதமான தோற்றப்பாடுகளைக் கண்டார்கள்.

#### பரிசோதனையில் நடந்தது

பரிசோதனைக் குழாய்க்கு இரண்டு மின்வாய்கள் உண்டு. ஒன்று மின்னேட்டத்தைக் குழாயினுள் புகுத்தவும் மற்றது மின்னேட்டத்தைக் குழாயிலிருந்து வெளியேற்றவும் உதவுகின்றன. இவை முறையே நேர் மின்வாயென்றும் எதிர்மின்வாயென்றும் அழைக்கப்படுகின்றன. குழாயிலிருக்கும் வாயுவை தாழ்ந்த நிலைக்கு நொய்தாக்கியபின்பு குழாயினுள் சிறந்தவொரு ஒளி தோன்றி அதனுள் பரவத் தொடங்கிற்று இந் நொய்தாக்கல் அதிகரிக்க இந்த ஒளி மங்கி முடிவில் மறைந்தது.

#### இலெக்றன்கள்

ஆனல் குழாயின் சுவர்களே இதற்கு விலக்கு. சுவர்களின் சில பாகங்கள், சிறப்பாக குழாயின் எதிர்மின்வாய்க்கு முன்னல் இருக்கும் சுவர், பச்சை நிறத்துடன் பிரகாசிக்கத் தொடங்கிற்று. ஜே. ஜே தொம்சன் என்ற பிரசித்தி பெற்ற விஞ்ஞானி இப் பிரகாசத்தின் காரணத்தை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார். அவரது துணிபு என்னவென்றல் குழாயினுள் மிக உயர்ந்த வெறுநிடம் உண்டாகிய பின்பு குழாயின் மின் வாய்களுக்கிடையில் உபயோகித்த மின்னமுக்கத்தால் தூண்டப்பட்டு எதிர்மின்னாவும் துணிக்கைகள் எதிர் மின்வாயிலிருந்து வெளியேறுகின்றன. வெளியேறி குழாயின் சுவரின் மோதும் பொழுது இச் சுவரை பச்சை நிறத்துடன் பிரகாசிக்கத் தூண்டுகின்றன. இலெக்றன்

(15-ம் பக்கம் பார்க்க)

## வேண்டுகோள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப் பெருமளவு நிர்ணயிக்கும் முறையில் எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையும். ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் மக்கள் தமது குடியுரிமை, மொழியுரிமை தாம் வழி வழி வாழும் இடவுரிமை ஆகிய அனைத்திற்கும் மேலாக கூட்டாட்சி அடிப்படையில் தமக்கென ஒரு தமிழரசை நிறுவும் உரிமைக்கு ஓர் உறுதுணையாய்—ஓர் அடித்தளமாய் இத் தேர்தல் அமையும். இந் நல்வாய்ப்பினை நாம் உண்மையாகப் பெற விருப்பின் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் தெரிவு செய்ய வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் ஒரே கொள்கை அடிப்படையில், ஒரே இயக்கத்தைச் சார்ந்து ஒரு கொடிக்கீழ் ஒன்றுபட்டு நின்று போர்க்குரல் எழுப்பின் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை எவருமே புறக்கணிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு முக்கிய குறிப்பை கூறியே யாக வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருக்க விரும்பின் ஓர் அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும் எமக்கின்று ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு என்னவெனில் தமிழரில் சொந்த வருமானம் உள்ளவரிடம் இலங்கையில் தமிழ்ப் பேரினம் தனது தனித்தன்மையை இழந்து அழிந்துபோகாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம்—அதற்கான உணர்வு போதியளவு இல்லை. அதே நேரத்தில் தமிழ்ப் பேசும் இனத்தின் நலனிலும் நல் வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ள ஆண்கள் பெண்கள்—இருபாலாரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்திற்காக தமது முழு நேரத்தையும் செலவு செய்ய பண பலம் இல்லை. அதாவது வருமானம் இல்லை.

இந் நிலையில் தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணியில் ஈடுபாடும் கொண்டவர்களையே அபேட்சகர்களாய்த் தெரிவு செய்ய வேண்டும். அத்தோடு அவர்களுக்காக தேர்தல் பிரசாரம் செய்து பணமும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனத்திடம் நிதி உதவியையும் மற்றும் இன்னோரன்ன உதவிகளையும் வேண்டி நிற்கின்றது. கட்டுக்கோப்போடு கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இயன்றவரை பணியாற்றியுள்ளது. வருங்காலத்திலும் அதன் பணி தொடர்ந்து சிறப்புற வேண்டின் ஈழத்தில் தமிழ் பேசும் இனம் தொடர்ந்தும் தமிழ் பேசும் இனமாகவே வாழ வேண்டின் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தாராளமாக நிதி தந்து உதவுங்கள் என்று வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:
16. அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு - 3.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அ. பாலசிங்கம், தெல்லிப்பளை**

கே: தனிச் சிங்களத்தை அரசாங்க மொழியாக ஏற்றுக்கொண்டுள்ள கொம்யூனிஸ்டுகள் எந்த முகத்தோடு தமிழ்ப் பேசும் மக்களிடம் போய் வாக்குக் கேட்பார்கள்?

ப: அதில் என்ன சந்தேகம்? அண்ணுந்த முகத்தோடு தான் போவார்கள். சந்திர மண்டலத்தை விட்டால் அவர்களுக்கு வேறு கதி...?

ஃ

**கு. குணரத்தினம், பருத்தித்துறை**

கே: கோபமுள்ள மனைவியைச் சமாதானப்படுத்தி சாந்தி அளிப்பது எப்படி?

ப: அதாவது அவருடைய சூட்டைத் தணிக்க என்ன வழி கேட்கிறீர்கள்—இல்லையா? இது தெரியாதவன் கணவனாக இருக்க லாயக்கற்றவன் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஃ

**இளங்குமரன், யாழ்ப்பாணம்**

கே: வாலிபம் என்றால் என்ன?

ப: மனிதனின் வாழ்க்கையில் வசந்தகாலம். கல்யாணம் என்ற பூட்டப்பட்ட கோட்டைக்குள் எப்படியும் நுழைந்துவிடத் துடிக்கும் பருவம்.

ஃ

**ஆ. தங்கவேலாயுதம், வல்வெட்டித்துறை**

கே: எங்கள் தொகுதியில் (பருத்தித்துறை) சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் பெண்மணியை திரு. சுந்தரலிங்கம்தான் நிறுத்தியிருக்கிறாராம். கட்டுப் பணத்தையும் அவரே தான் கட்டியிருக்கிறாராம். எதற்காக என்று நினைக்கிறீர்கள்?

ப: வவுனியாவில் தமிழரசுக் கட்சி சார்பில் திரு. சுப்பிரமணியம் போட்டியிடுவதால் தமக்கு அங்கே வரவிருக்கும் ஆபத்தை முன் கூட்டி அறிந்து கொண்டதன் பேரில் பருத்தித்துறையில் ஊது குழல் தேடியிருக்கிறார், அவ்வளவுதான். பருத்தித்துறையில் கட்டிய காசு திரும்பக் கிடைக்குமானால் அதே பெரிய காரியம்.

ஃ

**ஆ. சிவநேசச்செல்வன், தெல்லிப்பளை**

கே: செல்வநாயகத்தின் மூளையையும் சுந்தரலிங்கத்தின் மூளையையும் ஒப்பிடுங்கள், பார்க்கலாம்.

ப: இரண்டும் இணையற்ற மூளைகள். ஆனால் முன்னது நிதானமாக வேலை செய்வது; பின்னது தீவிரமாகச் செய்வது. நிதானமாக வேலை செய்யும் மூளை இன்றும் நல்லபடியாக இருக்கிறது. மற்றது கலங்கிப் போய்விட்டது.

ஃ

**எஸ். பாண்டியன், கண்டி**

கே: அகில இலங்கை தி. மு. கழகம் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு அன்னாசிப்பழம் சின்னமாகப் பெற்றும் பொதுத் தேர்தலுக்கு ஏன் ஒரு அபேட்சகரைக்கூட நிறுத்தவில்லை?

ப: ஆள் கிடைக்க வேண்டுமே! பணம் இருக்க வேண்டுமே! அந்தக் கட்சியென்ன, தனிப் பெருந் தலைவருடைய தமிழ்க் காங்கிரசுக்கு கூட 8ப் பேரைத்தானே நிறுத்த முடிந்தது. இலங்கை ஜனநாயக காங்கிரஸ் எத்தனையோ கப்ஸாக்கள் விட்டு விட்டுக் கடைசியில் 5 பேரைத் தானே நிறுத்தியிருக்கிறது. எட்டப்பர் தமது முன்னணி சார்பில் தம்மோடு இன்னுமொருவரைத்தானே சேர்த்துக் கொள்ள முடிந்தது. ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணியின் எல்லாம் அவராக விளங்கும் சுந்தரருக்கு அது கூட முடியவில்லையே! தாம் மட்டும் தமது கட்சி சார்பில் தேர்தலில் நிற்கிறார். அகில இ. தி. மு. க அந்தோனி முத்துவால் அப்படிச் செய்கூட முடியவில்லை, பாவம்! பாடுபட்டார், பலன் கிடைக்கவில்லை.

ஃ

**என். கே. ராமனாத், மன்னார்**

கே: கலைக்கும் சினிமாவுக்கும் என்ன வித்தியாசம்?

ப: கலை கடல் என்றால் சினிமா அதில் ஒரு அலை.

கே: இலங்கையில் நடிப்புக்கலை எப்படி இருக்கிறது?

ப: தளர் நடை போட்டு முன்னேறுகிறது.

ஃ

**தே. குணசேகரி, கொழும்பு**

கே: எங்கள் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும் தங்களால் தங்கள் மனைவியின் கையிலிருக்கும் அகப்பைக்குப் பதில் சொல்ல முடியுமா?

ப: முடியாது என்பதனால் தானே அவளுக்கு அகப்பைக்குப் பதிலாகப் பெரிய 'ஸ்பூன்' அதாவது கரண்டி வாங்கிக் கொடுத்திருக்கிறேன்.

---

**மிஸ்டர் குயுக்தியார்**

C/o சுதந்திரன்.

த. பெ. 1183

கொழும்பு—12

---

**க. சுப்பிரமணியம், காரைநகர்**

கே: தமிழரிடம் ஒற்றுமை ஏற்படுத்துவதற்குத்தான் தாம் தேர்தலில் இறங்கியுள்ளதாகத் திரு. தம்பி ஐயா அறிவித்திருக்கிறாரே இவர் முன்னர் பாராளுமன்றத்தில் இருந்து என்ன செய்தார்?

ப: உருப்படியாக ஏதாவது செய்திருந்தால் அவரே சொல்லித் தம்பட்டமடித்திருப்பாரே! அதோடு 1956 தேர்தலிலும் அவர் மண் கவ்வியிருக்கமாட்டார். ஒத்துழைப்பாளராக அப்போது இருந்து கையுயர்த்தினார். அதனால் தமிழ் பேசும் மக்களால் உதைத்துத் தள்ளப்பட்டார். இப்போது அதை மறைக்க ஏதாவது சொல்ல வேண்டுமே என்பதற்காக ஒற்றுமைப் பல்லவி பாடுகிறார். பாடட்டுமே!

ஃ

**யோ. அமலதாஸ், திருகோணமலை.**

கே: உங்கள் மூளைக்கு வேலை கொடுக்கும் எங்களை நீங்கள் மனதாரச் சபிப்பீர்களா, அல்லது வாழ்த்துவீர்களா?

ப: இப்படியான வெறுங் கேள்விகள் வருமானால் மூளைக்கு வேலையா? சை! அவற்றிற்காக வாழ்த்தா? அட கஷ்டமே!

ஃ

**ஏ. சோதி டிக்கோயா.**

கே: தமிழ் நாட்டில் தி. மு. கழகம் இதுவரை சாதித்தது என்ன?

ப: இளஞ் சந்ததியினரின் இணையற்ற சக்தியை அணைவருக்கும் உணர்த்தியது அதன் சாதனைகள் [illegible] தலையாயது. அடுத்த [illegible] கத் தமிழ் நாட்டு அரசியலில் சூட்டையும் சட்டசபையில் சுறுசுறுப்பையும் ஏற்படுத்தியுள்ளதைச் சொல்லலாம். இன்று எந்த ஒரு பகுதியிலாவது ஒரு இடைத் தேர்தல் நடைபெறுகிற தென்றால் அதில் தி. மு கழகம் போட்டியிடவில்லையானால் ஏனைய பகுதியில் உள்ளவர்களுக்கு அப்படி ஒரு இடைத்தேர்தல் நடப்பதாகவே பெரும்பாலும் தெரிவதில்லை. அந்த அளவுக்குவந்து விட்டது நிலைமை.

ஃ

**பொ. கோபாலகிருஷ்ணன், திருநெல்வேலி.**

கே: மலர்களில் அல்லாமல் மொட்டுக்களிலும் சில வண்டுகள் மொய்ப்பதேன்?

ப: கேள்வியில் கடைசியில் இருக்கும் அந்தத் தேனுக்காகத்தான். மொட்டின் முகை அவிழும்வரை காத்திருக்கப் பொறுமை இல்லாத வண்டுகள் தாம் மொட்டை முரட்டுத்தனமாகக் குத்திக் கிழித்து புதுத் தேனைச் சுவைக்கப் பிரயத்தனப் படுகின்றன. இதனால் மொட்டு கெட்டு விடுகிறது; வண்டும் அவசரப் பட்டு விட்டோமே என்று வேதனைப்படுகிறது; ஏமாற்றம் அடைகிறது.

ஃ

**சி. சோதிநாதன், கொழும்பு.**

கே: பொதுத் தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிட ஒரு பெண்மணி துணிந்து முன்வந்திருப்பது பாராட்டுக்கு உரியதல்லவா?

ப: அதில் சந்தேகம் என்ன? மொழி அடிப்படையில் பார்த்தால் சுமார் 75 000 வாக்காளர்கள் உள்ள கொழும்பு மத்திய தொகுதியில் சிங்களம் பேசும் மக்களைக் காட்டிலும் தமிழ் பேசும் மக்கள் 2,000 பேர் அதிகப்படியாக வாழ்கிறார்கள். அதாவது சிங்களம் பேசுவோர் 36,000 பேர்; தமிழ் பேசுவோர் 38,000 பேர். தமிழ் பேசுவோரில் 28 000 பேர் முஸ்லிம்கள். ஏனையோர் (10 000 பேர்) இந்திய வம்சாவளித் தமிழரும் இலங்கைத் தமிழரும் ஆவர்.

தமிழர்கள் இவ்வளவு பெருந்தொகையாக வாழும் தொகுதியில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்க ஒரு தமிழர் கூட முன்வராமல் இருப்பது சமூகத்துக்கே அவமானம் என்று திருமதி வசந்தா அப்பாத்துரைக்குத் தோன்றியிருக்க வேண்டும். அதனால் தாமே துணிந்து இறங்கிவிட்டார் பாராளுமன்றத் தேர்தலில் தலைநகரில் போட்டியிடும் முதல் பெண்மணி என்ற பெருமைக்கும் ஆளாகிவிட்டார்.

ஃ

**லே. த. பிள்ளை, இங்கிரியாகலை**

கே: என் காதலி தினமும் பணம் கொடு, பணம் கொடு என்று என்னைச் சித்திரவதை செய்கிறாள். என்னிடமோ ஒரு சதம் கூடக் கிடையாது என்ன செய்யலாம்?

ப: சொல்லிவிட வேண்டியதுதான், என்னிடம் உள்ள தெல்லாம் காதல் தான், அந்த வேண்டுமானால் டன் [illegible] பிட்டு விட்டு தப்பினேன் பிழைத்தேன் என்று கம்பி நீட்ட வேண்டியதுதான் தம்பி.

ஃ

**செல்வி புவனேஸ்வரி தருமலிங்கம், கொக்குவில்**

கே: மிஸ்டர் குயுக்தியாரே, பெண்களுக்கு அழகுக் கலை அவசியமா, அல்லது அருங்கலை அவசியமா?

ப: இரண்டையும் விட குடும்பக்கலைதான் தற்காலப் பெண்களுக்கு மிக மிக அவசியம்.

ஃ

**மீ. ப. தாமோதரம், காங்கேசன்துறை**

கே: இம் முறை திரு. சு. நடேசபிள்ளை தேர்தலில் போட்டியிடவில்லையே, ஏன்?

ப: அவர் வோட்டுக் கேட்கப் போனால் வேட்டல்லவா வைக்கக் காத்திருந்தார்களாம் தமிழ் பேசும் மக்கள். அதனால் கௌரவமாக அந்த எண்ணத்தையே விட்டு விட்டார்.

ஃ

**வ. தனபாலசிங்கம், வரணி**

கே: அண்ணா தாங்கள் அதிகமதிகம் பெண்களின் கேள்விகளுக்கே பதில் கொடுப்பதாக ஒரு புகார்! உண்மைதானா?

கே: பெண்கள் பெற வேண்டியவர்கள்; ஆண்கள் கொடுக்க வேண்டியவர்கள். இதுதானே தம்பி இயற்கை!

---


# ஆஸ்த்மாவால் அவதிப்படும் அன்பர்களுக்கு....

ஆஸ்த்மா என்ற தொய்வு ஏற்படுவதற்கு மார்ச்சளி, மூக்கடைப்பு, இருமல், காலநிலை, மூச்சடைப்பு, மூத்திரக் கோளாறுகள் என்பன போன்ற பல காரணங்கள் உண்டு காரணம் எதுவானலும்........................

## ஆஸ்த்மடிக்கா

வியாதியைப் பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்திரவாதம்.

பாவித்த அன்பர்கள் கூறுவதைக் கேளுங்கள். வணக்கத்துக்குரிய பிதா தாமஸ் (டிரெக்டர் ஜெனரல்) ரோசரி ஆஸ்ரமம் வாசவிளான் எழுதுகிறார்.

தங்களது ஆஸ்த்மடிக்காவைப் பாவித்ததில் என் வியாதியஸ்தர் பெரிதும் குணமடைந்துள்ளார் என்பதை—நன்றியுடன் தெரிவிக்கிறேன்—என் வாழ்த்துக்கள்— ஆஸ்த்மடிக்காவுக்கு

Rev. Fr. B. A. Thomas (O. M. I.)
Rosary Asthrama,
VASAVILAN.

எனக்கு வயது 50 க்கு மேலாகிறது—கொழும்பிலுள்ள பெரிய கம்பெனி ஒன்றில் சித்திர விபிகையாக Draughtsman) வேலை பார்க்கிறேன்.

சென்ற 20 வருடகாலமாக ஆஸ்த்மா—மாரடைப்பு, மார்ச்சளி, இரவில் தூக்கமின்மை இவைகளால் பெரும் கஷ்டப் பட்டுள்ளேன். நான் காணுத டாக்டர்கள் இல்லை. எவ்வளவோ ஊசிகள் போட்டும் பலனில்லாமல்இருந்த எனக்கு ஆஸ்த்மடிக்கா 3 பாட்டில்கள் பூரண குணமளித்துள்ளது. என்பதை கடவுள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்,

எஸ். ஏ. தோமஸ்,
87, தெலன்கபாத ரோட்,
வத்தளை.

S. A. Thomas,
87, Telangapatha Road,
WATTALA.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, இருமல் இவைகளுக்கு ஆஸ்மடிக்கா ஒரு நவீன சஞ்சீவி.

3 அல்லது 4 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண குணமடையும் என்பது உத்திரவாதம்.

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
(மிக உபாதைத் தரக்கூடிய ஆஸ்த்மாவுக்கு)

வி. பி. பி. தனி

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

## மொடார்ன் கிளினிக்,

255, காலி ரோட்,
பம்பலப்பிட்டிய கன்வன்ட் எதிரில்
பம்பலப்பிட்டிய
கொழும்பு—4.

கடுகண்ணாவையில் கிடைக்குமிடம்:

**டி. பி. குஞ்சிமூசா & கோ,**
கடுகண்ணாவை.

சம்மாந்துறையில் கிடைக்குமிடம்:

**எம். வெள்ளத்தம்பி,**
புடவை வியாபாரம்,
3-ம் குறிச்சி
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

**"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"**

## மணிவண்ணன் -கலையரசன் உரையாடல்

மணிவண்ணன்: அண்ணு! எங்கே உங்களை இந்தப் பக்கத்திலே பல நாளாகக்காணவில்லை. கேட்டீர்களா புதினத்தை? தைப்பொங்கல் விழாவுடன் தமிழியக்க விழாக்களும் நடத்துதற்குப் பல ஊர்களிலே ஒழுங்குகள் செய்கிறார்களாம். கொழும்புத் தமிழ்ச் சங்கம், பத்தவேனிக் கிராமாபிவிருத்திச் சங்கம், இளந் தமிழர் இயக்கம் முதலியனவும் முயல்கின்றன.

கலை அரசன்: ஆம், தம்பி தமிழியக்கம் இப்பொழுது சிலகாலமாக மும்முரமாக எங்கும் பரவி வருகிறது—தமிழியக்கத்தினர் இலங்கையிலே மட்டுமன்றி உலகமெங்குமுள்ள தமிழ் மக்களைத் தைப்பொங்கல் தொடக்கம் ஒருவார காலத்துக்குத் தமிழியக்க வாரம் கொண்டாடும்படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

மணி: ஏன் அண்ணு தமிழியக்க வாரத்தைக் கொண்டாட வேண்டும்?

கலை: மூலைமுடுக்கெல்லாம் தமிழியக்க விழாக் கொண்டாடினுல்தான் நம் மக்களிடையே தமிழுணர்ச்சி உண்டாகும். தமிழர்களே தமிழைப் போற்றுமல்—மதியாமல் வாழும் இழிநிலை ஒழியும். எல்லா அலுவல்களையும் தமிழில் செய்யுமாறு தமிழர்களைத் தூண்டுதற்கு வாய்ப்பு உண்டாகும்.

மணி: இப்பொழுது தமிழர்கள் தமிழிலே ஒன்றுஞ் செய்வதில்லையா அண்ணு?

கலை: பலர் தமிழிலே ஒன்றுஞ் செய்வதில்லை.

மணி: நான் தமிழிலே தானே அண்ணு கடிதம், முகவரி முதலியன எழுதுகிறேன்.

கலை: உனக்கு ஆங்கிலந் தெரியாதபடியால் தமிழிலே எழுதுகிருய் தம்பி. ஆங்கிலம் படித்த நம்ம பெரிய புள்ளிகள் எல்லாம் தமிழை ஒதுக்கிவிட்டு ஆங்கிலத்திலே தான் எல்லாம் செய்கிருர்கள்.

மணி: மேடைகளிலே பலர் ஏறி நின்று "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று முழங்குகிருர்களே! இவர்கள் ஏன் தமிழுக்கு முதன்மை கொடுப்பதில்லை?

கலை: தம்பி! உண்மையைச் சொன்னுல் இவர்களிலே பலர் சுயநலப் புலிகள். கொள்கை அற்றவர்கள். தமிழும் தெரியாதவர்கள்; தமிழ் படிக்கவும் விருப்பமில்லாதவர்கள்.

மணி: தமிழ் தெரியாதவர்கள் தமிழுக்கு முதன்மை கொடுக்காதவர்கள்—தமிழுக்கும் தமிழருக்காகவும் போராட முடியுமா?

கலை: முடியாதுதான் தம்பி. அதனுலேதான் நாம் இன்னும் நம் உரிமைகளைப் பெருமலே திண்டாடுகிறோம். இவர்கள் மட்டுமா? தமிழாலே பிழைக்கிறவர்கள்கூடத் தமிழைப் போற்றுமலேதான் வாழுகிருர்கள். அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டை நடத்த ஒழுங்கு செய்கிறவர்கள்கூட ஆங்கிலத்திலே தான் பல அலுவல்களைச் செய்கிருர்கள் என்ருல் நம் அடிமைப் புத்தியைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?

மணி: அப்படியானுல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை ஆங்கில எழுத்தாளர் சங்கம் என்று மாற்றி வைத்தால் நல்லதல்லவா? அண்ணே! தமிழ் தெரியாதவர்கள் தமிழை ஒதுக்கினுலும் தமிழாலே பிழைக்கிறவர்கள் ஏன் இப்படித் தமிழை ஒதுக்குகிருர்கள்? மூலையில் ஒடுக்குகிருர்கள்; ஒழித்துக்கட்டுகிருர்கள்.

கலை: இதற்குப் பல காரணங்களுண்டு. தமிழாசிரியர்கள் முதலானேர் ஆங்கிலத்திலே கையெழுத்திடுவது முகவரி எழுதுவது, முதலியவற்றுக்குத் தாழ்வு மனப்பான்மையும் உறுதியான கொள்கை இன்மையும் காரணங்களாகும்.

மணி: தமிழாசிரியர்களும் தமிழை ஒதுக்குகிருர்களா? இவர்களுக்குத் தன்மானம் இல்லையா?

கலை: சமுதாயத்திலே இன்றும் ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் போலி மதிப்பு இருக்கிறது. எங்கள் பெண்பிள்ளைகள்கூடக் காற்சட்டை உத்தியோகத்தரைத்தான் மணஞ்செய்ய விரும்புகிருர்கள். தமிழாசிரியர்கள் தமிழ் தெரியாதவர்களுக்குக் கையாட்களாக இருந்தாற்போதும் என்று எண்ணுகிருர்களே ஒழியத் தாம் முதலாட்களாகஇருக்க முயல்கிருர்களில்லை.

மணி: அரசாங்க உத்தியோகத்தர் தமிழிலே ஒன்றுஞ் செய்யப்படாதாம். இப்படி கொழும்பிலிருந்து வந்த ஒருவர் சொன்னுர் அண்ணே! இது மெய்தானு?

கலை: இது சுத்தப் பொய்யடா தம்பி. யாரோ உன்னை ஏமாற்றி இருக்கிருர். யாரடா அந்த ஆசாமி?

மணி: அவர் கொழும்பிலே தமிழ் மொழிபெயர்ப்பாளராயிருக்கிருர் அண்ணே. ஊருக்கு வந்திருந்தபொழுது திருகோணமலையிலுள்ள ஒரு தமிழருக்குத் தந்தி அனுப்பினுர். தந்தியை ஆங்கிலத்திலே எழுதினுர். நான் தமிழிலே எழுதினுல் என்ன என்றேன். அப்பொழுது தான் அவர் இதை அவிழ்த்து விட்டார்.

கலை: அரசாங்க உத்தியோகத்தர் தங்களுடைய அரசாங்க அலுவல்களை மட்டும் தான் ஆங்கிலத்திலே செய்தல் வேண்டும். சொந்த அலுவல்களை எல்லாம் தமிழிலே செய்யலாம்.

மணி: எல்லாரும் அப்படிச் செய்கிருர்களா அண்ணே?

கலை: அட தம்பி அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிருய்; தமிழிலே முகவரி எழுதினுலுங்கூடச் சிங்களவருக்குப் பிடிக்காது என்று பயந்து ஆங்கிலத்துக்கு அஞ்சலி செய்யும் அரசாங்க உத்தியோகத்தர்கள்தான் நம்மிடையே தொகையாகவுளர்.

மணி: நாம் நம்முடைய தாய்மொழியிலே நம்முடைய சொந்த அலுவல்களைச் செய்ய ஏன் பயப்பட வேண்டும் அண்ணே?

கலை: தாய்மொழி பெரிதா வயிற்றுப் பிழைப்புப் பெரிதா? மானம்போனுலும் உத்தியோகத்துக்குப் பிழை வரக்கூடாது. அடிபட்டாலும் வாழையடி வாழையாக வந்த அடிமைப் புத்தி இலகுவில் மாறிவிடுமா? இவர்களின் சுயநலப்பித்துக்கு எல்லையில்லை. தமிழிலே செய்யுங்கள் என்கிறவர்களிலும் இவர்கள் பாய்கிருர்கள். ஆங்கிலத்தோடு வாழலாம் என்றும் கனவுகாண்கிருர்கள்.

மணி: இவர்களைத் திருத்த முடியாதா?

கலை: இனிப் பொதுமக்கள் தான் இவர்களுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும்.

மணி: அண்ணு! இவர்களிலே சிலருக்கு நாம் கடிதம் எழுதி உங்கள் சொந்த அலுவல்களைத் தமிழிலே செய்து ஏனையோருக்கும் வழிகாட்டுங்கள் என்று கேட்டால் என்ன?

கலை: இப்படிப் பல தொண்டர்கள் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஒவ்வொரு [illegible] அலுவலகத்திலும் தமிழைப் போற்றுதிருக்கும் தமிழறிஞர்களின் பட்டியலை அமைத்து வருகிருர்கள்.

மணி: எப்படிப்பட்டவர்கள் இப்பட்டியலில் இடம் பெறுகிருர்கள்?

கலை: தமிழ் ஆசிரியர்கள், வித்தியாதரிசிகள், தமிழ் எழுத்தாளர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், பத்திரிகையாளர்கள், தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள், முதலியார்கள், தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள், தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், பல்கலைக்கழகம் தன்மொழி அலுவலகம், உத்தியோக மொழி இலாகா, தகவல் இலாகா, வானெலி இலாகா முதலிய இலாகாக்களில் தமிழுக்குப் பொறுப்பாயிருப்போர் பலர், அரசியற் கட்சிகளின் தலைவர்கள், தமிழ்ச் சங்கங்களின் உத்தியோகத்தர்கள் முதலானேர் இப்பட்டியலில் முதலிடம் பெறுகின்றனராம். இவர்கள் ஆங்கிலத்தில் எழுதும் முகவரிகள், தந்திகள் முதலியவற்றையுஞ் சேர்க்கிருர்கள்.

மணி: இவர்களுடைய போலிவேடத்தை அம்பலப்படுத்தினுலன்றித் தமிழ்மொழி முதன்மையடையாது நல்ல முயற்சி யானும் என் தோழர்களும் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்ந்து உங்களுடன் உழைக்கிறோம்.

கலை: நல்லது இன்றைக்கே உங்கள் பெயர், வயது, முகவரி, தொழில் முதலியவற்றை எழுதிக் கையெழுத்திட்டுத் தமிழியக்கம் மே.பா சுதந்திரன், த. பெ 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

### கொழும்புத் தமிழ்ச் சங்கத் தீர்மானங்கள்

அணிமையில் கூடிய கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழுக் கூட்டத்தில் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மறைவு குறித்து அவருடைய குடும்பத்தினருக்கும் தமிழகப் புலவர் குழுவினருக்கும், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பரிவினைத் தெரிவிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகத் திருகோணமலையில் உருவாகும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வளர்ப்பதற்கு எவ்வித வேறுபாடுமின்றித் தங்களுடைய முழு ஆதரவையும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு நல்க வேண்டுமென்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் கேட்டுக் கொள்ளுகிறது.

**தமிழியக்கம்**

எமது தமிழ் மொழி மதிப்புடன் வாழுதற்கும், தமிழ் மக்கள் நாம் இழந்த மொழி உரிமையைப் பெறுதற்கும் தமிழிலேயே எல்லா அலுவல்களையும் நடத்துமாறு தூண்டும் தமிழியக்கத்தை நன்கு ஆதரிக்குமாறும், எல்லாக் கருமங்களையும் தமிழிலே செய்யுமாறும் தமிழ் பேசும் மக்கள் யாவரையும் தமிழ்ச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**விழாக்கள்**

தைப்பொங்கல் விழாவையும், தமிழியக்க விழாவையும் 17-1-60-ல் நடத்துவதெனவும், சங்கத்தின் மலர் வெளியீட்டு விழாவை நூற்காட்சியுடன் பங்குனித் திங்கட் கடைசியில் நடத்துவதெனவும் இவ்விழாவில் பண்டிதமணி. திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் பாராட்டுவதெனவும் ஆட்சிக்குழு தீர்மானித்துள்ளது.

# நேரடி நடவடிக்கை

## தமிழைப் புறக்கணிக்கும் மன்றங்களுக்கு எதிராக

## தமிழியக்க வாரத்தில் திட்டம் தீட்டும் இளந்தமிழர் இயக்கம்

தமது அலுவல்களைத் தமிழில் நடாத்த இன்னும் தவறும் தமிழ்ப் பிரதேசத்து ஸ்தலஸ்தாபன மன்றங்களுக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் இறங்குவதற்கான திட்டத்தைத் தமிழியக்க வாரத்தில் இளந் தமிழர் இயக்கம் திட்டும். தமிழியக்க வாரத்தையொட்டி இளந் தமிழர் இயக்கத் தலைவர் திரு. கரிகாலன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்திருக்கிருர்.

தைப்பொங்கல் தினத்தன்று தொடக்கம் தமிழியக்க வாரம் ஏழு நாட்கள் வரை கொண்டாடப்படும். அது பற்றித் திரு. கரிகாலன் தமது அறிக்கையில் மேலும் கூறுவதாவது:—

"தமிழியக்கம் ஆங்கில எதிர்ப்பு முன்னணியல்ல. நாம் போராடிப் பெறக்கூடிய மொழியுரிமை வெறும் ஏட்டுச் சுரக்காயாக மட்டும் இருக்கக்கூடாது என்ற எண்ணத்தின் எதிரொலியாகும். நாம் 'சமவுரிமை கொடு' என தனிச் சிங்கள கர்த்தாக்களை நோக்கிக் கோரிக்கை விடுத்துக் கொண்டு ஆங்கிலத்தை குசினியறை தொட்டு குளிக்கும் அறை மட்டும் நிர்வாக மொழியாகக் கொள்வோமானுல், 'ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த ஆங்கிலத்தைப் பேசும் நீங்கள், அண்டை மொழியாகிய சிங்களத்தை ஏற்றுக் கொண்டால் என்ன?' என்ற நியாயமான கேள்வி எதிரிகளின் முகாமிலிருந்து எழுப்பப்படலாம். இதற்கு நாம் இடமளிக்கலாமா?

**வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்**

"நாம் எமது அரசாங்க அலுவலகத் தொடர்புகளை தனித் தமிழில் வைத்துக் கொள்வதன் மூலம், தனிச் சிங்களச் சட்டத் திணிப்புத் திட்டத்தையும் அதன் அமுலாக்கத்தையும் சக்தியற்றதாகச் செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருக்கின்றது. அது மட்டுமல்ல, சற்று ஆழ்ந்து நோக்கினுல், அரசாங்க இலாகாக்களில் அதிக தமிழர்களை வேலைக்கமர்த்திக் கொள்ள வேண்டிய அவசியத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துவதுடன், தமிழ் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும்

(13-ம் பக்கம் பார்க்க)

**சுதந்திரன் சந்தா விபரம்**

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

**மத்திய எழுதுவினைஞர்**
**பரீட்சை மார்ச் 1960.**

விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதி 30-12-59

இப்போட்டிப் பரீட்சைக்கு உரிய பாடங்கள் வினுவிடைப் புத்தகங்கள் தயாராகிவிட்டன. நீரும் அற்லஸ் ஹோலில் சேருவதால்,

**ஒரு அரசாங்க குமாஸ்தாவாகலாம்**

- பாஷை
- எண் கணிதம்
- பூமிசாஸ்திரம்
- சரித்திரம்
- பொதுவிவேகம்
- பொதுஅறிவு
- ஆங்கிலம்.

இலவச விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்.

**அற்லஸ் ஹோல்,**
த. பெ. 649. 723 மருதானை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணைக் கட்சியின் வானொலி விண்ணப்பம்

## அண்டிப் பிழைக்கும் கொள்கை மண்டிக் கிடக்கிறது அதில்

## ஐக்கிய இலங்கை காண யாத்திரையாம்

### காட்டிக் கொடுத்தவரும் கழுத்தறுத்த ஒருவருமே களத்தில்—அறிவாற்றலே செலவிட்டு சேவையாம்!

## ஹா...ஹா...ஹா... புலவர் வாயில் வந்த புளுகு

இண்ணைக் கட்சி அதாவது எட்டப்பர் எதிர் மன்னர் சிங்கத்தின் ஓட்டுவிட்டுப்போய் மொட்டையாக நிற்கும் தமிழ் பேசும் முன்னணி வானொலி மூலம் கடந்த புதன்கிழமை விண்ணப்பம் செய்திருக்கிறது. ஐக்கிய இலங்கையை உருவாக்கும் இலட்சிய யாத்திரையை அந்த முன்னணி ஆரம்பித்திருக்கிறதாம், அதில் அனைவரையும் வந்து சேரும்படி அழைப்பு விடுத்திருக்கிறது.

முன்னணிப் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை கம்மிய குரலில் அந்த அழைப்பை விடுத்தார். அதை ஏற்றுக் கொண்டு போகிறவர்கள் எதைக் காண்பார்கள் என்பதற்கு முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்புகள் இருந்தன.

### அண்டிப் பிழைக்கும் கொள்கை

சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொல்வதானால் அண்டிப்பிழைக்கும் கொள்கை இன்னும் முன்னணியிடம் மண்டிக் கிடப்பதை அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் காண முடிந்தது. அரசாங்கத்திடம், அது வாங்கித் தரலாம்; இது பெற்றுக் கொடுக்கலாம்; ஆஸ்பத்திரி திறப்பிக்கலாம்; ரஸ்தா அமைப்பிக்கலாம்; ரயில் ஓடச் செய்யலாம்; விமானம் இறங்கச் செய்யலாம் என்ற இந்த ரீதியில் முன்னணி பணிசெய்யப்போவதாக விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

### பிச்சை எடுப்பதா பிரச்னை?

சொல்லப்பட்ட விஷயங்கள் பலப்பல. அரசாங்கம் அமைக்கும் அரசியல் கட்சி கூட அத்தனை செயல்களையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் என்று எந்த முட்டாளுமே நம்பமாட்டான். ஆயினும் தமிழ் பேசும் மக்களை நம்பச் செய்ய விழைகிறது முன்னணி.

அவற்றையெல்லாம் முன்னணியால் செய்ய முடியும் என்று வைத்துக்கொண்டாலும் கூட ஒரு கேள்வி எழுகிறது இப்படிச் சலுகைகளும் வசதிகளும் பதவிக்கு வரும் அரசாங்கத்திடம் மண்டியிட்டு மன்றாடிப் பெற்று எத்தனை காலத்துக்கு வயிறு வளர்ப்பது? தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள், சலுகைகளும் வசதிகளும் பெறுவதுதானா? அவற்றைப் பெறுவதோடு தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் திருப்தி அடைந்து நிறைந்த மனதோடு சுதந்திர புருஷர்களாக வாழ முடியுமா?

### ஒற்றையாட்சியில் நலிவு

இன்றைக்கு பதவிக்கு வரும் அரசாங்கம் தரும் உரிமைகளையும் சலுகைகளையும் வாய்ப்புகளையும் நாளை பதவிக்குவரும் அரசாங்கம் வேண்டுமானால் மறுக்கலாம். இன்று நடைமுறையில் உள்ள ஒற்றையாட்சி அரசியல் அமைப்பில் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அமைக்கும் வாய்ப்பு இல்லை. அவர்கள் சிறுபான்மை மக்களாகவே நாளெல்லாம் இருக்க வேண்டும். அரசாங்கம் அமைக்கும் பெரும்பான்மை மக்கள் விரும்பியவாறு அவர்களை ஆட்டிப் படைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்புக்கிடையில் சிங்கள அரசாங்கம் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொணர்ந்து சிங்களத்தைத் தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்க இன்னும் முயன்று கொண்டிருப்பது ஒன்றே இதற்கு தக்க உதாரணமாகும்.

### அரசமைப்பில் மாற்றம் வேண்டும்

அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும். இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களும் தம்மைத் தாமே ஆளும் உரிமை பெறத்தக்கதாக மாற்றம் செய்யப்பட வேண்டும். என்றைக்கும் ஆளப்படும் மக்களாகவே தமிழ் பேசும் மக்கள்இருந்து நலிய வேண்டும் என்பது நியதியா? மாற்றக்கூடாத ஒன்றா? இல்லையே.

சமஷ்டி அரசமைப்புதமிழ் பேசும் மக்களின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைமைக்குச் சரியான பரிகாரம் என்று தமிழரசுக் கட்சி கூறுகிறது; அது தோன்றிய 10 ஆண்டு காலமாகத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. முன்னணிக்கு அது பிடிக்காமல் இருக்க நியாயமுண்டு. தமிழரசுக் கட்சி முதலில் சொன்னதைத் திருப்பிச் சொல்வது என்பது முன்னணிக்கு சிரமமாகத்தானிருக்கும்.

அப்படியானால் வேறொரு வழியைக் கூறலாமே நிலைமையைச் சீர் செய்ய. முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிற்றா? கிடையாது.

### ஐக்கிய இலங்கைக்கு யாத்திரை

"ஐக்கிய இலங்கையை உருவாக்குவோம். அதற்கான யாத்திரையை ஆரம்பிப்போம். ஆட்சியாளரிடம் வேண்டியதைக் கேட்டுப் பெற்று வயிறு வளர்ப்போம் —வாரீர்" என்று அழைக்கிறது. அதன் மூலம் தன் அண்டிப் பிழைக்கும் கொள்கையை அம்பலப் படுத்தியிருக்கிறது. தமிழ் பேசும் மக்களை இன்னுமின்னும் அடிமைப் படுகுழியில் குப்புறத் தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்க முனைகிறது.

### வேடிக்கையும் அசம்பாவிதமும்

வேடிக்கை, அசம்பாவிதம் எல்லாம் முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இருக்கின்றன. முன்னணியின் பாஷையில் சொல்வதானால் தமிழ் பேசும் மக்களுக்காக உழைக்க, முஸ்லிம்—தமிழ் மக்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த உற்பத்தி செய்யப்பட்ட கட்சி தான் முன்னர் மட்டக்களப்பு தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய முன்னணியாக இருந்துவிட்டு, இப்போது ஓட்டுவிட்டுப்போய், மட்டக்களப்பையும் ஐக்கியத்தையும் இழந்து,மொட்டையாக நிற்கும் தமிழ் பேசும் முன்னணி.

### ஆள் இல்லை

மட்டக்களப்பில் மட்டும் தான் தமிழர்களும் முஸ்லிம்களும் வாழ்கிறார்கள் என்று எண்ணிவிட்டது முன்னணி; வடக்கு மாகாணத்திலும், திருகோணமலை, மூதூர்பகுதிகளிலும் பிற இடங்களிலும் அவர்கள் வாழ்வது முன்னணியின் கண்ணில்படவில்லை. மயக்கம் தெளியவில்லை போலும்! இல்லாவிட்டால் தேர்தலில் பட்டிருப்போடும் கற்குடாவோடும் முடங்கிக் கிடக்க வேண்டிய காரணம் என்ன? அபேட்சகர்களாக

(8-ம் பக்கம் பார்க்க)

---

அறிமுகப்படுத்துகிறோம் — வரிசை : 2 — கலைஞர் : 8

# சீர்திருத்த நாடகங்கள் சிருட்டிக்கும் 'பாலு'

"காந்தன்"



சமூகத்தில் மண்டிக் கிடக்கும் மூடத்தனங்களைச் சாடி முற்போக்கு கருத்துக்களைத் தூவுவதற்கு நாடகம் நல்லதோர் சாதனம். இந்தச் சாதனத்தின் மூலம், பாமர மக்களிடம் கூட பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரவச் செய்யலாம். இந்தப் பணியை மீன் பாடும் தேன் நாட்டில் செய்து வருபவர்களில் திரு. எம். எஸ். பாலு குறிப்பிடத்தக்கவராவர்.

மட்டக்களப்புப் பகுதியில் திரு. சிவபாலன் என்றால் பலருக்குப் புதிய பெயராகத் தெரியலாம். ஆனால், 'பாலு' என்றால், நாடகாசிரியராக, சங்கீத ஆசிரியராக, அவரைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இன்னும், மேடைகளிற் பேசுபவர், நாடகங்களில் நடிப்பவர், பின்னணிவாத்தியக்கோஷ்டிகளில் வயலின் வாசிப்பவர்- இப்படியாக மட்டக்களப்பு மாவட்டப் பகுதியிலுள்ள மக்களுக்கு அவர் 'தெரிந்த' முகமாகி விட்டார்.

இவரது சொந்த ஊர்: மட்டக்களப்பு; பெற்றோர்: முருகுப்பிள்ளை-சூசையம் மாள் தம்பதிகள். பிறந்த தேதி: 1-3-1917. வந்தாறு மூலை, சாய்ந்த மருது ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மத்திய கல்லூரிகளில் சங்கீத ஆசிரியராகப் பல ஆண்டுகள் பணி புரிந்துவிட்டு, இப்போது காத்தான்குடி மத்திய கல்லூரியில் சங்கீத ஆசிரியராகத் தொண்டாற்றுகின்றார். நாடகக் கலையில் ஆர்வமும், இசைத்துறையில் ஞானமுமுள்ள திரு. பாலு சில இளம் பாடகர்களையும், நடிகர்களையும் வளர்த்துள்ளார்.

திரு. பாலு எழுதித் தயாரித்த நாடகங்களிற் சில மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற கலாநிகழ்ச்சிகள், கதம்ப விழாக்களிற் பரிசில்களைத் தட்டிக்கொண்டதுடன், பத்திரிகை விமர்சகர்களாலும் பாராட்டப்பட்டுள்ளன. 'இரத்தத்தின் மீது...?', 'தேர்தல் தந்திரம்' என்னும் இரு நாடகங்களும் இவருக்குப் புகழ் சேர்த்த நாடகங்களாகும். [illegible] நாடகங்களைத் [illegible] கும் அதிகமான வானொலி நாடகங்களையும் இவர் எழுதியுள்ளார். அவை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப் பட்டிருக்கின்றன.

சுதந்திரன், வீரகேசரி, ஸ்ரீலங்கா, லங்கா முரசு ஆகிய பத்திரிகைகளில், சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் அவ்வப்போது எழுதியுள்ளார். "இத்துறைகளில் நான் வளர்ச்சி அடைந்து வரக் காரணம் சுதந்திரன் ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம் தந்த ஊக்கமே" என நன்றி பாராட்டும் திரு. பாலு, புதுமைக் கருத்துக்களைக் கொண்ட பல நாடகங்களை இன்னும் படைத்து, சமூகப் பணி புரிவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டு, அதில் தீவிர கவனம் செலுத்தி உழைத்து வருகின்றார்.

இவர் விரும்புபவை: சுதந்திரன், கல்கி, குமுதம், கல்கண்டு பத்திரிகைகள்; பாரதி, பாரதிதாசன் கவிதைகள்; தி. மு. கழக நூல்கள்; சிகரட்; அறி [illegible] [illegible] கு, நன்றி மறத்தல்.

---


# பொங்கல்

## பண்டிகைக்கு வேண்டியவற்றிற்கு

கொண்டாட்ட வைபவங்களுக்குகந்த கண்ணைப் பறிக்கும் பல வண்ண வேலைப்பாடும், நவ நாகரிக மோஸ்தர்களிலுமான

சாரிகள், சில்க்குகள், நைலோன்கள் இன்னும் பல சட்டைத் துணிகளும்

பற்பல ரகங்களில் எம்மிடம் உள்ளன.

★ பியூர் சில்க் மணிப்புரி சாரிகள்
நல்ல வர்ணங்களிலும் அழகிய டிசைன்களிலுமானது.

★ பருத்தி நூல் மணிப்புரி சாரிகள்
1960 வருடத் தெரிவுகள்

★ நவீன டெக்கா சாரிகள்

★ இந்தியன் வோயில் சாரிகள்

★ அச்சடி, சதாடபேட்டா, கிளேஸ்ட்கொட்டன், நைலோன், ஓர்கண்டி ரோபியா வோயில்கள்; பெர்குஸன் பெப்ரிக்குகள், பருத்தி நூல், பேப்ரிக்ஸ் இன்னும் பல

பொங்கல் பரிசளிப்புக்குகந்த ஷேர்ட்டுகள், 'டை'கள் கால் மேஸ்கள், கைலேஞ்சிகள், இன்னும் பல உள்ளன.

## அலங்கரிப்புத் துணிகள்

கண்ணைக் கவரும் வர்ணங்களில் பகட்டான பல தெரிவுகள் உள்ளன

கிறீ ரோன்ஸ்
பின்னல் வேலைப் பாடுடைய
திரைச் சேலைகள், டெறிலேன்
லேஸ் படுதாத் துணிகள்

மணமகளுக்குகந்த மண விழாச் சாரிகளும் எம்மிடம் உள்ளன.

# மௌலானா

இலங்கையில் பிரபல ஜவுளி மாளிகை
கொழும்பு — கண்டி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# தொழிற் சங்க இயக்கம்

## ஐக்கிய அமெரிக்கா

சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழகக் கல்லூரி.

1870-ம் ஆண்டளவில் தொழிலாளர் இயக்கம் தேசிய விஸ்தீரணத்தில் வளரவும் இயங்கவும் தொடங்கியது. தேசிய தொழிலாளர் சங்கம் என்ற நாமத்துடன் ஒரு இயக்கம் 1866-ம் ஆண்டு தொடக்கம் சில ஆண்டுகள் இயங்கி 1872-ல் ஒரு அரசியல் கட்சி ஸ்தாபித்ததும் மறைந்தது.

"தொழில் வீரர்" (Knights of Labour) என்ற விநோத நாமத்துடன் ஒரு தொழிலாளர் இயக்கம 1869-ல் ஆரம்பமாகி சில வருடங்களுள் பெரும் செல்வாக்கைப் பெற்று ஏறக்குறைய 10 லட்சம் அங்கத்தினரை உள்ளடக்கி தொழிலாளர் இயக்கங்கட்கு அதிக மதிப்பையும் பெருமையையும் கொடுத்து உன்னதமான நிலையில் இருந்தது.

### தொழில் வீரர் இயக்கம் மறைவு

எனினும் சித்தியற்ற வேலை நிறுத்தங்கள் சிலவற்றில் இறங்கியமையாலும் இயக்கத்தின் அமைப்பில் அளவுக்கு மீறிய அதிகாரத்தை மத்திய ஸ்தானத்தில் பொதிந்து சுற்று வட்டாரத்தில் உள்ள ஸ்தாபனங்கட்கு தக்க அளவு சுதந்திரமும் சுய நிர்ணயமும் அளிக்காதமையினிமித்தமும் அரசியல் அரங்கு அபிலாஷைகளை தொழில் துறை நோக்கங்களுடன் சிக்கலாகக் கலந்தமையாலும் மிகவும் சீக்கிரமாக வளர்ந்த இந்த ஸ்தாபனம் சிறிது காலத்துள் மங்கி அழிந்தொழிந்தது.

### அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம்

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் (American Federation of Labour) என்ற நாமந்தாங்கிய தொழிலாளர் இயக்கம் ஆண்டு வரிசையில் அடுத்த ஸ்தானத்தை வகிக்கின்றது 1881-ல் இந்த தொழிலாளர் ஸ்தாபனங்களின் ஒற்றுமைப்பட்ட மகா நாடாக ஆரம்பித்து 1886-ல் மேற்கூறிய நாமத்தின்கீழ் புத்தமைப்பாகத் தோற்றியது.

இந்த ஸ்தாபனம் மிகச் சீராக வளர்ச்சியெய்தி நாடு பூராவும் உள்ள தொழிலாளர் சங்கங்களை உள்ளடக்கி சித்திகரமாகத் தொழிலாளர் முன்னேற்றத்தையும் சுபீட்சத்தையும் பல காலமாகக் கண்காணித்து வருவதால் இந்த ஸ்தாபனத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் இதர அம்சங்களையும் சற்றுக் கண்ணுறுவாம்.

### சமஷ்டி அமைப்பு

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் எனப்பட்ட இந்த ஸ்தாபனம் தோற்றுமுன்னர் அந்நாட்டில் ஆரம்பமான தேசிய தொழிலாளர் ஸ்தாபனங்கள் ஒரு பெரும் தனித் தொழிற்சங்கமாக நாடு பூராவும் உள்ள தொழிலாளரைத் திரட்ட முற்பட்டன.

ஆனல் இந்த ஸ்தாபனத்தின் அமைப்புச் சமஷ்டி முறையான ஒரு சம்மேளனத்தின் தலைமையின் கீழ் தொழிலாளரைத் திரட்ட வகை செய்தது. ஆகவே தத்தம் தொழிற் கலையில் பெருமிதம் கொள்ளும் தொழில் நுட்பமுடைய தொழிலாளரும் சரி, தொழில் நுட்பமில்லாத தொழிலாளரும் சரி தமக்குத் தமக்குப் பிரத்தியேகமான தொழிற் கலை ரீதியாகச் சேர்ந்து பின்னர் சமஷ்டி இணைப்பின்மூலம் ஏனைய தொழிலாளர் ஸ்தாபனங்களுடன் திரண்டு கருமமாற்ற முடிந்தது. தொழிற் கலை ரீதியான சங்கங்களாக (Craft Unions) அமைய வேண்டுமோ அன்றேல் தொழில்துறை ரீதியான சங்கங்களாக (Industry Unions) அமைய வேண்டுமோ என்ற பிரச்னை அமெரிக்கத் தொழிலாளர் உலகில் நெடுங்காலமாக வாதிக்கப்பெற்று தொழிலாளரிடையேபெரும் விரோதத்தையும ஒற்றுமையின்மையையும் உண்டு பண்ணலாயிற்று.

### சம்மேளனத்திற்கு ஆதரவு

தொழில் நுட்பமுடைய தொழிலாளர் தொழிற் கலை ரீதியான சங்கங்களையே விரும்பினர். ஆனல் அம்முறை தொழில் நுட்டபமில்லாதவரை தஞ்சமற்ற நிலையில் விட்டுவிடும். சமஷ்டி முறையைக் கையாண்ட அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளன அமைப்பு இந்த இரு தரப்பினர்க்குமிடையே நல்லுறவையும ஒற்றுமையையும் அதனல் தொழிலாளர் உலகிற்குக் கிடைக்கக்கூடிய பலத்தையும் பெற்றுக்கொடுத்தது. ஒரு சில இடங்களில்தொழில் துறை ரீதியாகச் சங்கங்கள் அமைக்கப்பெற்ருலும் பெரும்பான்மையானவை தொழிற்கலை ரீதியாகவே அமைக்கப்பெற்றன. ஆனல் எல்லாச் சங்கங்களும் சம்மேளனத்தின் தலைமையின் கீழ் ஒற்றுமையாகக் கருமமாற்றின.

### ஆதரவு பெறக் காரணங்கள்

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் வெறும் ஒரு துறையில் நிதானமாக நடந்தது. தொழிலாளர் உலகிற்குப் பலத்தையும் ஒற்றுமையையும் ஈந்தது எனலாம். அரசியல் வானில் தம் சொந்தக் கட்சியாக ஒன்றைச் சமைக்க வேண்டும் என்று கருதவில்லை. தொழிலாளர் உலகிற்கு உகந்த சட்ட திருபணத்தை ஆதரிப்பவர்களைத் தேர்தலில் ஆதரிப்பது என்ற நியதியையே கையாண்டது.

ஆதியில் சில காலம் பல அரசியல் விடயங்களில் அக்கறை கொண்டதாயினும் காலகெதியில் இந்தச் சம்மேளனம் தொழிலாளர்க்கு விசேடமாக நயத்தை அல்லது நட்டத்தைச் செய்யக்கூடிய பிரச்னைகளில் மாத்திரம் அக்கறையெடுத்ததேயன்றி இதர அரசியல் பிரச்னைகளைக் கவனத்திற்கெடுக்க மறுத்தது.

### தொழிற்சங்கத் தலைவர்கள்

இக் காரணங்களினல் கருமமே கண்ணாக உழைக்கும் தலைவர்களையன்றி ஆட்டம்பரப்பிரியர், சந்தர்ப்பவாதிகள், அரசியற் பதவி வேட்டையாடுவோர், சங்கத்தின் தலைமைபதவிகளுள் புக முன்வரவில்லை. அமெரிக்காவில் தொழிற்சங்கத் தலைவர்கள் நெடுங் காலமாகத் தொடர்ந்து கடமையாற்றினர் சாமுவேல் ஹோம்பேர்ஸ் (Samuel Gompers) என்பவர் 1882-ம் ஆண்டு தொடக்கம் 1924-ம் ஆண்டுவரை தொடர்ச்சியாகத் தலைமை தாங்கினர் ஜோன் மிச்சேல் (John Mitchell) தமது 32—வது வயது தொடக்கம் அந்திய காலம்வரையும் பல ஆண்டுகளாக நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் சங்கத்திற்குத் தலைமை தாங்கினர். வேறும் அநேகதொழிற் சங்கத் தலைவர்கள்தொடர்ச்சியாக நெடுங்காலம் சேவை செய்திருக்கின்றனர்.

### சேவை

கருங்கக் கூறின் தொழிலாளர் தம் வாழ்க்கைத் தரத்தையுயர்த்துவதற்கு உகந்த நேரடியான நடவடிக்கைகளை, அதாவது வேதன வரிசையையுயர்த்துதல், வேலை நேரப் பிரமாணங்களைக் குறைத்தல், தொழில் ஸ்தாபன வசதிகள் நட்புறவு நயங்கள் முதலாயவற்றில் கண்ணுங் கருத்துமாக கருமமாற்றினரேயன்றி ஆவேசப் பேச்சுக்கள் புரட்சிச் சுலோகங்கள் அரசியல் ஞானச் சித்தாந்தங்களைப் பற்றி விவரிப்பதிலோ கனவு காண்பதிலோ தம் நேரத்தைச் செலவிடவில்லை.

(தொடரும்)

வழுக்கை விழுகின்றதா.....?

அப்படியானல் உடனே

"ஹேர்பிரேனல்"

உபயோகியுங்கள்.

இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.
★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைததியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள் இலைகள் மற்றும் பெருமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு கலவைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சரியமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப்பட்டுள்ளன.

"ஹேர்பிரேனல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப்போன்ற கருமையான கேச வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,

41, & 43 இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# சங்கப் பலகை

## தமிழ் மறைக் கட்டுரைகள்

தொகுப்பு நூல். வெளியீடு: இன்ப நிலையம், மயிலாப்பூர் சென்னை—4, விலை ரூபா 3.50

தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில உலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டியிற் பரிசில்களும் பாராட்டிதழ்களும் பெற்ற கட்டுரைகள் பதினைந்து இத் தொகுப்பு நூலில் வெளியிடப்பட்டுள்ளன.

'திருவள்ளுவர் காலம்', 'திருக்குறளில் நவரசங்கள்', 'திருவள்ளுவமாலை', 'பொது மறை', 'வாழ்வுக்கலை', 'கேடக்கிடைக்காத செல்வம்', 'வள்ளுவர் வகுத்த அரசு', 'வள்ளுவர் கண்ட பெண்மை', 'திருக்குறளும் சிலப்பதிகாரமும்', 'திருக்குறளும் கீதையும்', 'நான் கண்ட வள்ளுவர்', 'வாழ்க்கை நூல்', 'வள்ளுவர் கண்ட வாழ்க்கைத் துணை', 'வள்ளுவரின் சொல் நயங்கள்' என்ற தலைப்புகளில் கட்டுரைகள் தரப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக எந்த ஒன்றையும் எடுத்து அதன் சிறப்பு உரைக்க முடியாத நிலையில் கட்டுரை ஆசிரியர்கள் நம்மை வைத்திருக்கிறார்கள். எல்லாக் கட்டுரைகளுமே கருத்தூன்றிப் படிக்க வேண்டியவைதாம் வாழ்வின் [illegible] குறிக்கும்போது வள்ளுவரை அங்கு பார்க்கிறோம்; அவர் உள்ளத்தை உணர்கிறோம்; நம்முடைய வள்ளுவன் இவ்வளவையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லிவைத்தான் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆழமான கருத்துக்களை எல்லாம் கட்டுரை ஆசிரியர்கள் அழகாக எடுத்துவிளக்கியிருக்கிறார்கள். எல்லோருமே தூய தமிழ் கையாண்டிருக்கிறார்கள். எளிய நடை—இலகுவாக எவரும் வாசித்து இன்புறக் கூடியது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் திருக்குறளையும் வள்ளுவரையும் முறையாக அறிந்து கொள்ள தமிழ் மறைக் கட்டுரைகள் என்ற இத் தொகுப்பு நூல் சிறந்த துணையாகும்.

தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் இந் நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ளார். அதில் அவர் கூறுகிறார்:

"திருக்குறள் தமிழினத்தின் தனிப் பெரு நூல்; உலகப் பொது நூல்....தமிழினம் தலைநிமிர்ந்து நல்வாழ்வு வாழுதற்கு—வையத்தில் வாழ்வாங்கு வாழுதற்கு திருக்குறளே தமிழரின் மறை—தமிழ் மறை எனும் உண்மை தமிழருடைய உள்ளத்தில் நன்கு [illegible]தல் வேண்டும்...தமிழ் மறை எடுக்க எடுக்கக் குறையாத கருத்துச் சுரங்கம். புலவர்கள் மட்டும் புகும் சுரங்கமாக இது இருந்தது. பலரும் புகுந்து இதன் பெருமையைக் காண வாய்ப்பளிக்காது இதனை மூடி மறைத்து வைக்க முற்பட்டோருமுளர். எனினும் இப்பொழுது இது தமிழினத்தின் பொதுச் சொத்தாகி விட்டது. பல திறப்பட்டோரும் இதனுட் புகுந்து பலவகைப்பட்ட கருத்துக்களைக் கொணர்கின்றனர். முன்னே புகுந்தவர்களின் வழியைப் பின்பற்றிச் செல்வோரும் உளர். புதுப் புது வழிகள் கண்டு செல்வோரும் உளர். தத்தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அனுபவத்துக்கு மேற்ப இச் சுரங்கத்திலிருந்து பல கருத்துக்களை எடுக்கலாம்."

பண்டிதர் கூறியவாறு கட்டுரை ஆசிரியர்கள் பல கருத்துக்களை எடுத்துத்தந்திருக்கிறார்கள். அவற்றுள் பழையனவும் உண்டு; புதியனவும் உண்டு. பழையனவற்றிற்கு புதுமெருகு ஏற்றியிருக்கிறார்கள். புதியனவற்றைப் பளிச்சிட வைத்திருக்கிறார்கள். இந்தத் திறமை பாராட்டுக்குரியது.

இனி, நூலை வெளியிட்டவர்களைப் பாராட்டுவது மட்டுமல்ல; அவர்களுக்கு பத்திரங்கூட வழங்கலாம். மனம் வைத்து வேலை—இல்லை தமிழ்த் தொண்டு செய்திருக்கிறார்கள் சுத்தமான அச்சுப் பதிப்பு; கவர்ச்சியான அமைப்பு; எடுப்பான அட்டை; நீண்ட காலம் உழைக்கக்கூடிய பைன்டிங். இப்படியான நல்ல வெளியீடுகளை இன்ப நிலையம் இத்தனை சிறப்புகளோடு இன்னும் மின்னும் தரவேண்டும். தமிழுலகம் எதிர்பார்க்கிறது.

—சோமசேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# உலக மக்களில் மூன்றிலொரு பகுதியினருக்கு வாழ்வளிக்கும் கடற்றொழில்

## இலங்கையில் ஏன் செழிக்க முடியாது?

## விஞ்ஞான ரீதியில் பல நோக்குப் பண்ணை அமைத்து அதிக இலாபம் பெறலாம்

## கூட்டுறவு முறை கூடியபயன் தரும்

கிராம மக்களின் வருவாய்க்கான தொழில்களில் மீன் பண்ணைத் தொழிலும் ஒன்று. உலக மக்களில் மூன்றிலொரு பங்கினர் கடற்றொழிலை நம்பியே உயிர் வாழ்கின்றனர். எங்கள் நாட்டிலும் கடற்றொழிலை நம்பி வாழும் கிராமவாசிகள் கணக்கற்றோராவர். கடலிலிருந்து கிடைக்கும் மிகப் பயனுள்ள பொருள்களில் ஒன்றுதான் மீன். மீனை உலர்த்தி கருவாடு உற்பத்தியாக்குகிறார்கள். மாசி உற்பத்தியாவதும் மீனிலிருந்துதான்.

### பயன்

மீனில் புரதச் சத்தும், விட்டமின் சத்துக்களும் நிறம்ப உண்டு. மீன் எண்ணெயை சிறுவர்களுக்கு ஊட்டமளிப்பதற்காகக் கொடுக்கின்றனர். அது போன்று கோழிகள், பிராணிகள் போன்றவற்றிற்கு—அவைகளின் வளர்ச்சிக்கும், முட்டைப் பெருக்கத்திற்கும் மீன் எண்ணெய், மீன் தூள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன. இன்னும் மீன் உரம் பயிர்களுக்கு சிறந்த உரமாகவும் உதவுகிறது. இன்னோரன்ன பற்பல நன்மைகள் மீனிலிருந்து கிடைத்து வருகின்றன.

### முயற்சி வேண்டும்

நாலு பக்கங்களிலும் கடல் சூழ்ந்த தீவு நம் நாடு. ஏறக்குறைய 90 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு தீவு தன் தேவைக்குக் கூட தன்னைச் சுற்றியுள்ள கடலில் மீன் எடுத்துக்கொள்ள முடியாமல், பிற நாடுகளை மீன் உணவுக்காக நம்பிக்கிடப்பது நமக்குப் பெருமை தருவதாயில்லை. மீன், கருவாடு இறக்குமதிகளுக்கு ஏழரைக் கோடி ரூபாய் வருடா வருடம் நாட்டை விட்டுப் போகிறது. நமக்குத் தேவையான மீன் உணவுகளில் 40 சத வீதம்தான நாம் உற்பத்தி செய்கிறோம். மீதம் 60 சத வீதமும் பிறநாடுகளிலிருந்துதான் இறக்குமதி செய்கிறோம். இவற்றை நம்மால் உற்பத்தி செய்து சுய தேவையைப் பூர்த்தி செய் முடியாதா? முயன்றால் முடியாது என்று சொல்வதற்கில்லை.

### தொழில் வாய்ப்பு ஏற்படும்

இங்குதான் மீன் பண்ணை வளர்ப்பதின் அவசியம் ஏற்படுகிறது. அதிலும் கிராமத்தவர் இத்தகைய பண்ணைகளை வளர்ப்பதால் தம் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு இது ஓர் அரிய வாய்ப்பாகவுமிருக்கிறது. உலகின் பல்வேறு நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் இத்தொழிலால் பயன்பெறும்

அ. விஜயன் விக்டோரியா பி. ஏ.

போது நம் நாட்டுக் கிராமவாசிகளும் ஏன் அவ்வண்ணம் பயன் பெற முடியாது? மீன் பண்ணை அமைக்க மீன் வளர்த்து, பொருளீட்ட எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இதன் மூலம் கிராம மக்கள் பலருக்கு தொழில் வாய்ப்புகள் கிடைப்பதுடன் அவர்களது பொருளாதார நிலையும் உயர்வடையும். வாழ்க்கைத் தரமும் உயரும்.

### விஞ்ஞான மீன் பண்ணை

ஆறு, ஏரி, குளம், தடாகம், கால்வாய் மற்றும் எல்லா நீர் நிலைகளிலிருந்தும் மீன்கள் கிடைக்க வழியுண்டு. கிராமப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குளத்திலும் நிறைய மீன்கள் வளர்க்கலாம். ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செய்யப்படும் வேளாண்மையில் கிடைக்கும் ஆதாயத்தை விட, விஞ்ஞான முறையில் ஒரு ஏக்கர் நீர்ப்பரப்பில் நடத்தப்படும் மீன் பண்ணையில் கிடைக்கும் ஆதாயம் அதிகம் என்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கிராமப் புறங்களிலே காணப்படும் பிரயோசனமற்ற குளம், குட்டைகள், அங்குமிங்கும் சிதறிக் கிடக்கும் தடாகங்கள் இவைகளையெல்லாம் மீன் வளர்ப்புக்கு உபயோகிக்கலாம். மீன் வளர்ப்புக்காகச் சிறு குளங்களை ஏற்படுத்திக் கொள்வதும் சிரமமன்று நம் நாட்டிலே நீர் வசதி நிறையவிருப்பதால், சிறு துளி நீரையும் வீணாக்காமல் பயன்படுத்துவது சாலச் சிறந்தது. மீன் பண்ணைகளை எங்கெங்கு நிறுவ முடியுமோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் அவற்றை ஆரம்பிக்க வேண்டும்.

### திட்டம் வேண்டும்

மீன் பண்ணை நிறுவ நினைப்பவர்கள் எவ்வகையான பண்ணையை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்குத் திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டும். திட்டமாவது யாதெனில், தனிப்பட்ட மீன் பண்ணை மட்டும் ஆரம்பிக்காமல் கலப்புப் பண்ணையாக, பலநோக்குப் பண்ணையாக ஆரம்பித்தலாகும். இக்காலத்தில் எம் நாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் பலவிதமான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்குப் பதிலாக, அச் சங்கங்களின் கருமங்களையெல்லாம் ஒருசேர ஓரே ஸ்தாபனம் ஆற்றும் முகமாய், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நிறுவப்படுவது போன்று பல நோக்கும் பண்ணையென்றை கிராமங்கள் தோறும் அமைப்பது நலம் பயப்பதாகும்.

### கலப்புப் பண்ணை

கலப்புப் பண்ணை அமைப்பது எல்லோரது சக்திக்கும் உட்பட்டதன்று. என்றாலும் சிறிது வசதியுள்ளவர்கள், ஒருபத்து ஏக்கர் நிலத்தை வைத்திருப்பவர்கள், அதில் பல விடங்களில் தேவைக்குத் தகுந்த குளங்கள் வெட்டி மீன் வளர்ப்பதுடன், மற்ற இடங்களில் இடத்துக்கு ஏற்ற பயிர்களை உற்பத்தி செய்யலாம். ஆங்காங்கே கனி தரும் தருக்கள், பழமரங்கள் வைத்து வளர்க்கலாம், கோழிப் பண்ணை ஒரு பகுதியிலும், பால் பண்ணை இன்னொரு பகுதியிலும், ஆடு வளர்ப்பு மற்றொரு பகுதியிலும் இப்படியாக ஒரே இடத்தில் பல தொழில்களைச் செய்யக் கூடியதாக கலப்புப் பண்ணை ஆரம்பிக்கலாம். இவ்வாறு செய்யும் போது மீன் வளர்க்க எடுக்கும் அதே நேரத்லத வேறு பல தொழில்களுக்கும் பயன்படுத்த முடிவதால், குறைந்த உழைப்பில் அதிக இலாபம் பெற முடியும்.

ஆகவே, கிராமியப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு கோழிப் பண்ணை, மீன் பண்ணை ஆகியவற்றை கிராமவாசிகள் தனித்தனியாகத் தொடங்கி நடத்தி வந்தாலும் சரி, அல்லது கிராமத்திலுள்ள பலர் ஒன்றுகூடி நாம் மேலே கூறியபடி கலப்புப் பண்ணையொன்றை கூட்டுறவு முறையில் அமைத்துக்கொண்டாலும் சரி, அவை வாயிலாக அம் மக்களது வருவாய் பெருகி, வாழ்க்கைத்தரம் உயர்ந்து வாழ்வு மலரும் என்பதற்கு ஐயமில்லை.

(உபயம்: இலங்கை வானொலி)


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

**அற்லஸ் ஹோல்,**
783, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.


நகைச் சுவைக் கட்டுரை

# ‘நீ குரங்கு, நான் குரங்கு’

மாஸ்டர் சிவலிங்கம்

மத்தியானத்திலிருந்து எனது மனதில் ஒரு குரங்குப்பிடி இன்று பின்னேரம் எந்தத் தடை இருந்தாலும் உலகப் பிரசித்தி பெற்ற ‘மெரினா’க் கடற்கரைக்குப் போய் வரவேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்திருந்தேன். வந்து முட்டிய பல அலுவல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, எனது நினைவை நிறைவேற்றி வைக்கவும் அன்று நான் தவறவில்லை.

தாவி விளையாடும் குரங்குகளைப் போல் துள்ளி விளையாடும் அலைகளின் ஓரமாக சென்னை ‘மெரினா’க் கடற்கரையில் உலாவுவது மனதிற்குத் தனி இன்பந்தான் என்றாலும், எனதுமூளையைக் குழப்பியடித்த ஒரு சம்பவமும் அங்குதான் நிகழ்ந்தது.

### செத்த குரங்கு

குரங்கைப் போல் துள்ளும் அலையென்று சொன்னேனல்லவா? அதே அலை மீது செத்துப்போன ஒரு குரங்கு, பாவம்! கடல் அலைகளால் ஒதுக்கப்பட்டுக் கரையிலே வந்து கிடந்தது.

அட கடவுளே! ஒரு காலத்தில் கடலையே தாவிக் கடந்த அனுமானின் பரம்பரையிலே வந்த குரங்கிற்கு இந்தக் கதி வந்ததே என்று நான் நினைத்தபோது என்மனம் என்னை அறியாமலே எண்ண அலைகளில் நீந்தி எங்கெல்லாமோ செல்ல ஆரம்பித்தது.

### கடவுட் குரங்கு

முதலில் நான் ஒரு கோயிலுக்குள் நுழைந்தேன். அங்கு என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. சாட்சாத் குரங்கு அவர்களே கல்லுருவில் காட்சி தந்துகொண்டிருந்தார். அனுமார் கோயில் என்றாலே தனிப் பிரசித்தம். அந்தக் கோயிலை யாரோ ஒரு மன்னன் கட்டியதாகக் கூறினார்கள் நான் நினைத்துப் பார்த்தேன்; மன்னன் கட்டி வழிபடுமளவிற்கு மகத்துவம் வாய்ந்த குரங்கை என்னால் மறக்க முடியவில்லை. மன்னனென்ற சொல் என் சிந்தனையைத் திருப்பி விட்டது.

### அரசர்க் குரங்கு

இப்பொழுது சிங்காசனத்திலே கம்பீரமாக இருந்த குரங்கை நான் பார்த்தேன். வாள் பிடித்த கையோடு, முடிதரித்த நிலையில் இருந்த அந்தக் குரங்கைப் பார்த்ததும் முறைப்படிக்கு நான் பயந்திருக்க வேண்டும்! ஆனால் வாள் தாங்கிய சிங்கத்தை இலங்கையிலேகண்டு பழகிப்போன எனக்கு அச்சம் பிறக்கவில்லை. அணுகிப் பார்த்தேன். அந்தக் குரங்கு மன்னன் வேறு யாருமல்ல, ராஜாதி ராஜ, ராஜகெம்பீர வாலி அவர்களேதான் என்பது தெரிய வந்தது.

### ‘ஆமி’க் குரங்கு

மன்னனைப் பார்த்துவிட்டு வெளியேறினேனோ இல்லையோ, என்னை அப்படியே பிடித்து நிறுத்திய பட்டாள (‘ஆமி’க்) குரங்கைச் சந்தித்தேன்.

தாம் சுக்கிரீவன் ‘ஆமி’யில் கடமையாற்றுவதாகவும், விரைவில் ராமருக்கு உதவி செய்யவிருப்பதாகவும் அந்த குரங்கு வீரன் கூறினான். என்னைப் பிடித்து விழுங்கி விடும் பாவனையில் அவன் துபயங்கர முகம் காட்சி அளித்தபோது நான் துள்ளிப் பாய்ந்து ஓடி நீதிபதியிடம் வந்து சேர்ந்தேன்.

### நீதிபதிக் குரங்கு

கையிலே ஒரு தராசை வைத்துக் கொண்டு கனம் நீதிபதிக் குரங்கு அவர்கள் காட்சி அளித்தார்கள். பூனை போலப் பதுங்கிப் பதுங்கி நான் அருகிற் சென்றேன். உண்மையாகவே இரண்டு பூனைகளை ஏமாற்றிக் கொண்டிருந்த கனம் குரங்கு அவர்கள் தமது நடிப்புத் திறன் மூலம் தம்மை நல்லவராகக் காட்டி, வெற்றிகரமாக அப்பங்களைச் சுவைத்துக்கொண்டிருந்த அந்தக் காட்சி, நடிப்புத்துறையின் நடைபாதைக்கு, சினிமா உலகுக்கு என்னை இழுத்துக் கொண்டு வந்து விட்டது.

### நடிகர்க் குரங்கு

நான் ஸ்டுடியோவிற்குள் நுழைந்தபோது நடிகர்க் குரங்கு அவர்கள் ஓடிவந்து கைகுலுக்கி என்னை ஆடம்பரமாக வரவேற்று வைத்தார். தாம் ஒரு மேல் நாட்டுப் படத்திற்காக ஒரு வார காலத்திற்குள் ‘ஹொலிவூட்’ செல்லவிருப்பதாக அவர் பெருமையாகச் சொல்லிக் கொண்டார். சமீபத்தில் நடித்த இரு இந்திப் படங்களில் அவர் சம்பாதித்த புகழைப் பற்றி மிக உணர்ச்சியோடு எடுத்துரைத்தார். அவர் நடிப்பை அவர் பாராட்டத்தானே செய்வார்.

ஸ்ரீமான் நடிகர்க் குரங்கு அவர்கள் மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் இடையில் கலைப்பாலம் அமைப்பதையெண்ணி மெய்மறந்த வேளையில் எனக்கு நடைபாதைப் பாலத்தின் நினைப்பு ஓடோடி வந்து விட்டது.

### என்ஜினியர்க் குரங்கு

“சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்” என்று பாரதியார் பாடியதன் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே என்ஜினியராக இருந்த திரு

(10-ம் பக்கம் பார்க்க)


உங்கள் நீடித்த எழிலுக்கு

## ‘எலைட்’

சூப்பர்லோன் ஜோர்ஜட் என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

‘எலைட்’

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

## குண்டன்மால்ஸ்,

லிமிட்டெட்,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஜனவரி மாதம் 10-ந் தேதி

194 ஏ. தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# தேர்தல் திருவிழா

இலங்கையின் நான்காவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் திருவிழாக் காலம் ஆரம்பித்துவிட்டது. கடந்த திங்கட்கிழமை நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டதன் மூலம் துவஜாரோகணம் நடைபெற்றிருக்கிறது.

1960 மார்ச் 19-ந் தேதி காலையில் தேரோட்டம் ஆரம்பிக்கும். அநேகமாக, மாலையில் தீர்த்தோற்சவம் நடைபெறும். அரசியல் தெப்பக்குளத்தில் எத்தனை பேர் முற்றாக முழுகிப் போவார்கள், எத்தனைபேர் நீந்திப் பாராளுமன்றம் என்ற சந்நிதானத்தின் படிக்கட்டுகளில் ஏறுவார்கள் என்பது மறுநாள் தெரிந்துவிடும்.

புதிய பாராளுமன்றத்திலுள்ள 151 ஸ்தானங்களுக்கு 898 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். பெரும்படியான சராசரி பார்க்கப்போனால் ஒவ்வொரு தொகுதிக்கும் அறுவர் வீதம் தேர்தலுக்கு நிற்கின்றனர் என்று சொல்லலாம்.

இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற பெரிய பெரிய நாடுகளில் கூட இலங்கையைப்போல் இவ்வளவு பெருந்தொகையான அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதில்லை. இங்கிலாந்தை எடுத்துக்கொண்டால் குறிப்பிடக் கூடிய கட்சிகளாக நான்கு கட்சிகள், அதாவது, கொன்சர்வேட்டிவ் கட்சி, லேபர் கட்சி, லிபரல் கட்சி, கொம்யூனிஸ்டு கட்சி என்பன தாம் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில்கூடப் போட்டியிட்டன.

இந்தச் சின்னஞ்சிறு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டவையும், அங்கீகரிக்கப்படாதவையுமாக சுமார் 30 அரசியல் கட்சிகள் வரை போட்டியிடுவது வேடிக்கையாகவேயிருக்கின்றது. கொள்கைக்காக அரசியல் கட்சியென்று அமையாமல் தனிப்பட்டவர்களின் தலைமைக்காகவும், பெருமைக்காகவும், வீம்புக்காகவும், வெறிக்காகவும் காளான் கட்சிகள் இங்கு தோற்றுவிக்கப்படுகின்றன.

ஒரு கட்சிக்கும் இன்னொரு கட்சிக்குமிடையே அடிப்படைக் கொள்கைகளில் உள்ள வேறுபாடு என்ன என்பதை அறிய முடியாதபடி பொதுமக்கள் திண்டாடவேண்டிய நிலையில் உள்ளார்கள். ஒரே கொள்கை கொண்ட பல கட்சிகளும், கொள்கையே இல்லாமல் குழப்பமே கொள்கையாகக் கொண்ட பல கட்சிகளும் மக்களை மயக்கத்துக்குள்ளாக்குகின்றன.

இத்தகைய களேபர நிலைமையினால் உதிரிகளும், உதவாக்கரைகளும் தலை தூக்கி இந்த நாட்டில் கட்சி ரீதியான ஜனநாயகத்தின் புனிதத்துவத்தைக் குழிதோண்டிப் புதைக்கப் போகின்றனவே என்று அரசியல் அவதானிகள் கவல்கின்றனர். இலங்கை முழுவதையும் எடுத்துக்கொண்டால் உள்ள நிலை இது. தமிழ்ப் பிரதேசத்து நிலையென்ன என்பதையும் பார்ப்போம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அம்பாறை நீங்கலாகவுள்ள 23 தொகுதிகளில் 25 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக 11 கட்சிகளும் 11 சுயேச்சைகளும் போட்டியிடுகின்றன. கட்சிகளின் சார்பில் போட்டியிடுபவர்களின் தொகை 58 ஆகும். எனவே மொத்தம் 69 அபேட்சகர்கள் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றனர்.

இந்த இரண்டு மாகாணங்களிலும் அதிகப்படியான அபேட்சகர்களை நிறுத்தியிருக்கும் ஒரேயொரு தமிழ்க் கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். இக்கட்சி 19 அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. சமசமாஜக் கட்சியும், கொம்யூனிஸ்டு கட்சியும் கிழக்கு மாகாணத்தில் வெளிப்படையாகத் தமது அபேட்சகர்களை நிறுத்தும் அளவிற்கு தகைமையையும் துணிவையும் செல்வாக்கையும் இன்னும் பெறவில்லை.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்று "அகில இலங்கை" ஆபரணத்தை அலங்காரமாகக் கட்டிச் சுமக்கும் தமிழ்க் காங்கிரஸும், சதா அந்தர நிலையில் நிற்கும் ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணியும் கிழக்கு மாகாணத்தை எட்டிக்கூடப் பார்க்க முடியவில்லை.

வடக்கில் எட்டே எட்டு ஸ்தானத்துக்குப் போட்டியிடும் தமிழ்க் காங்கிரஸ் வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழ் இலங்கைக்காகக் குரல் எழுப்புவது எப்படி? பிரதிநிதித்துவம் பெறுவது எப்படி?

தனித் தமிழ் நாடா சமஷ்டியா என்பதைத் தீர்மானிப்பதற்காக வவனியாவில் குருக்ஷேத்திரம் அமைத்துத் தனிமரமாக நிற்கிறார் ஈழத்தமிழர் ஒற்றுமை காண விழையும் ஒருவர். இவருக்குப் பின்னால் வெறும் அபேட்சகராக நிற்பதற்குக் கூட ஒருவரைத் தேடிப்பிடிக்க முடியாத இந்தத் தனிக் காட்டு ராஜா அகில இலங்கைப் பிரச்னையை வவனியாவில் மட்டும் போட்டியிடுவதன் மூலம் தீர்த்துக் கட்டிவிடப்பார்க்கிறார். இந்த மட்டித்தனத்துக்கு அரசியலில் ஒப்புவமையே கிடையாது!

"வரட்டும் பொதுத் தேர்தல். தமிழரசுக் கட்சியைக் கிழக்கு மாகாணத்திலிருந்து வாரிக் கூட்டித் தள்ளிவிடுகிறேன். வடக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுபவர்களுக்கு பணம் பணமாக வாரி வழங்குகிறேன்" என்று வாய் ஜம்பமடித்தவர் தண்ணிக் கோப்பைக் கட்சியின் தலைவர் சக செயலாளரான திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் வடக்குத் திசையில் தலைவைத்துக் கூடப்படுக்க முடியாமல் போய்விட்டது. வடக்கு மட்டுமல்ல பக்கத்திலுள்ள திருமலையையும் திரும்பிப் பார்க்க முடியவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தம்மையும், தண்ணிக் கோப்பைக் கட்சியைச் சேர்ந்த இன்னொருவரையும் மட்டுமே நிறுத்த முடிந்தது. இந்தத் தள்ளாடு நிலையில்தான் அவர் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழரசுக் கட்சியை அடித்து விரட்டப்போகிறார்!

எனவே, தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் ஸ்திரமான கட்டுக்கோப்போடு அமைந்த மாபெரும் கட்சியாக, மகோன்னத ஸ்தாபனமாக விளங்குவது இலங்கைத் தமிழரசுக் கட்சி யொன்றுதான். அது ஒன்றுதான் தமிழ் பேசும் மக்களின் சொந்தக் கட்சியாகும். தமிழரசுக் கட்சியின் அபேட்சகர்களை நூற்றுக்கு நூறு வீதம் தேர்ந்து அனுப்புவதன் மூலமே தமிழ் பேசும் மக்களிடையே ஸ்திரமான ஒற்றுமையையும் ஒருமைப்பாடான செயல் திட்டத்தையும் உருவாக்க முடியும்.

இந்த [illegible] நன்கு பதித்து தேர்தல் [illegible] ற்று நாட்டுக்கும் இனத்துக்கும் நற்பணியாற்றுமாறு நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

# எங்கும் தமிழரசு என்பதே பேச்சு

## எல்லாம் வெல்வர் என்பது உறுதியாச்சு

—யாழ். ஜனவரி 6

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரங்களை அபேட்சகர்கள் தாக்கல் செய்த திங்களன்று தொடக்கம் யாழ்ப்பாணப் பகுதிகள் எங்கும் தேர்தல் பற்றிய பேச்சுக்களே அடிபடுகின்றன. அவற்றுள் எல்லாம் தமிழரசுப் பேச்சே தலை தூக்கி நிற்கிறது. தமிழரசு அபேட்சகர்கள் எல்லோரும் வெல்லுவர் என்பது அனேகமாக இப்போதே உறுதியாகிவிட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள தொகுதிகள் மொத்தம் பதின்மூன்றிலும் அபேட்சகர்களை நிறுத்திய ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே. அகில இலங்கைக் கட்சிகள் என்று பெருமையாகச் சொல்லப்படும் கொம்யூனிஸ்டு கட்சியும் சம சமாஜக் கட்சியும் தம்மால் அங்கு ஒரு இடத்தைக் கூடக் கைப்பற்ற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டும் ஒரு சில இடங்களில் எப்படியோ முயன்று சில ஆட்களை வளைத்துப் பிடித்து அபேட்சகராக நிறுத்தியிருக்கின்றன. கூடு விட்டுக் கூடு பாய்ந்தவர்களும், இதுவரை நாடு அறியாமல் எங்கோ மூலையில் இருந்தவர்களுங் கூட முன்னுக்கு இழுத்துவந்து நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாமும் தமிழரசாரை எதிர்த்தோம் என்ற ஒரு பெருமையாவது கிடைக்கட்டும் என்ற நப்பாசை அவர்களுக்கு.

தனிப்பெருந்தலைவருடைய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிட முடியாது பின்வாங்கிவிட்டது. சென்ற 1956 பொதுத் தேர்தலில் மூக்குடைபட்டு மூலையில் பதுங்கியிருந்த பச்சோந்திசுளும் மற்றவர்களுமாக ஏழுபேரைத் தனிப் பெருந்தலைவர் தேடிப்பிடித்துக் கட்சி 'டிக்கட்' கொடுத்து நிறுத்தியிருக்கிறார். நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்த தினத்தன்று இந்த ஏழு பேரும் தலைவரும் கொக்கரித்து வீதிவலம் வந்த காட்சியைக் கண்டவர்கள் அவர் தம் முகத்தில் தோல்வி நிழலாடியதையும் கூடவே கண்டார்கள்.

இப்படி போட்டிக்கு எல்லாத் தொகுதிகளிலும் நிறுத்துவதற்கு அபேட்சகர்கள் கிடைக்காமல் கட்சிகள் எல்லாம் திண்டாடிப் போன ஒன்றே ஒரு உண்மையை அம்பலப்படுத்தியது. அதாவது தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற கட்சி, தமிழரசுக் கட்சி ஒன்றுதான் என்பதே அந்த உண்மை.

அந்தக் கட்சிதான் வெல்லும் என்பதற்கு ஆதாரம் வேறு வேண்டுமா?

## தமிழ் பகுதியில் கட்சி நிலை

அம்பாரைத் தொகுதி நீங்கலாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 23 தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் கட்சி வாரியான நிலை

| | | |
|---|---|---|
| 1. தமிழ் அரசுக் கட்சி | 19 | ஸ்தானங்கள் |
| 2. சமசமாஜக் கட்சி | 11 | ,, |
| 3. தமிழ் காங்கிரஸ் கட்சி | 8 | ,, |
| 4. கொம்யூனிஸ்டு கட்சி | 6 | ,, |
| 5. பிரஜா தந்திரக் கட்சி | 5 | ,, |
| 6. தமிழ் பேசும் முன்னணி | 2 | ,, |
| 7. யு. என். பி. கட்சி | 2 | ,, |
| 8. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2 | ,, |
| 9. ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி | 1 | ,, |
| 10. வன்னிநாட்டுவிவசாயிகள்முன்னணி | 1 | ,, |
| 11. எம். ஈ. பி. | 1 | ,, |
| 12. சுயேச்சைகள் | 11 | ,, |
| | 69 | |

## கிண்ணக் கட்சியின்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்த ஆட்கள் கிடைக்கவில்லை என்பது முன்னணியின் வண்டவாளத்தை வெளிப்படுத்துவதாகும்.

ஆசை அருமையாக இரண்டே இரண்டு பேர் அதாவது எட்டப்பர் எதிர்மன்னரும், தமக்குத் தாமே குழிதோண்டிக்கொண்டவரும்-கழுத்தறுத்தவருமான திரு வி. நல்லையாவும் முறையே பட்டிருப்பிலும் கற்குடாவிலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னணி சார்பில் போட்டியிடுகிறார்கள். களத்திலே இவர்கள். வெளியே கச்சைகட்டிக் கொண்டு நிற்கிறார் புலவர் மணி. முன்னணியின் மும்மணிகள் இவர்கள்தாம். இவர்களை வைத்துக்கொண்டுள்ள முன்னணி தனது அறிவாற்றலை செலவிட்டுசேவை செய்யுமாம். ஹா...ஹா... ஹா...அதையும் புலவர் மணியே வானொலி ஒலிபரப்பில் சொல்லிக் காட்டினார்.

### புளுகு

இதுமட்டுமல்ல இன்னும் சொன்னார் அவர். தமிழுக்கு சமஅந்தஸ்து கிடைக்கச் செய்ய முன்னணி பாடுபடுமாம். தமிழ் பேசும் மக்கள் கௌரவத்தோடும் தன்மானத்தோடும் வாழ வழி செய்யுமாம். இது வேடிக்கையா? புலவர் வாயில் பிறந்த புளுகா? புரியவில்லை.

எட்டப்பரின் முன்னணி இப்படிக் கொட்டி முழக்குவது இது முதல்தடவையல்லவே. 1956 தேர்தலிலும் இதே வாக்குறுதிகள் வந்தன. ஒரு நூறு வாக்கால் எப்படியோ பிழைத்தார். பின்னர் நடந்ததென்ன? வாக்குறுதிகள் காற்றிலே பறந்தன. எட்டப்பர் ஆட்சியாளரின் காலில் விழுந்தார்; தன்மானத்தை இழந்தார்; தமிழ் இனத்தின் கௌரவத்தையும் அடகு வைத்தார்; எல்லோரையும் காட்டிக் கொடுத்தார்; சிங்களத்தை அரசாங்க மொழியாக ஏற்றார்; தாய்மொழி-தமிழ் மொழி ஒதுக்கித் தள்ளப்பட உறுதுணைபுரிந்தார்; அரை மந்திரிப் பதவி பெற்றார்; கொழுத்த சம்பளம் கிடைத்தது; குஷிபண்ணினார்.

### நடக்க இருப்பது

திடுதிப்பென்று பொதுத் தேர்தல் வந்ததோடு பழைய பல்லவியைத் திரும்ப மீட்டுகிறார். இடைக்கால சம்பவங்களை பொதுவாகத் தமிழ் பேசும் மக்களும் குறிப்பாக பட்டிருப்புத் தொகுதி வாக்காளர்களும் மறந்திருப்பார்கள் என்பது அவரின் நம்பிக்கை. வைரம்பாய்ந்த நெஞ்சோடு அங்கு வாக்காளர்கள் வஞ்சம் தீர்க்கக்காத்திருப்பதை எட்டப்பர் இன்னும் உணரவில்லை. அதனால்தான் விஞ்ஞாபனத்தில் உளறல்போலும்!

—சிங்கம்.

## தேர்தல் பிரசுரங்கள் தேவை

இதுவரை கிடைத்துள்ள பிரசுரங்கள்: (தொடர்ச்சி)

16. பொதுமக்களுக்கு அறிவித்தல்—பொ. ஆசைப்பிள்ளை.
17. பொதுமக்களே தீர்ப்பளியுங்கள்—ஆ. கனகரத்தினம்.
18. அணைத்து வெற்றி பெறல்—வீ. வீரசிங்கம்.
19. வீ. வீரசிங்கம் செய்தவை.
20. சமசமாஜ ஆட்சி அமைத்திட வாரீர் வாலிபரே!
21. இலங்கையின் தேசிய இனங்கள் உரிமை பெற்று இணைந்து வாழ வழி—பிரதேச சுயாட்சி.
22. திரு. ஏ. எல். ஏ. மஜீத் பி. ஏ.—மூதூர் ஆதரவாளர்.
23. வரவேற்கிறோம்—மூதூர் தொகுதி வாக்காளர்.
24. வாக்காளப் பெருமக்களே—எம். ஈ. எச். முகம்மதலி.
25. சாவகச்சேரித் தொகுதி பொதுத் தேர்தல்—ஏ. எஸ். கனகரத்தினம்.
26. வாக்காளப் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள்—இ. ச. க. யாழ்—கிளை.
27. சமசமாஜக் கட்சி செயலாளருக்கு பகிரங்க கடிதம்—தா. கந்தசாமி.
28. நல்லூர் தொகுதி பாராளுமன்றத் தேர்தல்—நா. இராசையா முதலியோர்.
29. கொக்குவில் கோண்டாவில்......ஓர் பகிரங்க அறிவித்தல்.
30. சாவகச்சேரி...... சிந்தனைக்கு—வே. குமாரசாமி.

— ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலும் கிழக்கிலும் தேர்தல் களத்திலே இவர்கள்

## பத்தொன்பதுபேர் தமிழரசார்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 23 தொகுதிகளில் 19-ல் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடத் தமிழரசுக் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது. அம்பாறை நீங்கலாக, அந்த இரண்டு மாகாணங்களிலுமுள்ள தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் விவரம் வருமாறு:—

**காங்கேசன்துறை**

எஸ். ஜே வி. செல்வநாயகம் (த. அ.), வி. !காராளசிங்கம், (ல. ச ச. க.), ஆர். என். சிவப்பிரகாசம் (த கா.).

**உடுவில்**

வி. தர்மலிங்கம் (த. அ.). வி. பொன்னம்பலம் (க. க.), பி. நாகலிங்கம் (ல. ச. ச. க), எஸ். எச். பேரின்பநாயகம் (சு. சோஸலிஸ்ட்), வி. விரசிங்கம் (சு.), ஜெ டி. ஆசீர்வாதம் (சு.), என். சிவநேசன் (சு.).

**ஊர்காவற்றுறை**

வி. ஏ, கந்தையா (த. அ), வி. வி. நல்லதம்பி (ல. ச. ச. க.), அல்பிரட் தம்பியையா (சு.).

**வட்டுக்கோட்டை**

அ. அமிர்தலிங்கம் (த. அ), பி. எம். சங்கரப்பிள்ளை (த. கா.), ஏ. வைத்திலிங்கம் (க. க.), எஸ் சுந்தரசிவம் (ல ச. ச. க.) வி. எஸ். இரத்தின சபாபதி (சு).

**யாழ்ப்பாணம்**

எஸ். கதிரவேற்பிள்ளை (த.அ.) ஜீ. ஜீ. பொன்னம்பலம் (த. கா.), ஏ. விஸ்வநாதன் (ல. ச. ச. க.), ஏ. டி. துரையப்பா (சு).

**நல்லூர்**

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் (த. அ.), எம். கார்த்திகேயன் (க க), வி. அருளம்பலம் (த. கா.), ஏ. துரைராஜசிங்கம் (ல. ச. ச. க.), ஆர். சி. மன்மதராயன் (சு), சி. சின்னத்துரை (சு).

**கோப்பாய்**

அட்வகேட் எம். பாலசுந்தரம் (த. அ.), கே. வி. எஸ். சண்முகநாதன் (ல. ச. ச. க.), எஸ். பி. நடராஜா (க. க.), டி. குணரத்தினம் (த. கா.) கே. நல்லதம்பி (சு), எஸ். சிவசுப்பிரமணியம் (சு).

**உடுப்பிட்டி**

கே. ஜயக்கொடி (த. அ.), ஆர். ஆர். தர்மரத்தினம் (ல. ச. ச.க.), பி. கந்தையா (க. க.), எம். சிவசிதம்பரம் (த. கா.).

**பருத்தித்துறை**

கே. துரைரத்தினம் (த. அ.), திருமதி சிவக்கொழுந்து (சு), எஸ். சுந்தரலிங்கம் (சு), எஸ். நடராஜா (த. கா.), கே. சேனாதிராஜா (க. க.), த. ஜயதேவன் (ல. ச. ச. க)

**சாவகச்சேரி**

வி. என். நவரத்தினம் (த. அ), ஏ. எஸ். கனகரத்தினம் (ல ச. ச. க), வி. குமாரசாமி (த. கா.).

**கிளிநொச்சி**

ஏ. சிவசுந்தரம் (த. அ), அன்டன் டி பொன்னம்பலம் (சு), ப. ஆறுமுகம் (சு), செ. சரவணமுத்து (சு), வி. ஆனந்தசங்கரி (ல. ச. ச. க.)

**வவனியா**

எஸ். சுப்பிரமணியம் (த. அ.), வி. சுந்தரலிங்கம் (ஈ. த. ஒ. மு.), டி. சிவசிதப்பரம் (சு), பி. முத்தையா (வ. நா. வி. மு.).

**மன்னார்**

வி. ஏ. அழகக்கோன் (த.அ), என். எம். ஏ. கபூர் (சு), எஸ். எச். மொகமட் (சு. சோ.), எஸ். ஜோப் மார்க்ஸ் (சு).

**திருகோணமலை**

என். ஆர். ராஜவரோதயம் (த. அ.), எஸ். அபேவீர [எஸ். எல். எப். பி.], லால் குணரத்ன (எல். பி. பி.) குலாம் பக்கீர் (சு).

**மூதூர்**

(2 பிரதிநிதிகள்)

டி. ஏகாம்பரம் (த. அ.). எம். ஈ. எச். முகம்மதலி (சு), ஏ. எச். அல்விஸ் (யு. என். பி.), பி. டி. ஈ. வி. பெரேரா (எம். ஈ. பி.), எஸ். டி. வீரக்கோன் (எஸ். எல். எப். பி.), ஏ. எல். ஏ. மஜீத் (சு), ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் (எல். பி. பி.), என். டி. பிரான்சிஸ் சேவியர் (சு), ஜீ. ஏ. பி. துரைநாயகம் (சு).

**மட்டக்களப்பு**

(2 பிரதிநிதிகள்)

எஸ். ராஜதுரை (த. அ.), ஏ. எச். மாக்கான் மாக்கார் (சு), டி. மயில்வாகனம் (சு).

**கல்குடா**

பி. மாணிக்கவாசகர் (த. அ.), வி. நல்லையா (த. பே. மு.), ஏ ஐ, மாக்கான் மாக்கார் (யு. என். பி.)

**கல்முனை**

மஷூர் மௌலானா (த. அ.), எம். எஸ். காரியப்பர் (எல். பி. பி.), எம். ஸி. அஹமத் (சு), எஸ். ஸி. காதர் மொகிதீன் (சு), எம். ஏ. எல். காரியப்பர் (சு).

**பட்டிருப்பு**

எஸ். எம். ராஜமாணிக்கம் (த. அ.), எஸ் யு எதிர்மன்னசிங்கம் (த. பே. மு.).

**நிந்தவூர்**

எம். மிர்ஸா (சு). எம். ஐ. எம். மஜீத் (சு), எம். எஸ். காதர் (சு), எம். எம். முஸ்தபா (எல். பி. பி.).

**பொத்துவில்**

வி. சந்திரசேகர (சு), எம் எப். அப்துல் ஜவாத் (எல். பி. பி.), எம். ஏ. அப்துல் மஜீத் (சு).

### தேர்தலில் தமிழ்ப் பெண்கள்


—:—

**கொழும்பில் வசந்தா**


**பருத்தித்துறையில் திருமதி சிவக்கொழுந்து**

பாராளுமன்றத் தேர்தலில் முதல் முறையாக இரண்டு தமிழ்ப் பெண்கள் குதித்திருக்கிறார்கள். திருமதி வசந்தா அப்பாத்துரை மூன்று அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் கொழும்பு மத்திய தொகுதியில் 13 அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

பருத்தித்துறையில் திருமதி சிவக்கொழுந்து என்ற பெண்மணி போட்டியிடுகிறார்.



முன்னாள் பிரதிநிதி திரு. செ. இராசதுரைக்கு மட்டக்களப்புப் பொது மக்களால் பரிசாக வழங்கப்பட்ட மோட்டார் காரின் திறப்புக் கோவையை நகரசபைத் தலைவர் திரு. எஸ். டி. கனகசபை கையளிக்கும் காட்சி.



இடமிருந்து வலம்: திரு. செ. இராசதுரை, திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஜனாப் மசூர் மவுலானா, திரு. பி. மாணிக்கவாசகர்.

கடந்த திங்கட்கிழமையன்று மட்டக்களப்புக் கச்சேரியில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களான இந்த நால்வரும் மலர்மாலை அணிவித்து, ஆயிரத்துக்கதிகமான பொதுமக்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

## புதிய தேர்தல் சட்டங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தச் சட்டத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட அன்றே கொடிகளைப் பிடுங்க ஆரம்பித்து விட்டார்கள் என்று பல இடங்களிலிருந்து செய்திகள் கிடைக்கின்றன.

தனிப்பட்டவர்களுடைய வீடுகளில்உட்புறமாகஏற்றப் பட்டிருந்த கொடிகளையும் பொலீசார் பிடுங்கிக்கொண்டுபோய் விடுகிறார்களாம். இது அத்துமீறிய செயலாகும்.

**பொலீஸார் கூறும் சமாதானம்**

மோட்டார் வண்டியில் கொடி போட்டுச் சென்றால் அவர்களைத் தடுத்து நிறுத்திக் கொடியை பிடுங்கிக் கொள்கிறார்களாம். தேர்தல் சட்டம் அப்படிச் சொல்லவில்லையே என்று வாதாடினால், 'தேர்தல் சட்டப்படி அல்ல மோட்டார்ச் சட்டப்படி தடுக்கிறோம்'' என்று சமாதானம் கூறுகிறார்களாம்.

**விளக்கம் [வேண்டும்**

இவ்வண்ணம் எல்லாமே குழப்பமடையாக இருக்கிறது அபேட்சகர்கள் மாதிரி வாக்குச் சீட்டுகள் அச்சிட்டு விநியோகிப்பது சம்பந்தமாக நிலைமை என்ன என்று தெரியாமல் விழிக்கிறார்கள். அரசாங்கமே சீட்டுகளை அச்சிட்டுத் தபாலில் அனுப்பி வைக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கும் அபேட்சகர்களும் பலர் இருக்கிறார்கள்.

தேர்தல் கமிஷனர் திரு. அபயசிங்க விரைவில் ஒரு மாநாடு கூட்டி இவற்றையெல்லாம் பற்றி விரிவான விளக்கம் தர வேண்டும் என்று ஒரு அபேட்சகர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

### தமிழ் காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்று அழைக்கப்படும் அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ் வெளியிட்டுள்ள வேடிக்கையான தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்து சுதந்திரன் அரசியல் விமர்சகர் எழுதிய ஒரு கட்டுரை இடமின்மையால் இவ்வாரம் வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் அது பிரசுரமாகும் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

## ஒத்துப்பாடி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரோகிகளாக மாறிவிட்டதை எண்ணும் முஸ்லிம்கள் நெஞ்சம் புண்ணாகி பொருமுகிறார்கள். வஞ்சம் தீர்க்க வழி தேடுகிறார்கள்.

கல்முனைக்கு வரவேண்டிய கச்சேரி அம்பாறையில் இடம் பெறும் அநியாயத்தை எதிர்த்து தமிழரசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கல்முனையில் தமிழரசுப் பிரதிநிதி •இம்முறை தேர்தலில் தெரிவு செய்யப்படுவாரேயானால் தமது இந்த வேலை இலகுவில் முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். முஸ்லிம் மக்களும் இதை உணர்ந்து ஆதரவே செய்கிறார்கள்.


சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் [நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதவும்:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புச் சுமை

சிறுகதை — எழுதியவர்: திமிலைத்துமிலன்

## மருதி—இளங்கோ

"அத்தான்! நிகழ்ந்தவை அனைத்தும் தவறு. ஒத்துக்கொள்கிறேன். உள்ளம் திருந்தி மன்னித்து உங்கள் மங்காப் பணியை உன்னிப் புரியும் உரிமையைத் தருக"

"உரிமை தருவதா? நான் யார் அதற்கு? உரிமை! அதனை யாரிடம் பறித்தேன்...நீ யார்? நானே நேற்று வந்தவன். தீயார் சேர்க்கை தீயினும் கொடிது. போய்விடு. இந்தப் புறத்தும் உன் நிழல் தோய்ந்திட வேண்டாம்"

"சொல்லாதீர்கள்! அத்தனை கொடுமை அடியாள் இழைத்தால், எத்தால் தீரும்?...செத்தால் தீரும். போகிறேன் அத்தான்!"

"சாகிறேன் என்றா?"

"வேகும் என் உள்ள வேதனை அழியச் சாவுதான் மருந்து..."

"சரிதான், கொலைப் பழி தாவி, நான் சிறையில் தவித்திட மருந்து?"

"இல்லை! ஐயகோ! ஏன் இவ்வார்த்தை?......கல்லும் கனியும்!'

"கனியான் இளங்கோ.இன்னும் எதற்காய் இங்கே நிற்கிறாய்?"........

"மன்னித்திடுங்கள். வராமல் போனால் உங்களுக்குணவு?"

"ஒன்றும் வேண்டாம். திங்கள் முப்பதாய்ச் செய்ததே போதும், அதற்காம் செலவு அனைத்தும் கிடைக்கும். இதற்கா தயக்கம்? இயம்பு உன் தாயிடம்"

"அதற்காயில்லை. அனைத்தும் தவறாய்..."

"எதற்கும் தொடர்பு இனி மேல் வேண்டாம்"

"அத்தான்! இப்பேதையின் அன்பின் ஆணையாய்......"

"'அத்தான்!'-அந்த அவச் சொல்லும் வேண்டாம்"

"ஐயோ! ஐயோ! அனைத்தும் கனவோ? பொய்யோ? அத்தான்! போகிறேன். அந்தப் பாக்கியம் ஒன்றைப் பறியாதீர்கள். நாய்க்கும் கடையாள் யானே...போக்கிடம் அறியேன்; போகிறேன் அத்தான்"

●

[மருதி சென்றுவிட்டாள்-பொருமும், மனது கொந்தளிக்க.குருதி கொப்பளிக்க;—உளத்தில் கூரம்பு பாய்ந்துவிட மருதி சென்றுவிட்டாள்......

இளங்கோ நின்றுவிட்டான்—இன்பத்தில் ஏக்கமும் கண்சிமிட்ட விளங்கா நேர் உணர்வால்—நெஞ்சத்தில் வேதனை மின்னவிட இளங்கோ நின்றுவிட்டான்.]

பட்டணம் சென்றதுவும்—படித்துப் பதவி பெற்றதுவும் எட்டு வருடங்களாய்—இலங்கை எங்கும் அலைந்ததுவும் திட்டம் வகுக்காமல் மீண்டும் திரும்பி வந்ததுவும் வட்டம் அடித்ததம்மா!—மனத்தில் வந்து படிந்ததம்மா!

கதவு கீச்சிடவே-நிமிர்ந்து கண்ணைப் படரவிட்டான். பதைபதைப்புடனே—ஒரு கிளி படியில் நின்றிருந்தாள்.

●

"அம்மா வரவில்லை. அதனால் சுணங்கிற்று..."

"அம்மாவா? யார் நீ......"

"அமிர்தம் தான் என் தாய்..."

"ஓ! அமிர்தத்தின் பெண் நீயா?...அவளுக்கு?..."

"ஒன்றுமில்லை. நிமிர்ந்திருக்கவொண்ணாத நெஞ்சுவலி. உங்களுக்குச் சாதம் சுணங்கிற்று. சாப்பிடுங்கள். இன்றிருந்து ஏதும் சுணங்காது. இதற்காக மன்னித்து..."

"மன்னிப்பா? இப்போ மணி ஆக ஒன்றேதான்...... உன்னை நான் எங்கோ......"

"...உங்கள் பெயர்?..."

"...நீ மருதி?...என்னைத் தெரியாது?....இளங்கோ...."

"என் அத்தான்?..."

"ஆம் முன்னைப்போலில்லை. முழுதும் வளர்ந்துவிட்டாய். கன்னிப் பெண்ணாக, கட்டழகுப் பெட்டகமாய்...!"

"என்ன இது? நீங்கள் இன்னும் சிறு குழந்தை?...அப்பாடா! நானே அறவே மதிக்கவில்லை!"

"எப்படித்தான் நீ மதிப்பாய்? இருக்கும் அழகையெல்லாம் கொட்டிப் பருவம் குலுங்கிச் சிரிக்கையிலே? பட்டுவிடும் கண். ஆம்..."

"பசிக்கவில்லை உங்களுக்கு?"

"நிறையப் பசித்ததுதான். நீ வர்தபின் அதுவும் மறைவாய்ப் பதுங்கியதே!..."

"வாய்ப் பேச்சு மாறவில்லை!...சாப்பிடுங்கள் நான் போறேன்"

"சரி மருதி. நீ பிறகு?..."

"கூப்பிடு முன்னே குதிக்கும் சிறு வயசா? மாலை உணவு கொண்டு வருவேன். என் அம்மாவோ நாளை எழுந்துவிட்டால் நான் ஏன் வர வேண்டும்?"

"கேலிக்குப் பேசாதே கிண்டலொன்றும் செய்யாதே. வாலைப் பருவம் வரமாட்டேன் என்றதே. பூதமில்லை இங்கு போய் வா மருதி!

"அத்தான்! தோதிருந்தால் வாறேன். சும்மா படிப்பதற்கு புத்தகங்கள் ஏதாச்சும்..."

"பொன்னன நாவலெல்லாம் நித்தம் கிடைக்கும் நீ வந்தால் 'மாலதி'யின் சித்தம் உருக்கும் சிறு 'நாவல்'! பார்த்தாயா? புத்தம் புதிய கதை பொன்னனை கற்பனைகள். கொண்டுபோய்ப் பாரேன்"

"கொடுங்களத்தான்...அப்பாடா! வண்டிக்கடங்காத வகையான புத்தகங்கள்! இத்தனையும் நீங்கள் எப்போ படித்தீர்கள்?-எத்தனை நாள் வேண்டும்? ஏனத்தான்! பள்ளியிலே கற்பிப்பதுவா கதை படிப்பதே தொழிலா? நற்புத்திக்கிந்த நாவல்கள்தான் கிட்டியதா?"

"என்ன மருதி! இப்போதைப் பெண்ணென்றுஉன்னை நினைத்தேன். ஒன்பதாம் நூற்றாண்டுப் பாட்டி என்று கண்டேனா? பாவம்! புகழேந்தி தீட்டி வைத்த ஏடுகளின் சிதைவும் கிடையாதே!

"போகட்டுமத்தான். போதும் பரிகாசம்"

"சாகட்டும் இந்தச் சண்டாள நாவலெலலாம் என்றுதான் திட்டுகிறாய் இல்லையா?"

"போங்களத்தான். நின்று கதைக்க நேரமில்லை நான் போறன்..."

●

"சென்றுவிட்டாளா? தேனைப் பேசுதற்கு நன்றாய்ப் பழகிவிட்டாள். நாத்துடுக்கும் போகவில்லை. எட்டாண்டுக்குள்ளே எத்தனையோ மாறுதல்கள். கிட்டிவிட்டாள் அந்தக் கிளி!"

●

அன்னை சுமந்து வருவதில்லை. இப்போ அன்புச் சுமையோடவள் வருவாள். கன்னம் சிவக்கும் இதழ் சிரிக்கும் அவன் கை கொடுத்தே அதை வாங்கி வைப்பான்.

அந்திப் பொழுதிலே ஓர் நாளையிலே அவன் அன்பின் [illegible], சிந்திச் சிதறும் மடலிடையே ஒரு சின்ன நிழற் படம் கண்டெடுத்தாள் பள்ளிப் பருவத்துத் தோழியவள். பெயர் பாவை; உடனே மதித்துவிட்டாள் கள்ளி! இவள் படம் எப்படி வந்தது? காட்டி வினவிட ஓடி வந்தாள். துள்ளிக் குதித்திடவில்லை. "மருதி! இச் சுந்தரி மாலதி. நாவலெல்லாம் அள்ளிச் சொரியும் அரிய எழுத்தாளர் ஆளைத் தெரியுமோ?" என்று சொன்னான்.

'நல்லாய்த் தெரியுது. ஆழ் கடலில் கப்பல் நான்கை இழந்த முகத்திலொடு சொல்லுக்கு என்னுடன் பேசுவது' எனச் சொல்லவில்லை; அவள் எண்ணமிட்டாள்.

காலம் விரைந்து நடப்பதிலும், அவன் கண்கள் வெறுப்பை உமிழ்வதிலும், வேளை உணவும் மறந்துவிட்டான் நெஞ்சில் வேதனை முட்ட விசும்பிவிடுவாள்.

●

மெல்ல அறையினுள் கண்ணைவிட்டாள். அவன் மேசையிலில்லை-வெளியிலில்லை. உள்ளே நடந்தாள். கதிரையின் பின் ஒரு ஒற்றைக் கடிதம்! குனிந்தெடுத்தாள்.

'ஆருயிர் மாலதி!'...என்ன இது? அவள் அத்தான் எழுத்து!...அவள் இதயம் பாறையில் மோதிச் சிதறிப் பறந்தது!...பார்க்கவில்லை. அதை வைத்துவிட்டாள். ஓடினாள். மீண்டும் திரும்பி வந்தாள். அவள் ஓங்கியடித்து வசைகளைத்தும் பாடித் துரத்திய காட்சியினை நாம் பார்த்துவிட்டோம். பாவம், பாவம் அவள்!

### காதலாம் காதல்

"காதலாம்-காதல்! கண்ணராவி ஆண்களெல்லாம் ஏதும் அறியா நிளிச்ச வாய்ச் சூனியங்கள்...கையாலாகாத காதற் புலியாரே! ஐயோ பரிதாபம்! அன்புச் சுமையதனை, வைதென்று கையேந்த வாய்க்கவில்லை ஓர் மங்கை? தைப்பொங்கலுக்குள் சந்திக்கவா நீரா?..."

என்று பலமுறை தனக்குள் சிரித்தாள் பாவை. எழுந்து வந்து பதில் வரைந்து இளங்கோவுக்கு அன்று பகல் பொழுதுக்கே அனுப்பிவிட்டு அடுக்களையுட்புகப் போனாள். ஆனால் நெஞ்சைத் தின்றுவிட மருதியிட்ட ஓலை கையில் திணிபடவே திடுக்கிட்டாள். பிரித்தாள். அங்கே தென்றல் மொழியில்லை. ஒரு பேதைசொ ஒப்பெரியாத இதய ஒலி! தீராக் கண்ணீர்!

### பாவை-இளங்கோ—பரணன்

"யார்...இளங்கோ நீங்கள்? நான் போய்ப் புரியாமல் ஏதேதோ பேசிவிட்டேன். இதை நீங்கள்...?

"இல்லை இல்லை. அன்பு வணக்கம்!"

"வணக்கம்! அமருங்கள்"

"முன்பிருந்தே உங்கள் முழு நாவல் எத்தனையோ

(15ம் பக்கம் பார்க்க)

கவிதை கூறும்
சிறுகதைப் பொங்கல்
நேயர்களுக்கு
இங்கு விசேஷமாக
வழங்கப்படுகிறது

# 'நீ குரங்கு, நான் குரங்கு'

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

குரங்கு அவர்கள் பாக்கு நீரணைக்கு மேலாகத் தமது வேலையாட்களுடன் இராமருக்காகப் பாலம் அமைத்துக் கொண்டிருந்த காட்சி என் முன் ஒருகணம் தோன்றி மறைந்தது. இறைவன்முதல் என்ஜினியர் வரையில் பல காலத்திலும், பல தொழில்களிலும் ஈடுபட்டிருந்த குரங்கின் நினைப்போடு நான் மீண்டும் 'மெரினாக்' கடற்கரையில் வந்து குந்தித்தேன்.

### விஞ்ஞான உலகில் குரங்குகள்

இப்பொழுது கடற்கரையில் கிடந்த குரங்கைப் பார்க்க எனக்கு ஒரே பரிதாபமாக இருந்தது. கடலில் மீன்கள் மிதக்க முடியுமே தவிர அந்தக் குரங்கு அங்கு எப்படி வந்து மிதக்க முடியும்? திடீரென்று ஒரு உண்மை எனது இதயத்தைத் துளைத்தது. ஆத்திரமடைந்த என் நெஞ்சத்தை விஞ்ஞானிகளின் மேல் திருப்பி விட்டேன்.

சந்திரனுக்கு ரொக்கட்டுகளை அனுப்பவேண்டுமென்ற விஞ்ஞானிகளின் ஆசை, உழைத்து, உழைத்து உருக்குலைந்துபோன குரங்குகளுக்கல்லவா ஆபத்தாக வந்திருக்கிறது! இன்றைய உலகம் எப்படியெல்லாம் குரங்குகளை வருத்துகிறது?

"குரங்கிலிருந்துதான் மனித வர்க்கம் தோன்றியது" என்று சொன்ன டார்வின் விஞ்ஞானி செத்தகுரங்கின் எலும்புகளை ஆராய்ந்தானும். ஆனால் தற்கால விஞ்ஞானி உயிருள்ள குரங்குகளை ரொக்கட்டில் வைத்தல்லவா எலும்புகளை நொறுக்கிப் பார்க்கிறான்! எந்த ரொக்கட்டிலிருந்து இந்தக் குரங்கு இங்கு வந்து விழுந்ததோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

என் மூளை பலமாக வேலை செய்ய ஆரம்பித்தது. குரங்கின் அருமை ஒருவருக்குமே தெரிவதில்லை. வயிற்றுப் பிழைப்பிற்காக குரங்கை வைத்துப் பராமரிக்கும் குரங்காட்டி கூட சுயநலத்தோடு தான் அதை வைத்திருக்கிறான். குரங்கிலிருந்து தாம் வந்ததையே மறந்து அதை மனிதன் படுத்தும் பாடு கொஞ்சமா? குரங்குப் புத்தி படைத்த மனிதன் என்னவெல்லாம் செய்து தொலைக்கிறான்? இது மட்டுமா அபத்தம் கூடச் சொல்லுகிறான்.

### கொரிலா யுத்தம்

நேருக்கு நேர் நின்று யுத்தம் செய்த 'குரங்கு வீரனை' இராமன்தான் ஒழிந்து நின்று கொன்றானே தவிர குரங்குகள் என்றும் மறைவிலிருந்து யுத்தம் நடத்தி துஷ்ட நிக்ரகம் செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் உலகம மறைந்திருந்து செய்யும் யுத்த முறைக்குத் தானே 'கொரிலா' யுத்தம் என்று பெயர் சூட்டியுள்ளது!

### குரங்கின் தியாகம்

கட்சி விட்டுக் கட்சி தாவும் மனிதக் குரங்குகள், பல்லைக் காட்டிக் கெஞ்சி வாழும் மனிதக் குரங்குகள், சமுதாய மரத்தை உலுப்பிச் சிதறடித்து வேடிக்கை பார்க்கும் மனிதக் குரங்குகள்............இந்த மனிதக் குரங்குகளைவிட, மிருகக் குரங்குகள் எவ்வளவு மேலான தியாகங்களைச் செய்திருக்கின்றன.

செத்து மிதந்த அந்தக் குரங்கை மீண்டும் ஒரு தடவை பார்த்துவிட்டு, கண்ணீர் சிந்தும் உள்ளத்துடன எமது இருப்பிடம் திரும்பினேன். "நீ குரங்கு......நான் குரங்கு" என்ற பாட்டு கடற்கரை வானொலி ஒலிபரப்பிகளாயினூடாக வந்து என் காதைத் துளைத்தது. ஆமாம்! நம்மைக்கூட இனி யாராவது "நீ குரங்கு" என்று திட்டினாலும் நாம் பொருட்படுத்தக் கூடாது. பெருமை வாய்ந்த அந்தப் பெயர் கிடைக்கப் பெறுவது தனிப் பெருமையல்லவா!

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே!




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவாக விளைவுகள்

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசிலனைக்குழு சட்ட ஆலோசகர்

பொதுவில் விவாகம் ஒருவரின் அந்தஸ்தைப் பாதிப்பதுமன்றி, அவருக்கு (ஆளுக்கு) உரியதும் ஆதனத்துக்குரியதுமான விளைவுகளையும் உண்டாக்கும். உதாரணமாக விவாகம் ஒருவரைப் பாலியப் பருவத்தினின்றும் நீக்கி அவரைச் சட்டரீதியான பக்குவ அந்தஸ்தை (Majorty) அடையச் செய்யும். அதுபோலவே ஒரு பெண் விவாகத்தினுல் தன் கணவனுடைய நிரந்தர குடியிருப்புரிமையை (Domicile)ப் பெறுவாள்.

### விஷயம்

விவாக விளைவுகளைப்பற்றி ஆராயும்பொழுது ரோமன் டச் சட்டமாகிய பொதுச் சட்டத்திற்குட்பட்ட இலங்கைப் பிரஜைகளுக்கு அமையும் விவாக விளைவுகளைப் பற்றி முதலில் அறிவது உசிதமாகும். அதாவது இக்கட்டுரையில் தேச வழமைச் சட்டத்துக் குரித்தான வடமாகாண குடிவாசவுரிமையுள்ள தமிழரைத் தவிர்த்த இலங்கையின் ஏனைய பாகங்களில் குடிவாசவுரிமை கொண்ட தமிழர்களுக்கும் கண்டியரல்லாத ஏனைய சிங்கள மக்களுக்கும் உரித்தான பொதுச் சட்டப்படியேற்படும் விவாக விளைவுகளைப் பற்றி ஆராய்வோம். சுருங்கக் கூறின் திருகோணமலை, மட்டக்களப்பு, மலைநாடு, கொழும்பு முதலிய இடங்களைத் தங்கள் நிரந்தர குடிவாச இடங்களாகக் கொண்டுள்ள தமிழர்களுக்கு விவாகத்தினுல் விளையும் விளைவுகளைப்பற்றியே இங்கு ஆராய்வோம்.

### விவாகச் சட்டங்கள்

மேற்கூறிய தமிழர்களின் உரிமைகள் 1877ம் ஆண்டுக்குமுன் ரோமன் டச் சட்டக் கொள்கையின்படி தீர்க்கப்பட்டன. 1877ம் ஆண்டு முதல் 1924ம் ஆண்டுவரை அவர்களின் விவாக உரிமைகளும் விளைவுகளும் 1876ம் ஆண்டுச்சட்டமாகிய 'விவாக உரிமையும் உரிமைத் தத்துவமும்' எனும் நிருபணச் சட்டத்தின்மூலம் தீர்க்கப்பட்டன. 1924ம் ஆண்டுக்குப் பிறகு விவாகமாகிய பெண்களின் உரிமைகள் 1923ம் ஆண்டின் 23ம் இலக்கச் சட்டமாகிய விவாகமான பெண்களின் ஆதனச் சட்டத்துக்கமையும். இங்கு தேச வழமைக்குட்பட்ட விவாகமான பெண்களின் உரிமைகள் 1911ம் ஆண்டின் யாழ்ப்பாண விவாக உரிமைகளும் உரிமைத் தத்துவமும் (Jaffna Matrimonial Rights and Inheritance) சட்டத்துக்கமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய விவாகமான ஏனைய தமிழ் பெண்களின் விவாக உரிமைகளை ஆராயுங்கால் 1924ம் ஆண்டுக்கு முன்னுள்ள சட்டங்கள் சரித்திர பூர்வமாயுள்ளபடியால் அவற்றைத் தவிர்த்து இன்றுள்ள சட்ட நிலைமையையே இக்குறுகிய கட்டுரையில் ஆராய்வது உசிதமாகும்.

### அந்தஸ்தில் மாறுதல்

1924ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் தேதிக்குப் பின் விவாகமான பெண்களின் விவாகத்தினுல் உண்டாகும் விளைவுகள் பெண்களின் சட்டரீதி அந்தஸ்துக்களில் பெரும் மாறுதல்களை விளைத்து அவர்களை விவாகமாகாத பெண்கள் அனுபவிக்கும் உரிமைகளுக்காளாக்கின. (எல்லாச் சட்டங்களிலும் விவாகமான பெண் விவாகமாகாத தன் சகோதரியின் நிலையிலும் பார்க்கச் சட்டப்படி சுவாதீனம் குறைந்தவள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது) தற்காலத்தில விவாகமான பெண்களின் விவாக விளைவுகள் பின்வருமாறு:-

### கணவனின் சட்டமே மனைவிக்கும்

(1) முதலாவதாக, தேச வழமைச் சட்டத்துக்கு அல்லது கண்டியச் சட்டத்துக்கு ஆட்பட்ட ஆண்களை முடித்த பெண்கள் யாவரும் 1924ம் ஆண்டுச் சட்டத்துக்கமையாமல் தத்தம் கணவருக்குரிய சட்டத்துக்கே அமைவர். ஆகையால் அப்பேர்பட்ட பெண்களுக்குக் கீழ்க்கூறும் அம்சங்கள் அமையா; உதாரணமாக கொழும்பையே குடிவாசமாகக்கொண்ட ஒரு பெண் யாழ்ப்பாணவாசியான ஒரு கணவரை முடித்தால் அவளுக்கு இச்சட்டம் பொருந்தாது அதுபோலவே யாழ்ப்பாணவாசியான ஒரு பெண் யாழ்ப்பாணவாசியல்லாத ஒரு கணவனை விவாகம் செய்தால் அவள் மேற்கூறிய சட்டத்துக்கமைவாள்.

### ஆதன உரிமை

(2) இரண்டாவதாக, மேற்கூறிய சட்டங்களுக்குட்பட்ட ஒரு விவாகமான பெண் தன்னுடைய அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை தன்னுடைய சொந்த ஆதனமாக அதை விற்கவோ மரணசாசனம்மூலம் அல்லது ஜீவிய காலத்தில எவ்விதமாகவும் பராதீனப்படுத்தவோ உரிமையுள்ளவளாவாள். அதுவுமன்றி விவாகமாகாத பெணபோல அவள் ஆதனங்களைத் தன் சொந்தத்துக்கு வாங்கவும் தன்னுடைய உத்தரவாதங்கள் (Liabilities) யாவற்றிற்கும் தன ஆதனங்களை உட்படுத்துவதற்கும் உரிமையுடையவளாவாள்.

### வழக்குத் தொடரும் உரிமை

(3) மூன்முவதாக, நீதிமன்றங்களில் தன் சொந்தப் பெயரிலே தனிமையாக வழக்கு வைக்கவும் வழக்கில் வாதியாக நிற்கவும் உரித்துடையவளாவாள். தேச வழமைச் சட்டப்படி விவாகமான பெண் தன் கணவன் உயிருடனிருக்கும்வரை அவன் துணையுடன்தான் நீதிமன்றங்களில் ஆஜராகலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆதனக் கட்டுப்பாடு

(4) ஒரு விவாகமான பெண் தன் ஒப்பந்தங்களினுல் தன் தற்கால அல்லது பிற்காலத்தில் பெறும் ஆதனங்களை விவாகமாகாத பெண்போல் கட்டுப்படுத்த முடியும். முன்னைய சட்டத்தில் அப்படியில்லை.

### வியாபாரம்

(5) ஒரு விவாகமான பெண் தன் கணவனுடனல்லாது தனிமையாக ஒரு வியாபாரத்தை நடாத்தி அவ்வியாபாரத்தால் நட்டமடைந்தால் அவள் விவாகமாகாத பெண்போல் பாவிக்கப்பட்டு எட்டாம் கடனைச் சட்டத்துக்கு (Insolvency) ஆளாவாள்.

### தனிப்பட்ட ஆதன உரிமை

(6) பின்வரும் ஆதனங்கள் அதாவது விவாக காலத்திலே அவளுக்குரித்தாகிய அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களும், விவாகத்துக்குப் பிறகு அவளைச சார[illegible]னங்களும், விவாகத்துக்குப் பிறகு தன் சொந்த உழைப்பினுல் அல்லது வியாபாரத்திலுல் பெற்ற ஆதனங்கள் யாவும் அவளின் தனிப்பட்ட ஆதனங்களாகக் கருதப்பட்டு அவ்வாதனங்களை அவள் தன் விருப்பப்படி பராதீனப்படுத்தும் உரிமை அவளுக்குக் கொடுக்கப்படும்.

### காசு உரிமை

(7) மேற்கூறிய சட்டத்தின் 10ம் சரத்தின்படி 1924ம் ஆண்டுக்குமுன் விவாகமாகிய பெண்கூட 1924ம் ஆண்டுக்குப் பின் எவ்வழியாலும் (சொந்தபிரயாசையால் ஆனலும் சரி நன்கொடை மூலமானலும் சரி அல்லது கொள்வனவு மூலமானலும் சரி) அவளுக்குச் சொந்தமாக வந்த ஆதனங்களை தன் கணவனின் விருப்பமின்றி தான் வைத்திருக்கவோ அல்லது பராதீனப்படுத்தவோ உரித்துள்ளவளாவாள் ஆனல் 1924ம் ஆண்டுக்குமுன் தனக்குரிமையாக வந்த ஆதனத்தை அவள் கணவனின் சம்மதமின்றிப் பராதீனப்படுத்தும் உரித்து அவளுக்கில்லை; எனினும் அப்பேர்ப்பட்ட ஆதனத்தை தன்னுடைய கணவனின் அனுமதியுடன் விற்று அதை ரொக்கக் காசாக வைத்திருந்தால் அந்த ரொக்கக் காசை அவள் தன் விருப்பத்தின்படி பிறகு பராதீனப்படுத்தலாம்.

### முதலீட்டுத் தொகை

1924ம் ஆண்டுக்குமுன் விவாகமாகிய பெண்ணுக்கு அவ்வாண்டுக்குமுன் ஈட்டு மூலமாக ஒரு தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தால் அம்முதலீட்டுத் தொகை அவளின் சொந்தப் பாவிப்புக்காக விடப்பட்ட ஆதனமெனக் கருதப்பட்டு அவ் ஈட்டு முதலீட்டை தன் கணவனின் அனுமதியின்றி அவள் பராதீனப்படுத்தவோ அத்தொகையை வசூல்பண்ணியதற்குப் பற்றுச் சீட்டுக் கொடுக்கவோ உரிமையுள்ளவளாவாள். ஆனல் அவள் தன்னுடைய கணவனுக்குரிய பணத்தை அவனின் சம்மதமின்றி தன் பெயரில் முதலீடு செய்திருந்தால் அவன் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்து அதைத் தானே வசூல்பண்ணும் உரித்துடையவனுவான்.

### கடன் வசூல்

அதுபோலவே ஒரு கணவன் தனக்குக் கடன் கொடுத்தவர்களை ஏமாற்றுமுகமாக தன் மனைவிக்குத் தன் ஆதனங்களை நன்கொடையாகக் கொடுத்தால் அவ்வாதனங்களை அக்கடன்காரர்கள் பிடிக்க உரித்துண்டு. அதுவுமன்றி மேற்கூறிய [illegible] தன் மனைவியின [illegible] செய்திருந்தாலும் அது அவனுடைய ஆதனமாகக் கருதப்பட்டுக் கடனாளிகளின் கடனுக்கு வருலாக்கப்படும்.

### இன்சூர் பணம்

(8) ஒரு விவாகமான பெண் தன் சொந்தப்பாவிப்புக்காகத் தன்னுடைய அல்லது தன் கணவனுடைய ஆயுளை பீமா (Insure) செய்யலாம் ஒரு கணவன் தன் ஆயுளை பீமா இன்சூர்செய்து அதில் வரும் பணத்தைத் தன் மனைவி அல்லது மக்களின் பாவிப்புக்காக விட்டால் அப்பீமாவால் வரும் பணம் மனைவிக்கும் மக்களுக்குமே சொந்தமேயொழிய கணவனின் கடன்காரர் அப்பணத்தைப் பிடிக்க முடியாது. ஆனல் கடன்காரரை ஏமாற்றுமுகமாக அவ்பீமாவுக்கு வேண்டிய பீமாவட்டத்தை (Premium) செலுத்தினுல் அததொகையை மட்டும் கடன்காரர் கழித்து எடுக்கலாம்.

### சட்டரீதியான பரிகாரம்

விவாகமான பெண்களுக்குரிய சட்டரீதியான பரிகாரங்களை (Remedies) பற்றி இனியாராய்வோம். ஒரு விவாக மாகாத பெண் தன் சொந்தப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக என்ன சட்டரீதியான பரிகாரங்கள் தேட முடியுமோ அதுபோலவே விவாகமான பெண் (1924-ம் ஆண்டுக்கு முன்னுலாவது அல்லது பின்னுலாவது விவாகம் செய்திருந்தாலும்) தன் தனிப்பட்ட பாவிப்புக்கு விடப்பட்ட ஆதனங்களை காப்பாற்றுவதற்கு தன் கணவனுட்பட்ட எந்தபர் மீதும் நடவடிக்கையெடுக்க உரித்துடையவளாவாள். ஆனல் தன் தனிப்பட்ட ஆதனத்தைக் காப்பாற்றுவதற்கல்லாமல் வேறெந்த நோக்கத்துடனும் தன் கணவன் மீது நஷ்ட ஈட்டுக் குற்ற (Torts) வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

### சாட்சியம் கூறல்

பொதுவிலே ஒரு கணவன் மனைவிக்கு மாருகவும் மனைவி கணவனுக்கு மாருகவும் சாட்சி கூற முடியாது. ஆனல் தனிப்பட்ட ஆதனத்தைக் காப்பாற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்ட வழக்குகளில் கணவன் அல்லது மனைவி சாட்சியம் கூறலாம். ஆனல் கணவன் அல்லது மனைவி குற்ற எதிரி (Accused) யாயிருந்தால் மற்றைய தம்பதியின் விருப்பத்துக்கு மாருக அவரை அல்லது அவளை கட்டாயப்படுத்தி சாட்சி கூறப் பண்ண முடியாது. அவர்கள் விரும்பினுல் மாத்திரம் அவர்கள் சாட்சியம் கூறலாம்.

### தண்டனைக் குற்ற வழக்கு

கணவன் மனைவியிருவரும் இல்லற வாழ்க்கை நடத்தும் காலத்திலே ஒருவருடைய தனிப்பட்ட ஆதனத்தை மற்றவர் அபகரித்து விட்டாரென்றுதண்டனைக் குற்ற வழக்குக் கோரச் சட்டம் இடம் கொடுக்க மாட்டாது; அவர்களிருவரும் பிரிந்திருக்கும் காலத்திலும் அவ்வாதனத்தைப் பிரியும் சமயத்திலே அபகரித்துக் கொண்டு போனுர் என்று நிரூபித்தால் தான் அவ்விதத் தண்டனைக் குற்ற (Criminal) வழக்கு வைக்க முடியும்.

### கடன் பொறுப்பு

ஒரு பெண் தன் விவாகத்துக்கு முன் கடன் பட்டிருந்தால் அவள் தனக்கென விடப்பட்ட தனிப்பட்ட ஆதனத்தின் பெறுமதியளவுக்கு மட்டும் தன் கடனுக்குப் பொறுப்பாளியாவாள். மிகுதித் தொகைக்கு அவள் பொறுப்பாளியல்லள். அதுபோலவே ஒரு கணவன் தனக்கு மனைவியிடமிருந்து வந்த பொருளின் பெறுமதி

(13-ம் பக்கம் பார்க்க)

தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.


நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில், எம்மிடமும் கிடைக்கும்.

விலை 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்ரேட், புறக்கோட்டை
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களிப்பு!



சம்பு பிலிம்ஸாரின் "பாட்டாளியின் சபதம்" என்ற படத்தில் சாரங்கபாணியும் செல்லமும்.

# பரப்பிரம்மம்

நாடக விமர்சனம்

தமிழ் நாடு டில்லிக்கு அடிமைப்பட்டு அல்லல் உறுகிறது. அடிமைத் தளை வலுக்க ஆரியம் ஆதரவு அளிக்கிறது. தமிழன் நிலைமையை உய்த்து உணர்ந்து துடிக்கிறான்; விடுவிக்க விழைகிறான். அதனால் தொல்லைக்கு ஆளாகிறான்.

இடையில், தமிழ் நாடு ஆரியத்துக்கு முடிவு கட்டி விடுகிறது. தமிழ் நாடும் தமிழனும் கைதிக் கூண்டில்! தீர்ப்பு வழங்கப்படுகிறது. அதன்படி தமிழன் தமிழ் நாட்டைத் தாம் பெற்று மகிழ்கிறான்.—இந்தக் கருத்தை வலியுறுத்த தமிழ் நாட்டுக் கலைஞர் மு. கருணாநிதி எழுதிய நாடகந்தான் பரப்பிரம்மம்.

### விளம்பரமும் கிண்டலும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை புதுமைக் கலையரங்கத்தின் சார்பில் அதை இங்கு தயாரித்து அளித்த ஈழத்துக் கலைதாசன் தமிழ் நாட்டுக் கலைஞர் கருணாநிதியை ஒரு படி தாண்டிக் குதித்துவிட்டார். அப்படி இல்லாவிட்டால் மூதலாங் குறுக்குத் தெருப் புத்தகசாலை விளம்பரம், இளஞ்செழியனுக்கும் கலைதாசனுக்கும் அறிமுகப், இ. தி. மு. கழகக் கூட்டங்கள் பற்றித் தம்பட்டம் எல்லாம் நாடகத்தில் வர முடியுமா? இந்த வரிசையில் வந்த வற்றுள் 'ஆகாஷ்வாணி' கிண்டல் மட்டும் அற்புதமாக இருந்தது.

### சுமை

சேரன் செங்குட்டுவன் கல் சுமந்த கதை நாடகத்தில் குட்டி நாடகமாக இடம் பெற்றது மிகை. பார்த்தவர்களுக்கு அது வீண் சுமை. ஆயினும் சிவாஜியை அடியொற்றி, அவர் பேசிய அதே அடுக்கு வசனங்களைக் கலைதாசன் அள்ளி வீசியது சுவையாசத்தான் இருந்தது. அதற்காக நாடகத்தை வலுவில் வளர்த்ததை முறையாகக் கொள்ள முடியாது.

### மாலையால் வந்த வினை

மேடையில் நடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு திடீரென்று பாய்ந் தோடிப் போய் மாலை போடுவது அறவே கூடாது. இதனால் நாடகத் தொடர்பு அறுந்து விடுகிறது. ரஸிகர்களின் கவனம் நாடகத்திலிருந்து வேறு திசைக்குத் திருப்பப்படுகிறது. இதனால் எல்லாமே கெட்டுவிடுகின்றன. பரப்பிரம்மம் நாடகத்தில் இது விஷயம் இவ்வளவோடு நின்றுவிடவில்லை. நாடகம் முடிந்த பின்னரும் தொல்லை தொடர்ந்தது. ரோட்டில் சண்டையில் ஆரம்பித்து மண்டை உடைந்ததில் முடிந்தது. கேவலம், எல்லாம் மாலையால் வந்த வினை!

### விசித்திர நாடகம்

நாடகத்தோடு நாடகமாக இன்னுமொன்று நடந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். நடிகை ஒருத்தி நாடகத்தில் தமது காதலனை நடித்தவருக்கு மேடையில் வைத்து ரஸிகர்கள் முன்னிலையில் மாலை போட்டுத் தமது மகிழ்ச்சியையும் பாராட்டையும்தெரிவித்துக் கொண்டார். மேக் அப் ரூமில் செய்திருக்கலாம் மேடையில் செய்தது அன்னவருக்கோ அன்றி மாலை பெற்றவருக்கோ பெருமை தருவதாக இல்லை. பார்ப்பவர்கள் ஆய்...ஊய் போடவும் விசில் அடிக்கவும் அதுவாய்ப் பளிப்பதாகும்.

### ரஸமான கட்டம்

நாடகத்தில் மிக ரஸமான கட்டம் தேசியம்பிள்ளையின் மனைவியோடு வேலைக்காரன் சுடலை ஒரே கட்டிலில் நிம்மதியாகப் படுத்துறங்குவதும் அதைத் தேசியம் பிள்ளை எதிர்பாராத விதமாக வந்து பார்த்துக் குமுறுவதுமாகும். இதிலே ஒரே ஒரு தவறு. தேசியம் பிள்ளை துப்பாக்கியை நீட்டினார். வேட்டு தீர்க்கப்படவில்லை. ஆனாலும் மனைவி விழுந்து சாகிறாள். காட்சியில் இந்தக் கடைசிப் பகுதியில் Reality அதாவது உண்மை நிலை இல்லாததால் அதன் சுவை அடியோடு கெட்டுவிடுகிறது. பரப்பிரம்மத்தைத் தமிழச்சி கத்தியால் குத்திக் கொல்லும் கட்டமும் இப்படித்தான். வேலைக்காரன் சுடலை கைதிக் கூண்டில் நின்றுற் போலத் திடீரென்று விழுந்து செத்த காட்சி இதற்கு விதிவிலக்கு. இயற்கையாக இருந்தது அது.

### நடிப்பு

வேலைக்காரச் சுடலையாக நடித்த கலைதாசனிடம் நல்ல நடிப்புத் திறமை காணப்படுகிறது. நகைச் சுவை கொப்பளிக்க நன்றாகப் பேசவும் செய்கிறார். மற்றும் பரப்பிரம்மமாக நடித்த எம். எஸ். தென்னவனும், தேசியம் பிள்ளையாக நடித்த பி. ஏ. மோகனும், தில்லையப்பராக நடித்த எஸ். குமாரசாமியும் தம்மிடமும் நல்ல நடிப்புத் திறமை உண்டு என்பதைக் காட்டினார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல் பாடல் காட்சி

### தீண்டாமை ஒழிப்புப் படம்

தீண்டாமை ஒழிப்பு பிரசாரத்திற்காக ஒரு சினிமாப்படம் தயாரிக்க டில்லி மத்திய அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது. இதற்காக ஒருபடத் தயாரிப்பாளருடன் பேச்சு நடந்தது. 2 லட்சம் ரூபாய் செலவில் இந்தப் படம் தயாரிக்கப்படும்.

இந்தத் தகவலை மத்திய அரசாங்க ரேடியோ சினிமா மந்திரிகேஸர் வெளியிட்டார். தீண்டாமை ஒழிப்புப் பிரசாரப் படங்கள் தயாரிக்க முன் வருகிறவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்கும் என்றும் அவர் சொன்னார்.

### விவசாயம் பற்றி சினிமா

விவசாய வளர்ச்சி பற்றி பிரசாரம் செய்ய சென்னை அரசாங்கம் சினிமாப்படம் தயாரித்துக் கொண்டு இருக்கிறது! இது போல், இன்னும் சில படங்களை தயாரிக்கவும் ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது!

இந்தத் தகவலை பொலீஸ் மந்திரி எம். பக்தவச்சலம் வெளியிட்டார்.

# சினிமாவும் நாடகமும்

## அண்ணாவின் கருத்து



"ஆரம்பப் பள்ளிக்கூடம் போன்றது நாடகம். கல்லூரிக்குப் போகும் மாணவனும் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படித்துத்தான் ஆக வேண்டும். அதுவே அவனுக்கு முதற்படியாக அமையும். அதுபோல நாடகங்களில் நன்றாக நடித்தால்தான் சினிமாவில் நுழைந்து பெயர் வாங்க முடியும்" இவ்வாறு அறிஞர் அண்ணா நாடக விழா ஒன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"நாடகங்களுக்கு மெருகு ஏற்ற வேண்டியது மிக மிக அவசியம்! அப்படி செய்வதற்கு ஒரே வழி, ஒவ்வொரு நாடகத்தையும் பலமுறை நடிப்பதுதான்.

'மேடையில் தோன்றி நடிப்பதற்கு முன்னால் நன்றாக பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மேடையில் தோன்றும் போது தட்டுத்தடுமாறாமல் சரளமாக நடிக்கலாம்.

"தற்பொழுது நாடகங்களுக்கு பொதுமக்கள் அவ்வளவாக ஆதரவு கொடுப்பது இல்லை! அதற்குக் காரணம் சினிமா படங்கள்தான்.

"நாடகங்களைவிட சினிமா

(13-ம் பக்கம் பார்க்க)

### இசைத்தட்டு மூலம் தீண்டாமை ஒழிப்பு

அரசாங்கத்தின் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்துக்காக திரைப்படப் பாடகர்களின் பாடல்களைக் கொண்டு இசைத் தட்டுகளைத் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பது ஏற்கனவே வந்த செய்தியே.

இதற்காக இப்பொழுது 4 பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரபல பாடகி டி. வி. ரத்தினமும் திருச்சி லோகநாதனும் பாடிய பாடல்கள் அவை.

# சென்ற ஆண்டில்

## தமிழ்நாடு சினிமாத்துறை

### படத் தயாரிப்பில் புதிய சாதனை!

## இரண்டு பேரிழப்புகள்

சென்ற ஆண்டில் தமிழ் நாடு சினிமாத் துறையில் ஒரு புதிய சாதனை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது முன் எந்த ஆண்டிலும் இல்லாதமாதிரி கடந்த ஆண்டில் மட்டும் ஆகக் கூடுதலான படங்கள் (72) தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த எழுபத்திரண்டில் ஐம்பத்தெட்டு அசல் தமிழ்ப் படங்களாகும். ஏனைய பதினான்கும் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளிலிருநது தமிழில் டப் செய்யப்பட்டவை.

### வெற்றிப் படங்கள்

நான்கு படங்கள் பிரமாதமான வெற்றி ஈட்டின. அவையாவன:- வீரபாண்டிய கட்டபொம்மன், கல்யாணப்பரிசு, மரகதம், பாகப் பிரிவினை.

### புது முகங்கள்

ஒரு புது நடிகரும் (ராமநாதன்) ஒரு புது நடிகையும் (ஜெயஸ்ரீ) கடந்த ஆண்டில் தமிழ்ப்படவுலகில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். நடிகர் ராமநாதன் "கண் திறந்தது" என்ற படத்திலும் நடிகை ஜெயஸ்ரீ "தெய்வ பலம்" என்ற படத்திலும் நடித்திருப்பது தெரிந்ததே.

### நடிகர்-நடிகை


கடந்த ஆண்டில் நடிகர்களில் எஸ். எஸ். ராஜேந்திரனும் நடிகைகளில் சரோஜா தேவியும் நடித்த படங்களே அதிகமாக வெளிவந்தன. ராஜேந்திரன் நடித்தவை 10. சரோஜாதேவி நடித்தவை 6.

### இழப்புகள்

இரண்டு பேரிழப்புக்களும் கடந்த ஆண்டில் தமிழ்நாடு சினிமாத் துறையில் ஏற்பட்டு விட்டன. ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதரும் புதுமைக் கவி பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரரும் இயற்கை யெய்தினார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## கொதிப்பு!



நாராயணன் கம்பனியாரின் "கண் திறந்தது" என்ற புதுமைச் சித்திரத்தில் மைனாவதியும் மாஸ்டர் வியாஸ்ும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரப்பிரம்மம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கதாநாயகன் விமலஞக நடித்த என் எம் கலையன்பன் நடித்ததைவிட அதிகம் பேசிஞர். அதிலேயே அவர் கவனம் செலுத்திஞர். கதாநாயகி மகேஸ்வரியின் நடிப்பும் ஆட்டமும் எடுபட அதிகமதிகம் பயிற்சி வேண்டும். குமாரி ராஜம் சினிமா நடிகை பண்டரிபாயைப்போலக் குடும்பப் பெண்ணுகத் தோன்றுவதற்கு உரிய தோற்றமும் முகபாவமும் உடையவர். நடிப்பும் அதோடு இருப்பதாஞல் அவர் விஷயமே வேருகிவிடும்.

### மணிமேகலை ஆடலும் பாடலும்

செல்வி மணிமேகலையின் ஆடலும் பாடலும் கூடியிருந்தவர்களை குதூகலிக்கச் செய்தன. அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு. அவருடைய ஆடல் நாடகத்தின் உதிரி நிகழ்ச்சிகளாக இடம் பெற்றது. ஆனல் எப்பொழுதும் நடனங்களை நாடகத்தோடு தொடர்பு படுத்தி வைப்பதே சிறப்பு. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

### வாத்தியக் கோஷ்டி

வாத்தியக் கோஷ்டியினர் பிச்சையப்பா குழுவினர் அன்று செம்மையாக வாசித்ததாகச் சொல்லுவதற்கில்லை. ஆனல் பிச்சையப்பாவின் பாடல்கள் சுவையாக இருந்தன. குறிப்பாக ஒன்று. நாடக ஆரம்பத்தில்,

"எட்டுத்திக்கும் வெற்றி முரசு
கொட்டிவாழும்
தமிழன்னையே...ஆ...ஆ...ஆ
யட்டி தொட்டு உன் புகழை
பார் முழுதும் பரப்பிடுவோம்;
என்றும் நீ..வாழ்க..வாழ்க"

என்று தொடங்கும் பாடலை அவர்பாடினர். அது இன்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஒலி, ஒளி அமைப்புகள் வேண்டியளவு திருப்திகரமாக இல்லை. மேக் அப் கலைஞர் சுப்பு வேலையில் சோடை போய் விடவில்லை.

பரப்பிரம்மம் இன்னும் 'பாலிஷ்' (Polish) செய்து நடிக்கப்படுமானல் அது ஒரு சிறந்த நாடகமாகும்.

—கே. கே. ஆர்.

## விவாகவிளைவுகள்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வளவுக்கு மட்டுமே தன் மனைவியின் விவாகத்துக்கு முன் பட்ட கடனுக்குப் பொறுப்பாளியாவான்.

### உரிமைத் தத்துவம்

ஒரு மனைவி ஒரு தர்மகர்த்தாவாக அல்லது உரிமைத் தத்துவக்காரியாக விருந்தால் அவள் அத்தத்துவங்களை யனுபவிக்கும் சந்தர்ப்பத்தில் தன் கணவனின் சம்மதமின்றி அதற்குட் பட்ட ஆதனங்களை பராதீனப் படுத்த முடியும். கணவன் நோய் காரணம்பற்றியோ அல்லது வேறெக்காரணம் பற்றியோ தன்னைத்தாபரிக்க முடியாமல் திணறும் சந்தர்ப்பங்களில் மனைவி போதிய ஆதனங்களுடையவளாயின் அவள் அவனைத் தாபரித்தே தீரவேண்டும். அதுபோலவே அப்பேர்ப்பட்ட ஆதனங்களுடைய தாய் தகப்பன் இருந்த போதிலும் தன் பிள்ளைகளைத் தாபரிக்கும் கடமைப் பாடுள்ளவளாவாள். ஆனல் இதன் காரணமாக தகப்பன் தன் பிள்ளைகளைத் தாபரிக்கும் கடமையினின்றும் நீக்கப்பட மாட்டான். 1924-ம் ஆண்டுக்கு முன் ஒரு விவாகமான பெண் பிணைக்கு நின்ருல் அது செல்லுபடியாகாது. ஆனல் இப்போ அவள் பிணைக்கு நின்று தன்னைக் கட்டுப் படுத்த முடியும்.

"மேற் கூறியவைகளே விவாகத்திஞல் வரும் விளைவுகள்.

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழியக்கத் தொண்டர்கள்

383 சு. துரைராசா, கொட்டாஞ்சேனை. 384 ஏ. டீ. சம்பந்தன், லுணுவில 385 மூ. சனகராசா, மத்துகாமம். 386 சு. வின்னாசா, யாழ்ப்பாணம். 387 செல்வி செல்லமுத்து கார்த்திகேசு, நுணுவில்.388 ரா ராமையா, தெரணியகலை. 389 இரா. பா. முத்துக்குட்டி, கலகா.

390 நாகலிங்கம் சிவயோகம், கொழும்புத்துறை. 391 எம். ஆர். முத்து. பதுளை. 392 ஏ எம் ஏ. அஸீஸ்,மருதமுனை. 393 ஆ. தங்கவேலாயுதம், வல்வெட்டித்துறை. 394 ஆ ந. செட்டி, பொகவந்தலாவ. 395 செல்வி சரசுவதி சங்கரப்பிள்ளை,மல்லாகம். 396 த. சோமசுந்தரம், பசறை. 397 கலா. பரமேஸ்வரன், புத்தூர். 398 இ. சி. நாகலிங்கம், திருகோணமலை. 399 க. சிவானந்தன், தாவடி.

400 செல்வி சு. சிகாமணி, அவிசாவலை. 401 மி. முகம்மது இஸ்மயில், வாழைச்சேனை 402 நா. ம. சிவசாமி, யாழ்ப்பாணம். 403 தி விஜயகுமார், நாவேஞயா 404 நா. தியாகராசா, நானு ஒயா. 405 திருவாட்டி ப. தியாகராசா, நானுஓயா. 406 தி. இராசகுலவீரசிங்கம்,கைதடி 407 ஆ. கந்தையா, கைதடி. 408 த. பாலசுப்பிரமணியம், கைதடி. 409 செ. வேலாயுதம், கைதடி.

410 தி. திசைராசசிங்கம், கைதடி. 411 அ. சிற்றம்பலம், கைதடி. 412 சு. குமாரசாமி, கைதடி. 413 ச. சிவசுப்பிரமணியம், கைதடி.414 சே. சுந்தரம், கைதடி. 415 சே. செல்லத்துரை, கைதடி.

## சினிமாவும் . . .

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் கண்ணைக் கவரும் காட்சியும், பார்ப்பவர் உள்ளத்தை தொடும் காட்சிகளும் நிறைய வருகின்றன! ஆகவே சினிமா பார்க்க பொதுமக்கள் விரும்புகிருர்கள்!

"நாடகங்களுக்கு பொது மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்! நாடகத்தை மக்கள் பாராட்டுகிருர்கள் என்று தெரிந்தால், நடிகர்கள் மகிழ்ச்சி அடைகிருர்கள்! இன்னும் நல்ல முறையில் நடித்து, மக்கள் ஆதரவைப் பெற வேண்டுமென்று விரும்புகிருர்கள்"—இவ்வாறு அண்ணு கூறினர்.

## சென்ற ஆண்டில்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

### நிகழ்ச்சிகள்

ஆடல் அழகி வைஜயந்திமாலாவின் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணம், பத்மினி ராகினி சகோதரிகளின் சிங்கப்பூர் பிரயாணம், சௌகார் ஜானகி ஜப்பான் விஜயம், சினிமா அதிபர் ஏ. வி. எம்மின் அமெரிக்கா, ஜப்பான் சுற்றுப்பிரயாணம், நடிகர் திலகம் சிவாஜிகணேசன், ஜெமினிகணேசன்—சாவித்திரி—ஸ்ரீதர் ஆகியோரின் இலங்கை விஜயம் ஆகியன சென்ற ஆண்டின் குறிப்பிடத்தக்க சினிமாத்துறை நிகழ்ச்சிகளாகும்.

—

### கர்ப்பத்தடை பிரசாரத்திற்கு இசைத்தட்டு

கர்ப்பத்தடைப் பிரசாரத்துக்காக டி. வி ரத்தினம், திருச்சி லோகநாதன் ஆகியோர் பாடிய இசைத் தட்டுகளில் மொத்தம் 1,000 வாங்கியுள்ளது அரசாங்கம்.

இந்த இசைத் தட்டுகள் கர்ப்பத்தடைப் பிரச்சாரப் பொதுக் கூட்டங்கள் நடக்கும் பொழுது ஒலி பரப்பப் படும்.

## நேரடி....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓரளவிற்குத் தீர்த்தவர்களாகிருேம்.

### ஆதரவு அளியுங்கள்

"எனவே ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் மகளும் தமிழியக்கத்தின் செய்திக்குச் செவிசாய்க்க வேண்டியது அவசியமாகும். எதிர்வரும் பொங்கல் தினத்தையடுத்து நடைபெறவிருக்கும் தமிழியக்க வாரம் சிறப்புற நடைபெற ஆதரவு நல்குமாறு எல்லோரையும் வேண்டுகிருேம்.

### தமிழியக்க வாரம்

"தமிழியக்க வாரத்தையொட்டி இளந்தமிழர் இயக்கம் தமிழ் மொழி இயக்கத்துடன் இணைந்து பொதுக் கூட்டம், ஊர்வலங்கள் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவிருக்கின்றது. அத்துடன் அவ் வாரத்தில் எமது தொண்டர்கள் அஞ்சலகம் போன்ற அரசாங்க அலுவலகங்களுக்குச் சென்று, அங்கு வரும்பொது மக்கள் தம் அலுவல்களை அதாவது கடிதத் தொடர்பு போன்றவைகளைத் தமிழிலேயே வைத்துக்கொள்வதற்கு உதவி செய்வர்"—இவ்வாறு திரு கரிகாலன் தமது அறிக்கையில் கூறியிருக்கிருர்.


மகத்தான 3-வது வாரம்!

சென்ட்ரல் ஓடியன்
(கொழும்பு) (கல்கிசை)

சென்ட்ரல் லிபர்ட்டி ஜோதி
(பருத்தித்துறை) (பதுளை) (திருகோணமலை)

காணமற்போன கணவனைக் கண்டுகொள்ளக் காத்திருக்கும் பெண்ணின் நம்பிக்கையும் துணிச்சலையும் படம் பிடித்துக் காட்டும் குடும்பக் கதை.



கண் நிறைந்த கணவன்

ஏ. நாகேஸ்வரராவ்-ஜமுனு-ஆர். நாகேஸ்வரராவ்-கிரிஜா-ரேலங்கி
நடித்தது
நாகரிக நங்கையும் நவ மனிதனும் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மையை உணர்த்தும் படத்தைப் பார்த்து மகிழுங்கள்.



4-வது வாரம்!
எல்பின்ஸ்டன்
ரெக்ஸி
வின்ஸர் (யாழ்ப்பாணம்) வேல்ஸ் (கண்டி)
நியூஇம்பீரியல் (மட்டக்களப்பு) குமரன் (மன்னார்)
ஆகிய தியேட்டர்களில்
அதிசயப் பெண்
வைஜயந்திமாலா
நடித்தது
... டெக்னிகலரில் நடனங்கள்

3-வது வாரம்!
செல்லமஹால்
எம். ஆர். ராதா
நடிக்கும்
தாமரைக் குளம்

எதிர்பாருங்கள்!
எல்பின்ஸ்டன்
ரெக்ஸி
ஜெமினி கணேசன்
நடிக்கும்
நல்ல தீர்ப்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம்: 18

# இடம்பட வீடெடேல்

நாம் எப்போதும் குறைப்பட்டுக் கொள்கிறோம். என்ன இருந்தாலும் ஏதோ ஒரு குறை இருப்பதாகவே எண்ணிக் கொள்கிறோம். பணம்-பண்டம், காணி-பூமி, வீடு-வாசல் எல்லாம் ஒரே தடவையில் பெறவேண்டுமென்பதே எல்லோர் ஆசையும். எதைப் பெற்றுக்கொண்டாலும் மனம் திருப்திப்படுவதாயில்லை. பெரிய வீடு, நிறைந்த செல்வம், அதிக காணி வேண்டுமென்ற ஆசை எங்கிருந்தோ மீண்டும் தலைகாட்டத் தொடங்குகிறது.

இந்த ஆசை பேராசையாக மாறி மனிதனை மாய்த்துவிடுவதும் உண்டு. தன் அயலவனைப் பார்க்கிலும் தான் எல்லாவற்றிலும் உயர்ந்திருக்க வேண்டுமென்ற அபரிமிதமான எண்ணம் எம்மில் குடிகொண்டு விடுகிறது. அயலவன் சைக்கிள் வண்டி வாங்கினால் நான் மோட்டார் வண்டி வாங்க வேண்டும். அவன் குழந்தை பட்டு அணிந்தால் என் குழந்தை பீதாம்பரம் அணிய வேண்டும். அவன் எது செய்கிறானோ அதைவிட மேலாக நான் செய்ய வேண்டும்.

மற்றவனை மிஞ்சி வாழ வேண்டுமென நினைப்பதில் தவறொன்றுமில்லை. ஆயினும் அப்படிச் சீவிக்க எமக்கு இயல்பு வேண்டுமே! வருவாய்க்கு மிஞ்சிய செலவு செய்தால் நாளடைவில் குடும்பம் குட்டிச்சுவராக வேண்டியதுதான்.

மற்றவன் எதையும் செய்யட்டும். எமது இயல்புக்கு அப்பாற்பட்டதை நாம் செய்ய முயற்சிக்கக்கூடாது. அப்படி ஒன்றைச் செய்து ஈற்றில் துன்பப்படுவதிலும் பார்க்க அது இல்லாமலிருந்து விடுவது மேல்.

அயலவன் எப்படிச் சீவித்தாலும் எமக்கென்ன? இறைவன் அளித்ததைக்கொண்டு திருப்திப்பட்டு வாழ வேண்டும். எல்லோரையும்போல் நாமும் வாழ வேண்டுமெனில் முடியுமா?

ஆசைக்கு அணைபோட்டுக் கட்டுப்படுத்த வேண்டும். நினைத்தபடியெல்லாம் நடக்கக்கூடாது. கையில் உள்ளதைக்கொண்டு திருப்திப்பட வேண்டும். கிடைக்க முடியாததைக் கிடைக்கப்போவதாக எண்ணிக்கொண்டு செயலில் இறங்கிவிடக்கூடாது.

மாளிகையொன்றில் சீவிக்க வேண்டியவன் செல்வந்தன். அவனால்தான் அதைப் பராமரித்து நல்ல நிலையில் வைத்துக்கொள்ள முடியும். ஏழைக்கு ஏன் மாளிகை? நாலு முழக் குடிசை ஒன்றே அவனுக்கு மாளிகையாச்சே!

பெரிய வீட்டைக் கட்டி அதைப் பாதுகாக்க முடியாது திண்டாட வேண்டும். எலியும் வெளவாலும் அங்கே குடிகொள்ளும். இதைவிட எமது இயல்புக்கேற்ற, அளவான சிறு குடிசையொன்று இருந்துவிட்டால் அது போதாதா?

—ஏ ஜீ ஆனந்தன்

# வளர்மதி

## சுதந்திரன் மாணவர் மன்றம்

# சுதந்திர தாகம்

சுதந்திரமாக வாழ விரும்பாத உயிர்களே உலகில் இல்லை. ஒவ்வொரு உயிரும் சுதந்திரமாகத் திரிவதில் தான் ஒரு தனி இன்பம் பெறுகின்றன. பகுத்தறிவற்ற பறவை, மிருகங்கள் கூட சுதந்திரமாக வாழ விரும்பும்போது பகுத்தறிவுள்ள மனிதர்கள் மட்டும் சுதந்திரமாக வாழ விரும்புவதில் வியப்பொன்றும் இல்லையே. கூண்டிலே அடைபட்டுக் கிடந்த பறவைகளைத் திறந்து விட்டதும் எவ்வளவு சந்தோஷமாக இறக்கைகளை அடித்துக்கொண்டு பறந்து செல்கின்றன. மனம்போல் ஆசை தீரச் சுற்றித் திரிகின்றன. பறவைகளைக் கண்டு மனிதர்களும் "நாமும் ஏன் பறவைகளாகப் பிறக்காமல் விட்டோம்" என்று பெருமைப்படுகிறார்கள்.

இச்சைபோல் இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோரும்
உச்சமாம் மனித ஜன்மம்
சுதந்திர உணர்ச்சியின்றி
நச்செனும் அடிமை வாழ்வை
நயந்திட ஞாயமுண்டோ?
நிச்சய சபதம் பூண்டு சுதந்திரம்
நிலைக்கச் செய்வோம்.

அறிவிலே குறைந்த ஈ, புழு, எறும்பு என்பன சுதந்திரமாக வாழ முயலும்போது படைப்பிலே உயர்வான மனிதர்கள் நஞ்சை ஒத்த அடிமை வாழ்வை விரும்புவதில் ஞாயமுண்டோ? ஆகவே திடமான ஒரு சபதம் செய்து சுதந்திரத்தை நிலைநாட்டுவோம் எனக் கூறுகிறார் நாமக்கல் கவிஞர். இதனையே மேலேயுள்ள பாடல் கூறுகிறது. அடிமை வாழ்விலே ஊறியிருக்கும் தமிழர்களுக்காகவே "சுதந்திரத்தை நிலைநாட்டுவோம்" எனக் கூறுகிறார். இடைக்காலத்தில் தமிழ் நாட்டில் அன்னியரின் ஆதிக்கம் வலுத்ததன் காரணமாகத் தமிழ் நாட்டினர் பல கொடுமைகளுக்குள்ளாகினர். கேவலம் அடிமைகள் போல கைகட்டி வாழத் தலைப்பட்டனர். இக் காலத்தில் தான் புரட்சிக்கவி பாரதி, பாரதிதாசன் நாமக்கல்லார் போன்றோர் சுதந்திர உணர்ச்சி யூட்டும் பல கவிதைகளை மக்களுக்களித்தனர். புரட்சிக் கவி பாரதியின் உள்ளத்திலே சுதந்திர உணர்ச்சி கரைபுரண்டோடியது. மக்கள் எல்லோரும் கேவலம் மந்தைக் கூட்டம் போல் வாழ்வதை அவர் வெறுத்தார். மனிதன் மனிதனாகவே வாழ வேண்டுமென விரும்பினார். அதனால் உள்ளத்தைத் தொடும் பல உருக்கமான கவிதைகளை மக்களுக்கு உற்சாகத்துடன் ஊட்டினார். அமிர்தத்தை உண்ண ஆசையுடையவர்கள் கள்ளின்மேல தங்கள் மனதைச் செலுத்துவார்களோ? அதைப்போல் உலகில் முதன்மையாகவுள்ள வீர சுதந்திரத்தை விரும்புகிறவர்கள் வேறு எதையும் விரும்புவார்களோ என்று கேட்கிறார் பாரதி. அதையே கீழேயுள்ள பாடல் விளக்குகிறது.

வீர சுதந்திரம் வேண்டிநின்றார்
பின்னர்
வேறொன்று கொள்வாரோ?
என்றும்
ஆரமுதுண்ணு தற்காசை
கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவரோ?

இப் பாடலிலிருந்து கவியின் சுதந்திர தாகத்தை ஓரளவு மட்டிட்டுக் கூறலாம். ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன அளிக்கப்பட வேண்டும் அது மட்டுமல்ல தனி மனிதனுக்கு எல்லாவகைச் சுதந்திரமும் அளிக்கப்பட வேண்டும். இப்பொழுது பெரும்பாலும் உலக நாடுகளனைத்தும் சனநாயக நாடுகளாக இருக்கின்றன. சனநாயக நாடுகளில் கூட ஒரு சாரார் சுதந்திரமுள்ளவர்களாகவும் மறு சாரார் சுதந்திர மற்றவர்களாகவும் வாழ்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட எந்த நாடும் முன்னேறுவதில்லை முழுச் சுதந்திரமுள்ள நாடுதான் முன்னேற்றமடையும் சுதந்திரம் தான் மனிதனின் ஜீவநாடி. காந்தி மகான் கூட சுதந்திரமாக வாழ விரும்பியதினால் தான் தன் உயிரையேமாய்த்துக்கொள்ள நேர்ந்தது நட்சத்திரங்கள் விழ நேர்ந்தாலும், மலைகள் பிளக்க நேரிட்டாலும், மண் தூள்களாக மாறினாலும், பகைவர்கள் உடலைக் கண்டதுண்டமாக வெட்டினாலும், தேகம் பூமியுடன் கலக்க நேர்ந்தாலும், [illegible] டோம் என்கிறார் கலியாண சுந்தரனார். அந்த நிலைகளும் பார்க்க வேண்டாமா?

மீன் கடலே எழுந்தாலும் விண்
சுடரே விழுந்தாலும்
மான் மலைகள் சாய்ந்தாலும்
மண் கம்பமானாலும்
ஊண் கொந்திக் கண்ட துண்டம்
ஒன்னவர்கள் செய்தாலும்
வான் மருவ நேர்ந்தாலும்
மறப்பதன்று சுதந்திரமே

என மிகவும் அழகாகப் பாடியுள்ளார். உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் வகையில் எவ்வளவு சிறப்புடன் மிளிர்கிறது இந்தச் செய்யுள். சுதந்திர உணர்ச்சியின்றியிருந்த மக்களை கவிஞர்களின் உருக்கமான புரட்சிப் பாடல்கள் தட்டியெழுப்பின. எல்லோரும் அடிமை வாழ்வை வெறுத்தனர். எல்லோரையும்போல் ஏன் நாமும் வாழக் கூடாது. என்ற எண்ணம் எல்லோர் உள்ளத்திலும் ஏற்பட்டுவிட்டது மக்கள் எல்லோரும் சுதந்திர தாகத்தினால் தத்தளித்தனர். இதைக் கண்ட கவிஞர்களினுள்ளம் களிப்பினால் பூரிப்படைந்ததில் வியப்பொன்றுமில்லை. மக்கள் சுதந்திரத்தை விரும்பியதைக் கண்ட கவிஞர் பாரதி சுதந்திரமடைந்துவிட்டோமென உள மிக பகிர்ந்து

ஆடுவோமே-பள்ளுப்
பாடுவோமே ஆனந்த சுதந்திரம்
அடைந்து விட்டோமென்று

மனம் மகிழ்ந்து பாடி ஆடினார். ஆகவே ஒவ்வொரு மனிதனும் சுதந்திர தாகமுடையவனாய் வாழ வேண்டும். அப்பொழுதுதான் அவனால் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும், மொழிக்கும் நன்மையுண்டு.

—"மலர்ச்சி மகள்"

வள்ளுவர் குரல்: 7

# கவலைக்கு மருந்து

கற்றவர் கல்லாதவர், பெரியவர் சிறியவர், செல்வர் வறியவர் முதலா யார் எத்திறத்தார்க்கும், ஒவ்வொரு வகையிலே மனக் கவலை இருந்துகொண்டேயிருக்கும். 'பாலுக்குச் சர்க்கரை இல்லாதவருக்கும், கூழுக்கு உப்பில்லாதவருக்கும்' கவலையே. ஒவ்வொருவருடைய கவலையும் ஒவ்வொரு வகையாக—ஒவ்வொரு அளவாக—இருக்கலாம்; ஆனால், கவலை கவலையே.

உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றையும் அளந்து நூல் செய்த வள்ளுவர், மனக் கவலையையும் மறக்கவில்லை. அக்கவலையை மாற்ற மாட்டாதவர் யாவர்? எப்படிப்பட்டவர் மாற்றுவர்? மருந்து என்ன? என்ற விபரங்களை எல்லாம்,

"தனக்குவமை இல்லாதான்
தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்னும் தமிழ்மறை(எ)க்குறளிலே கூறுகின்றார்.

'தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனித் தலைவன் இறைவன்; அவனது தாள்களே, மனக் கவலை நீக்கும் மருந்து. அத்தாள்களை இடைவிடாது நினைக்கின்றவர், மனக்கவலையை மாற்றுவர், நினைக்காதவர் மாற்ற மாட்டாது வருந்துவர்' என்பது கருத்து.

ஒப்பற்ற இறைவன் திருவடிகளை இடைவிடாது நினைப்பதன்மூலம், எமது மனத்தை அவன் திருவடிகளினால் நிறைத்துவிட்டால், அம்மனத்திலே கவலைக்குரிய எண்ணங்கள் நுழைவதற்கு இடமேது?

—பா. ஆறுமுகம்

# வளர்மதி புதிய மருமக்கள்

2700 ஒ. எம். எஸ். மன், மாவனல்ல.
2701 ப. அப்பாக்குட்டி, கல்முனை.
2702 செல்வி. பா. பங்கஜலீலா, கொழும்பு—9.
2703 த. தங்கமயில், கரவெட்டி.
2704 செல்வி எஸ். எம் ராஜேஸ்வரி, மட்டக்களப்பு
2705 க. சண்முகலிங்கம், வண்ணார்பண்ணை.
2706 ஆ. துரைராசா, மட்டக்களப்பு.
2707 கு. வின்சன், திருமலை.
2708 செல்வி. கு. இராஜேஸ்வரி, நிமிலைதீவு, புதூர்.
2709 அ. அருள் சோதி. கன்னாகம்.
2710 செல்வி சிவநேஸ்வரி பொன்னையா, சுன்னாகம்.
2711 இ. சிவராசா, பருத்தித்துறை.
2712 எம். அப்துல் றஹீம், இனிகாதேனை.
2713 இ. கனகசபாபதி, யாழ்ப்பாணம்.
2714 செல்வி ஜெ. ஜெயரஞ்சிதமலர் யாழ்ப்பாணம்.
2715 மு. கனகலிங்கம் காரைநகர்.
2716 இரா. சிவநேசன், கொக்குவில் கிழக்கு.
2717 செல்வி து. தையல்நாயகி, கொக்குவில் கிழக்கு.
2718 இ. முருகையா, திருமலை
2719 மா. இந்திராணி, சாவகச்சேரி.
2720 செல்வி சகுந்தலாதேவி கன்னாகம்.
2721 வி. அருனேந்திரன், ஆரப்பற்றை
2722 க. பாலசந்திரன், கொக்குவில் கிழக்கு.
2723 க. பவேந்திரநாதன், சுன்னாகம்.
2724 வே கங்காதரன், கைதடி
2725 செல்வி கண்ணகாதேவி வேலுப்பிள்ளை கைதடி.
2726 த. சிதம்பரநாதன், பருத்தித்துறை.
2727 ராமையா, தெஹியோவிற்ற.
2728 செல்வி விமலா சுதிரேசு, ஊர்காவற்றுறை.

# தெரிந்து கொள்ளுங்கள்

1. பண்டைத் தமிழகத்தில் போர், கல்வி, கேள்வி, கொடைகளில் வென்றோர் அணிந்த மாலை எது? வாகை.

2. சண்டிகார் எந்த நாட்டின் தலைநகரம்? பஞ்சாப்.

3 ஐரோப்பியரால் ஞானப்பிதா என்று வழங்கப்பெறும் பெரியார் யார்? அரிஸ்டாட்டில்.

4. புதிதாகப் பிறந்த பிள்ளை ஒருநாளைக்கு எத்தனை மணி நேரம் தூங்கும்? சுமார் 22 மணி நேரம்.

5. இருதயம் நாளொன்றுக்கு எத்தனை தரம் துடிக்கின்றது? 103680 தரம்.

6. பிளாட்டினம், தங்கம் இவ்விரண்டினுட் கனமுள்ளது எது? பிளாட்டினம்.

7. ஐம்பொன் எனப்படுபவை எவை? தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம்.

8. குண்டலகேசியின் ஆசிரியர் யார்? நாகுத்தனார்.

9. தக்கயாகப் பரணி யாரால் பாடப்பட்டது? ஒட்டக்கூத்தர்.

10. கம்பன் பிறந்த ஊர் எது? தேரெழுந்தூர்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்.........................................

பாடசாலை.........................................

விலாசம்.........................................

.........................................

.................... ....................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### சினன்வாடியில் அன்ரன் முத்துக்குமாருக்கு உபசாரம்

இலங்கை இராணுவத்தின் முன்னுள் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் முத்துக்குமாரு சினன்வாடியில் உள்ள இராணுவ நிலையத்திற்கு அணிமையில் விஜயம் செய்து, தம்முடன் இவ்வளவு காலமும் இராணுவ வீரர்கள் ஒத்துழைத்ததற்கு நன்றி தெரிவித்ததுடன் மட்டுமல்ல, இராணுவ வீரர்கள் தேச நலனில் கண்ணும்கருத்துமாய் இருக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டார். சினன்வாடியில் உள்ள இராணுவப் பிரிவுத் தளபதி விக்கிரமசூரியா தளபதியவர்களை வரவேற்று உபசரித்தார்.

தளபதி அன்ரன் முத்துக்குமாரு அடுத்த வருடம் தொடக்கம் பாகிஸ்தானில் ஹைகொமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவர், இலங்கையின் பலபாகங்களிலுள்ள இராணுவ நிலையங்களுக்கு விஜயம் செய்து வருகிருர்.

### பழைய மாணவர் சங்கம்

வாழைச்சேனை அரசினர் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க 1-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 27-12-59-ல் சங்கத் தலைவர் செல்வன். வி. இளையதம்பி தலைமையில் கூடியது. தலைவர் தமது தலைமையுரையில் சங்கத்தின் நோக்கங்களையும், சேவைகளையும், பலன்களையும் எடுத்துரைத்தார்.

செயலாளர் கடந்த கூட்ட அறிக்கையையும் வருடாந்த அறிக்கையையும் வாசித்துச் சமர்ப்பித்தார் பொருளாளர் கணக்கறிக்கையைச் சமர்ப்பித்த பின் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: செல்வன்: வி. இளையதம்பி, உப தலைவர்: செல்வி. க. அழகம்மா, இணைச் செயலாளர்கள்: செல்வன். சீ. சின்னத்தம்பி, செல்வன். பெ. புண்ணியமூர்த்தி, பொருளாளர்: செல்வன். வே. யோகனசுந்தரம், கணக்குப் பார்வையாளர்கள்: செல்வன். ஆ. நடராசா, செல்வன் மு. தாமோதரம்பிள்ளை.

நிர்வாக சபை தெரிவு முடிவில் தேனீர் விருந்துக்குப் பின் அடுத்த வருடச் செயல் திட்டங்கள் ஆலோசிக்கப்பட்டன. செயலாளர் நன்றியுரையின் பின் தலைவர் முடிவுரையுடன் கலைந்தது.

### இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம்

யாழ்ப்பாணம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம். 20-12-59-ல் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. பல ஊர்களிலிருந்தும் அங்கத்தவர்கள் சமுகமளித்திருந்தார்கள். சங்கத்தலைவர் திரு. ச. இரத்தினகோபால் பேசும் போது, நமது சமூகம் பொருளாதாரம், இசைக் கலை இவ் விரண்டிலும் பாராட்டக் கூடிய முறையில் முன்னேற்றமடைய வேண்டுமானுல் இறுதிவரை பாடுபட்டாற்ருன் முடியும். அதற்கு சங்கத் தலைவர்களாகிய தங்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை என்றும் கேட்டுக் கொண்டார். பின்னர் சங்கக் காரிய தரிசி திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் தமது குறிப்புரையில் இசைப் பள்ளிக்கூடம் அமைக்கவேண்டியதன் அவசியம் பற்றி மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினர். தமிழ்ப் பெருங்குடி மக்களில் இசைத் தொண்டு புரியப் பிறந்த நாம் எமது இலட்சியங்களில் ஒன்ருகிய இசைக் கலை வளர்ப்பதற்கேற்ற பள்ளிக்கூடம் அமைத்தலில் ஒன்றுபட்ட தளராத ஒத்துழைப்புடன் செயலாற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் கீழ் கண்ட தீர்மானங்களும் வேறு சில தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேறின:—

(1) நிரந்தரஸ்தாபனங்களின் (கோவில்களில்) இசைத் தொழில் செய்யும் இசைத் தொழிலாளருக்குக் கட்டுப்பாடான சம்பளம் பெற வசதி செய்ய வேண்டிய நடவடிக்கை எடுப்பது.

(2) சித்திரை மாதத்தில் இசைப் பாடசாலை மண்டபம் அமைப்பதற்கு ஆரம்பிப்பது.

(3) சென்ற ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து சங்க அங்கத்தவர்கள் இலங்கைக்கு அழைப்பித்த இசைக் கலைஞர்களுக்குக் கட்டப்பட்ட பிணைப் பணத்தை யாழ்ப்பாணம் கச்சேரியில் எடுப்பதற்கு குடியேற்ற வெளியேற்ற அதிகாரி காரியாலயம் அநுமதி தராததையிட்டு சங்க அங்கத்தவர்கள் மிகுந்த கவலை தெரிவிப்பதோடு உடனடியாகப் பணம் பெறுவதற்கு அநுமதி தரும்படி குடியேற்ற வெளியேற்ற அதிகாரி காரியாலயத்துக்கு எழுதிக் கேட்டுக் கொள்வது.

### கந்தரோடை சன சமூக நூல் நிலையம்

கந்தரோடை சன சமூக நூல் நிலையத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழா கடந்த 15-12-59-ல் சன சமூக நிலைய மைதானத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. சி. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிலையத்தின் போஷகரான டாக்டர் சுப்ரமனியத்தின் திரு உருவப் படத்தை யாழ் நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா திறந்து வைத்துப் பேசினுர். திரு. ஞானசம்பந்த மூர்த்தி "கிராம முன்னேற்றமும் மாணவர்களும்" என்பது பற்றிப் பேசினுர்.

பண்டிதர் திருநாவுக்கரசு, ஆசிரியர் வ. பொன்னம்பலம், வட்டுக்கோட்டை முன்னுள் எம். பி திரு. ஏ. அமிர்தலிங்கம் முதலியோரும் பேசினர்.

கடைசியாக தலைவர் முடிவுரையில் டாக்டர் சுப்ரமணியத்தில் அளப்பரிய சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்.

### அ. இ. அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த 20-12-59-ல் சங்க அலுவலகத்தில் தலைவர் திரு மூ வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது

இலங்கை பூராவிலுமுள்ள அகில இலங்கை அருந்ததியர் சங்க கிளைகளில் சில கிளைகள் செயலற்றுக் கிடப்பதால், இவைகளுக்குப் புத்துயிரளித்து இயங்க வைப்பதென்றும், இப் பணியினைச் செய்ய தலைவர் திரு மூ வேலாயுதம் தலைமையில் ஒரு தூது கோஷ்டியொன்றை இலங்கை முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்ய அனுப்புவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

# அன்புச் சுமை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசித்தறிந்தேன். வளமான கற்பனைகள்; கூசாக் கவர்ச்சி நடை; குமுறும் கதையமைப்பு. அற்புதம் எல்லாம்! அடியேனின் பாராட்டு"

"அற்புதமா? நன்றி. ஆனுல் இதை நீங்கள் ஆசிரியர் முன்பே அறைந்தால் மிக மகிழ்வார்."

"ஆசிரியர்!...நீங்கள்?..."

"அதோ அவரே வந்துவிட்டார்"

"............?......!......"

"வணக்கம் இளங்கோ!"

"வணக்கம்......"

"அமருங்கள்......இணக்கம் தான் பாவை. இவர்தான் மருதிக்கு அத்தான்?......மிக நன்று. அன்புக்கு நல் ஆசி. சித்தம் கலந்தால் தெய்வ நிலைதான். இளங்கோ! இவள் தான் என் இன்ப மனையாள். பெயர் பாவை. அவள் இல்லை உங்கள் அன்பு மருதிக்குத் தெரிந்தவள் என்னைத் தெரியுமோ? ஏன் திகைப்பு? உரிமைப் பெயர் 'பரணன்' உள்ளத்தில் பட்டபடி மாலதி என்று வைத்தேன் புனைபெயரை"

"மாலதி!--நீங்கள்?......வருகின்றேன்..."

"நில்லுங்கள். இளங்கோ! இளங்கோ! இதோ!..."

மார்பகத்தே
வதன மலர்!

அத்தானைக் கண்டதும் எழுந்து நின்ருள் அந்த மயில். அவளின் கண்ணில் முத்துக்கள் உருண்டுவர முகம் தாழ்த்தி முறுவலித்தாள். முல்லை மொட்டு செத்துத்தான் விட்டதுவோ என்றெண்ணிச் சிரிப்பதற்கு முயலு முன்பே பொத்தென்று இரு விழியும் குளமாக உணர்விழந்து பொருமிவிட்டான்.

பட்டான தளிர்க் கரத்தைப் பற்றி, அதில் முகம் புதைத்து இதய ஊற்றைக் கொட்டிவிட்டுக் குழந்தையென அவள் மதியை அண்ணுந்து குறிப்பு வைத்தான். வட்டமிட்ட விழி உமிழ்ந்த தாபத்தால் நெஞ்சுருகி வாஞ்சை பொங்க, கட்டழகி மருதி, அவன் மார்பகத்தே வதனமலர் கவிழ்த்து விட்டாள்.

●

### அமுதப் பொங்கல்!

அத்தான் முகத்தில் கன்ன சித்திரம் தீட்டி, அதிலே அடுப்பமைத்து-தூய சித்தக் கலத்திலே வித்தகத்தைப்பொங்கல் செய்து முடித்துவிட்டாள்.

செய்வச் சிலையாய் மருதி நின்ருள். அவன் சித்திரமாகி விட்டான்—இந்த வையம் மறந்து உளம் ஒன்றிவிட்டார். இன்ப வானிற் பவனி வந்தார்.

"தென்றல் குழம்பில்
நிலவைக் குழைத்தொரு
சிங்காரத் தேர்
சமைப்போம்-அதில்
இன்றே புவனம் அனைத்தும்
சுற்றும்
தேறற் கொண்ணுந்
திடுவோம்"

"அன்புச் சுமையை இறக்கி
வைக்க ஒரு
ஆனந்தக் காவமைப்போம்
புனல்
ஆரந் தழுவும் வயற்கரையில்
விளை
யாடிக் களித்திடுவோம்"

# பூனைக்கு இரவில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று அழைக்கப்படும் இத்துணிக்கைகள் மனிதனுக்கு அரும்பெரும் சேவை செய்து வருகின்றன. கம்பி மூலமாக மின்வலு நிலயத்திலிருந்து எங்கள் உபயோகத்துக்கு மின் கொண்டுவந்து தருவதற்கும் ரேடியோவுக்குக் காரணமாகவும், கணக்கிடும் மின் கருவிகளை ஆட்டி வைக்கவும் இன்னும் பல செயல்களைச் செய்யவும் இவ் விலெக்றன்கள் உதவுகின்றன. தற்பொழுது நிகழும் யுகத்தை இலக்றன் யுகம் என்று கூறினுல் அது மிகையாகாது.

### இலெக்றன் ஆராய்ச்சியும் எக்ஸ் கதிரும்

இலெக்றன் ஆராய்ச்சி இந் நிலையில் இருக்கும் காலத்தில், அதாவது 1895 இல், ருென்ஜன் வூட்ஸ் பேக் மாநகரத்திலுள்ள பல்கலைக் கழகத்தின் பௌதிகப் பகுதிக்குத் தலைவராகவிருந்தார். இவரும் மற்ற விஞ்ஞானிகள் போல் இலெக்றன் ஆராய்ச்சியால் தூண்டப்பட்டு இத் துறையில் இறங்கினுர். இறங்கி, நாம் முன் கூறிய பச்சை நிறச் சுவர் பிரகாசத்தை ஆராயவும் தொடங்கினுர். இம் முயற்சியில் ஈடுபடும்பொழுது எதிர்பாராத வழியில் நாம் ருென்ஜன் கதிர் என்றும் எக்ஸ் கதிர் என்றும் அழைக்கும் கதிர்களைக் கண்டுபிடித்தார்.

### சுவையான நிகழ்ச்சி

இலெக்றன் பரிசோதனைக் குழாய்க்குள் மின்னோட்டத்தைச் செலுத்தும் பொழுது அருகிலிருந்த ஓர் இரசாயன உப்பால் பூசப்பட்ட திரையொன்று பிரகாசிக்கத் தொடங்கிற்று. சாதாரண மனிதர்கள் இப்பிரகாசத்தை கவனித்திருக்கமாட்டார்கள். கவனித்திருந்தாலும் அதற்கு மதிப்பு கொடுத்திருக்க மாட்டார்கள். ஆனுல் ருென்ஜன் ஒரு விஞ்ஞானியல்லவா? பட்சபாதமில்லாமல், விருப்பு வெறுப்பு இல்லாமல் தோற்றப்பாடுகளை சிறிதாக விருந்தபோதிலும் அவற்றை கூர்ந்து ஆராயும் கடமை விஞ்ஞானியுடையது அல்லவா?

### எக்ஸ் கதிர்

ருென்ஜன் இவ்வாராய்ச்சியில் இறங்கினுர். படிப்படியாகப் பரிசோதித்து வந்தார். திரையின் பிரகாசம் இலெக்றன் குழாய் மின் செலுத்தும் பொழுது தான் தோன்றியது. ஆகவே இவ்விரண்டுக்கும் சம்பந்தம் உண்டு. பின்பு இப் பிரகாசத்தின் காரணம் குழாயிலிருந்தொழிய மின் சுற்றுவின் வேறு உறுப்புக்களிலிருந்து வெளியேறவில்லையென்று மறை திரை மூலமாக ஐயந்திர விளக்கியுள்ளார். காரணம் தெரியாதபடியால் அதை எக்ஸ் கதிர் என்று அழைத்தார். ஆங்கிலக் கணித முறையில் எக்ஸ் (X) என்ருல் தெரியாதது என்று பொருள்.

### எக்ஸ் கதிரின் சக்தி

மேலும் இக் கதிர்கள் திடப்பொருள்களை ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்தன. இதையும் ருென்ஜன் ஆராய்ந்தார். இவ் வாராய்ச்சியின் விளைவாக ருென்ஜனும் வேறு சில விஞ்ஞானிகளும் வந்த முடிபு என்னவென்ருல், எதிர் மின்வாயிலிருந்து வெளி வரும் இலெக்றென்கள் திடவப் பொருளொன்றின் மேல், சிறப்பாக உபயோகம் ஒன்றின்மேல், மோதும்பொழுது, எக்ஸ் கதிர்கள் உண்டாக்கப்படுகின்றன. எக்ஸ் கதிர்கள் ஒரு ஒளிவகை-ஒளி நிறமாலையில் ஊதா கடந்த ஒளிக்கப்பால் இக் கதிர்கள் இடம் பெறுகின்றன. திடவப் பொருள்களின் அடர்த்தியை ஏற்றவாறு அதாவது கடுதாசியை அல்லது மரப்பலகையை இலகுவாக ஆனுல் எழும்பை அல்லது உலோகங்களை மிக மெலிவாக, ஊடுருவிச் செல்லும் சக்தி உடையது இக் கதிர்கள். கடைசியாக சாதாரண ஒளி போல் எக்ஸ் கதிர்களும் ஒளிபடத்தட்டுக்களைத் தாக்கும் தன்மையுடையன.

எக்ஸ் கதிர்களின் கண்டுபிடிப்பால் விஞ்ஞானத்துறையில் மாத்திரமல்ல மருத்துவத்துறையிலும் கூட பல புரட்சிக்கரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இங்கே மருத்துவம் அடைந்த முன்னேற்றத்தைச் சுருக்கிக் கூறிவிடுவோம்.

### பயன்

எக்ஸ் கதிர்களின் வேற்றுமை ஊடுருவுதல் அறுவை மருத்துவத்தில் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. மனிதவுடம்பின் தசை எக்ஸ் கதிர்களை உறிஞ்சமாட்டாது; ஆனுல் எலும்போ, அல்லது [illegible] அதன் அடர்த்தி காரணமாக எக்ஸ் கதிர்களை இலகுவாக நுழையவிட மாட்டாது. ஆகவே மனிதனொருவனின் உடம்பிலுள் ஓர் எழும்பு முறிந்திருந்தால் அல்லது ஒரு ஊசியோ வேறென் பிறப்பொருளொன்று புகுந்திருந்தால், அவன் உடலுக்குளால் எக்ஸ் கதிர்களைச் செலுத்தி படம் பிடித்தால் அந்த முறிவு அல்லது அந்த புறப்பொருள் எங்கு இருக்கிறது என்று இலகுவாக அறிந்து கொள்ளலாம் என்பதாகும்; இதே வழியில் மனிதனொருவனின் நோய் வாய்ப் பட்ட உள்ளுறுப்புக்கள் யாதென்றும் புரிந்துகொள்ளலாம்; புரிந்து கொண்டு சிகிச்சையைத் தொடங்கலாம். இக் காரணமாக எக்ஸ் கதிர்கள் எங்கள் பார்வையை விரிவாக்கியிருக்கின்றன என்று கூறலாம்.

### அருஞ் சேவை

இது மட்டுமல்ல எக்ஸ் கதிர்களுக்குப் பிணிதீர்க்கும் தன்மையும் உண்டு, புற்றுநோய் ஓர் எடுத்துக் காட்டு. புற்று நோயால் தாக்கப்பட்ட உறுப்பொன்றை காலதாமதமின்றி எக்ஸ் கதிர்களால் விளக்கினுல் இந்நோய் தீர்ந்து போய்விடும். எண்ணிலடங்காத மக்கள் இந்நோயின் கொடுமையிலிருந்தும் மரணத்திலிருந்தும் தப்பியிருக்கிருர்கள். இச் செய்திகளிலிருந்து ருென்ஜனின் கண்டுபிடிப்பின் மகிமையையும் அக் கண்டுபிடிப்பு மனிதனுக்கு செய்துவரும் அருஞ்சேவையையும் அறியலாம்.

(உபயம்: இலங்கை வானொலி)

வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கலை வெகு விமரிசையாகக் கொண்டாட

## 13-ம் தேதி புதன்கிழமை துவக்கம்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

**விஜயா** (மட்டக்களப்பு) **வெம்பிளி** (கண்டி) **மொடர்ன்** (பதுளை) **ஸ்ரீ கிருஷ்ண** (திருகோணமலை)

**தீவொளி** (நுவரெலியா) **விஜிதா** (மஸ்கெலியா) **சென்ட்ரல்** (மாத்தளை) **ஜெமினி** (பொகவந்தலாவை)

ஆகிய தியேட்டர்களில்



நடிகர் திலகம்

## சிவாஜி கணேசன்,

பாலையா, சாவித்திரி,
தங்கவேலு, பி. கண்ணாம்பா,
சந்திரபாபு, ஈ. வி. சரோஜா,
சகாதேவன், எம். என். ராஜம்,
ஓ. ஏ. கே. தேவர், மோகன



நடித்த

# காத்தவராயன்



சிவ பார்வதி நடனம்:

**கோபி கிருஷ்ண**

**கமலா லக்ஷ்மணன்**

பின்னணி:

சௌந்தரராஜன், ஜெயராமன்,
கண்டசாலா, எஸ். வி. கிருஷ்ணன்,
பி. லீலா, ஜிக்கி, சுசீலா, ஏ. பி. கோமளா,
ரத்னமாலா, ஜமுனாராணி.



டைரக்ஷன்: **டி. ஆர். ராமண்ணா**

பாடல்கள்: **தஞ்சைராமையாதாஸ்**

சங்கீதம்: **ஜி. ராமனாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible] நாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜனவரி மாதம் 10-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.